தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

ஓகஸ்ட் 1998




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# அக்கறைப் பூக்கள்

வணக்கத்திற்குரிய எரிமலை ஆசிரியருக்கு,

நீங்கள் அனுப்பிவைத்த மேமாத எரிமலை இதழ் கிடைக்கப்பெற்றேன். வானொலியோ பத்திரிகையோ தராத தமிழீழ விடுதலைப்போராட்டம் சம்பந்தமான செய்திகளை எரிமலை தாங்கிவருவது எமக்கு மிக்க மகிழ்ச்சியே.

தமிழ் நாட்டில் ஒரு நாளிற்கு எத்தனையோ பத்திரிகைகள் வெளிவருகின்றன. வாரத்திற்கு, மாதத்திற்கு எத்தனையோ சஞ்சிகைகள் வெளிவருகின்றன. எனினும் மொழியால் உணர்வால் பிணைந்துள்ள தமிழீழ உறவுகளின் செய்திகளை தாய்த்தமிழ் நாட்டிலே அறிந்துகொள்ளமுடியாமல் இருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயம் மாத்திரமல்ல, வெட்கப்படவேண்டிய விடயமும் கூட. எமது உடன் பிறப்புக்கள் தமிழீழத்திலே படும் அவலங்களை தாய்த் தமிழ் நாட்டிலே உள்ள எந்தவொரு பத்திரிகையிலும், சஞ்சிகையிலும் வாசிக்க முடியாததையிட்டு வெட்கித் தலை குனிகிறேன்.

தமிழ்நாட்டிலே தமிழ்த் தேசியம் காப்பாற்றப்படாவிட்டாலும் தமிழீழத்திலிருந்து தமிழ்த் தேசியம் மீளவும் உருவாவதை எவராலும் தடுக்கமுடியாது. இதற்கு எமது தமிழினத்தின் தலைவர் திரு.வே. பிரபாகரன் அவர்களுக்கு எனது கோடி வணக்கங்கள்.

எரிமலை சற்றுத் தாமதமாகக் கிடைத்தாலும் இலங்கைத் தீவில் தமிழர்கள் படும் துயரத்தை வெளிச்சத்துக்கு கொண்டுவருவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

உங்கள்பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

நன்றி

கோ. காளிதாசன்
பல்லாவாரம்
சென்னை.
இந்தியா

★★★

அன்புடன் எரிமலை ஆசிரியர் குழுவிற்கு;

வணக்கம்.

எரிமலை இதழ் வாசகன் அன்புடன் எழுதிக்கொள்வது. தவறாது எரிமலை இதழை படித்துவரும் நான் சென்ற மாதம் எனது இருப்பிடத்தைவிட்டு புது இருப்பிடத்திற்கு சென்றுள்ளேன். தற்போது நான் வசிக்கும் விலாசம் இத்துடன் இணைத்துள்ளேன். தயவு செய்து இனி தாங்கள் எனது புதிய விலாசத்துக்கு எரிமலை இதழை அனுப்பிவைக்கவும்.

தற்போது நான் வசிக்கும் கிராமத்தில் பலர் ஈழத்தில் நடைபெறும் செய்திகளை அறிய விரும்புகிறார்கள். தங்களால் முடிந்தால் இன்னும் நான்கு எரிமலை இதழ்கள் அனுப்பிவைத்தால் என்மூலமாக அவர்களுக்கு கிடைக்கச்செய்வேன்.

ஆகவே தயவுசெய்து முடியுமானால் அடுத்த இதழ் அனுப்பும் பொழுது சேர்த்து அனுப்பிவைக்கவும்.

நன்றி

உங்கள் வாசகன்
அன்பன்
மாணிக்கம்
சேத்துப்பட்டி
தமிழ்நாடு

★★★

மதிப்பிற்குரிய எரிமலை ஆசிரியர் அவர்களுக்கு,

நான் நீண்டகாலமாக எரிமலை இதழைப் படித்து வருபவன். கடந்த சில மாதங்களாக எரிமலை தாமதமாகவே வருகிறது. மிகவும் ஆர்வத்துடன் எமது தாயக நிகழ்வுகளை எரிமலையில் செய்தியாகப் படித்து வரும் எனக்கு இக்கால தாமதம் ஒரு சோர்வையே ஏற்படுத்துகிறது. பல இன்னல்களின் மத்தியிலேயே எரிமலையை உருவாக்கி வருகின்றீர்கள் என்பதைப் புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. காலதாமதமாக வந்தாலும் தமிழீழத்தில் நடப்பவற்றை அப்படியே வெளிக்கொண்டு வரும் உங்கள் முயற்சிக்கு எனது உள்ளம்கனிந்த பாராட்டுகள்.

இனி வரும் காலங்களில் எரிமலையை உடனுக்குடன் வாசகர்களுக்கு சேர்ப்பிக்க ஆவனசெய்யுமாறு தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி

சோ.ராஜேஸ்வரி
ஜேர்மனி

★★★

எரிமலை ஆசிரியர் அவர்களுக்கு,
பலகோடி வணக்கங்கள்.

தமிழின விடுதலைக்காக பிரான்சிலிருந்து குரல்கொடுத்துவரும் எரிமலை சஞ்சிகையை சிலகாலமாக தாமதமாகவே படிக்கமுடிகிறது. இதையிட்டு மனம் வருந்தினாலும் தங்கள் பணிக்கு எனது மனப்பூர்வமான ஆதரவும் ஆசியும் உண்டு.

எரிமலையில் கட்டுரைக்கேற்றவாறு புகைப்படங்களையும் பெற்று சஞ்சிகையை வெளியிடுகின்றீர்களே, இது மகத்தான பணி ஐயா! பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்தும் ஈழத்தின் நிகழ்வுகளை படம்பிடித்து இப்பாரிற்கு செய்தியாக கொடுத்துவருகிறீர்களே, இம் முயற்சி அருமையிலும் அருமை ஐயா! சந்திரிகாவின் கொடுங்கோலாட்சி இனியும் தொடராதையா!

உங்கள் பணி தொடரட்டும்
மலரட்டும் தமிழீழம்

சி.பரஞ்சோதி
மலேசியா



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உள்ளே...




தோற்கடிக்கப்படும் நவீன சிங்கள இனவாதம்

பக்கம்- 04





ஐ.நா வை நோக்கி மாபெரும் அமைதிப் பேரணி

பக்கம்- 08





அமெரிக்கா-சிறீலங்கா நெருக்கம் தென்னாசியாவில் புதிய சமன்பாடு

பக்கம்- 10





துவண்டுபோன கைமுனுக்களும் சீறிப்பாய மறுக்கும் சிங்கங்களும்

பக்கம்- 14





பல முனைகளில் தொடர் தாக்குதல் ஜயசிக்குறுவின் புதிய தந்திரோபாயம்

பக்கம்- 19





அரசாங்கம் மரணிக்கும் முன் இராணுவத்தைப் பலியிட முனைகிறது

பக்கம்- 16





தேர்தல்-அவசரகாலச் சட்டம்-சந்திரிகா

பக்கம்- 29





யுத்தம் வெற்றி நோக்கிச் செல்வதாக அரசால் எவ்வாறு கூறமுடியும்

பக்கம்- 22

- ★ கூடைக்குள் போட்டு மூடினால் சேவல் கூவாது போகுமா? பக்கம்- 26
- ★ உலகம் காண்பதற்கு மறுக்கும் இலங்கையில் நடக்கும் இன அழிப்பு பக்கம்- 30
- ★ அரசின் உள்நாட்டு அராஜகத்தினால் தோல்விகண்ட வெளியுறவுக் கொள்கை பக்கம்- 32
- ★ சிங்கள அரசின் இனப்பிரச்சினைத் தீர்வு விழுந்துவிட்டது பொதிக்கான கடைசித்திரை பக்கம்- 36
- ★ விடுதலைக்கான வரலாற்று வாய்ப்பு பக்கம்- 38
- ★ அதிகரிக்கும் வரிகளினால் எகிறிச் செல்லும் விலைகள் பக்கம்- 40
- ★ சிறீலங்கா அரசியல் அரங்கில் குத்துவெட்டுக்களும் குழிபறிப்புக்களும் பக்கம்- 42
- ★ சிறுகதை - பயம் இல்லை பக்கம்- 44
- ★ இலக்கியம் - யதார்த்தவாதம் என்றால் என்ன? பக்கம்- 46
- ★ சம்புவெளி ஓர் இயற்கை வனப்பு பக்கம்- 48




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ஒரு விடுதலை இயக்கம் தனித்து நின்று போராடி விடுதலையை வென்றெடுத்ததாக வரலாறு இல்லை. ஒரு விடுதலை இயக்கத்தின் பின்னால் மக்கள் சக்தி அணிதிரண்டு எழுச்சிகொள்ளும் பொழுதுதான் அது மக்கள் போராட்டமாக– தேசியப் போராட்டமாக முழுமையும் முதிர்ச்சியும் பெறுகின்றது; அப்பொழுதுதான் விடுதலையும் சாத்தியமாகின்றது.

எமது மக்கள் போற்றப்படவேண்டியவர்கள்; கௌரவிக்கப்படவேண்டியவர்கள். தேசிய விடுதலைப் போராட்டத்தில் எமது மக்களின் பங்களிப்பு சாதாரணமானதல்ல; அவர்களது பங்களிப்பு அளப்பரியது என்றுதான் சொல்வேன். இலைமறைகாயாக இருந்து விடுதலைப் போராட்டத்திற்குத் தோள்கொடுத்துவரும் எமது எண்ணற்ற ஆதரவாளர்களையும் – அனுதாபிகளையும் மனவுறுதி படைத்த மாமனிதர்கள் என்றுதான் அழைக்கவேண்டும்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

★

பதினேழாம் ஆண்டு

ஒகஸ்ட் 1998

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

*C/O T.C.C-France,*

*341, Rue des Pyrenees,*

*75020 Paris.*

*Tel: 01 - 43 58 11 42*

# நவ பேரினவாதத்தின் நான்கு ஆண்டுகள்

சிங்கள அரசு தனது நேரடி இராணுவச் செலவீனத்தை மேலும் எட்டு பில்லியன் ரூபாய்களால் அதிகரித்துள்ளது. இதன் மூலம் சிங்களத்தின் உத்தியோகபூர்வ இராணுவச் செலவு 5400 கோடியாக உயர்ந்துள்ளது. ஆனால் உண்மையான இராணுவச் செலவீனம் இதனிலும் மிக அதிகமானது, பூதாகரமானது.

இதுதான் சந்திரிகா தலைமையில் நான்கு வருடங்களைப் பூர்த்தி செய்யும் நவ பேரினவாதத்தின் ஆட்சிக்கால சாதனையாகும். போர் இயந்திரத்தை உயிர்ப்பூட்ட அனைத்து சிங்களத்தின் வளங்களையும் சந்திரிகா அரசு பயன்படுத்தியது. அரசியல் – ராஜதந்திர விடயங்களை போரை நியாயப்படுத்தும் வெறும் சுலோகங்களாக சிறுமைப்படுத்தியது. தமிழர் தாயகத்தின் ஒவ்வொரு அங்குல நிலத்திலும் சிங்களத்தின் வெடிபொருட்களை விதைக்க வேண்டும் என்பது நான்கு வருடங்களில் சிங்களத்தின் மூச்சாய் நின்ற இலட்சியமாகும்.

இந்த நான்கு ஆண்டுகளிலும் தமிழர்கள் பாரிய சவால்களை எதிர்கொண்டனர். திட்டமிடப்பட்ட சிங்கள பரப்புரை இயந்திரங்களின் அனைத்துலக ரீதியான இராஜதந்திர தில்லுமுல்லுகள் தமிழர்களை ஓரங்கட்ட முயன்றன. இன முரண்பாட்டை சாதுரியமாக அங்கீகரிக்காது தமிழ் – சிங்கள தேசிய முரண்பாட்டை வெறும் அதிகாரப் பரவலாக்கத்திற்கான வேண்டுகோளாகக் கருதி வகுக்கப்பட்ட "தீர்வுப் பொதி" தமிழர்களின் நியாயபூர்வமான அரசியல் இலட்சியத்தை ஓரங்கட்ட முற்பட்டது. இவற்றின் மறைவில் சாட்சியங்களற்ற இனப் படுகொலை ஒன்றை போர் ஊடாக நடாத்தி முடிக்க சந்திரிகா முற்பட்டார்.

வன்னி போர் முனை சந்திரிகாவின் நான்கு வருட ஆட்சியையும் அதன் இராணுவ– அரசியல் திட்டங்களையும் இழுத்து நிறுத்தி விட்டது. போர்க்களத்தில் சிங்கள இராணுவத்தின் உச்சபலம் மழுங்கடிக்கப்பட்டது. போரை தாங்கி நின்ற தீர்வுப் பொதி காலஎல்லை நீடிக்கப்பட்டு ஈற்றில் மரபு வழி சிங்கள இனவாதத்தினாலேயே தோற்கடிக்கப்பட்டுவிட்டது.

உலக அரங்கில் சந்திரிகா மற்றுமொரு பாசிச இனவாதி என்பதை நிரூபிக்கும் உண்மையை தமிழர்கள் ஆதாரங்களுடன் வெளியிட்டு வருகின்றனர்.

இவ்வாறு செய்தித் தணிக்கை – அவசரகாலச் சட்டம் – தேர்தல் ஒத்திவைப்பு என்பனமூலம் ஆட்சியை நடத்தும் நோயாளியாக இந்த நவ பேரினவாத அரசு சீர்குலைந்துள்ளது.

இதன் மறுபுறம் "நாம்" முன்னிலும் பலமாய் – உறுதியுடன் வளர்ச்சிகண்டு போரை வெல்லும் சாத்தியங்களூடாக நடைபயின்று வருகின்றோம்.

எமது தமிழர்களின் எதிர்காலம் இந்த அற்புதமான வரலாற்று மாற்றத்தை பலப்படுத்துவதில்தான் தங்கியுள்ளது. விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டால் தமிழர்களின் வரலாறு தோற்கடிக்கப்படும் என்ற உண்மையை நான்கு வருட சந்திரிகாவின் ஆட்சி அனுபவங்களைக் கொண்டு ஊகிப்பது சிரமமானதல்ல.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தோற்கடிக்கப்படும் நவீன சிங்கள இனவாதம்

## சந்திரிகா அரசின் நான்கு வருட ஆட்சிபற்றிய ஆய்வு

உலகம் பூராவும் அந்த கொடிய கறுப்பு ஜூலை இனப்படு கொலைகளை தமிழர்கள் உணர்வு பூர்வமான பதிவுகளுடன் அனுஷ்டிக்கையில் சிங்கள இனவாத அமைப்பின் தலைவி ஜனாதிபதி சந்திரிகா மீரிகமவில் இடம்பெற்ற சிங்கள மக்களுக்கான பிரச்சாரக் கூட்டமொன்றில் "போர் என்றால் போர்" என மீளவொரு போர் வெறிப் பிரகடனத்தை விடுத்துள்ளார். தமது தேசத்தின் பொருளாதாரத்தில் 35 வீதம் செலவிட்டு நவீனரக ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்து தமிழர்கள் மீது தாம் போர் தொடுத்ததை பெருமிதமாக அக்கூட்டத்தில் கூறியிருந்தார்.



சிங்கள இனவாத அமைப்பானது இலங்கைத்தீவின் இரு தேசங்களும் முழுமையாகப் பிரிந்து இறையான்மையுடைய இரு நாடுகளாக வாழப் பழகிக் கொண்டால் அன்றி பிற வழிகளினால் தோற்கடிக்கப்பட முடியாதது என்பதை சந்திரிகாவின் மீரிகம பிரகடனம் மீள உறுதிப் படுத்துகின்றது.

இதன் அடிப்படையிலான தீர்வுக்கான சாத்தியங்களானது போரின் இராணுவ சமநிலையையும் அரசியல்– உலக சூழ்நிலைகளையும் பொறுத்துத்தான் தீர்மானிக்கப்படக் கூடியதாகும். சிங்கள இனவாத அமைப்பானது இத் தீர்வுக்கான சாத்தியங்களைக் கருத்தில் எடுத்து சாத்தியமான நீதியான தீர்வை நிராகரிக்கும் பலத்தை தன்னகத்தே சேர்க்க முற்படுகிறது.

இனவாத அமைப்பைப் பொறுத்த வரை அதனது இருப்புக்கான பிரதான பலம் அதனது இராணுவமே ஆகும். இனவெறி ஊட்டப்பட்ட பாரிய இராணுவ இயந்திரத்தை அது இத் தேவைக்காகப் பாவிக்கின்றது.

மறுபுறம் தன் பலவீனமான பொருளாதாரத்தை பலப்படுத்த போலியான அரசியல்– இராஜதந்திர திட்டங்களை சிங்கள இனவாதம் பிரயோகித்தது; பிரயோகிக்கின்றது.

இது ஒரு சிக்கலான சமன்பாடு ஊடாக நிறுவப்பட முனைந்த விடயமாகும்.

இராணுவத் தீர்வை இலகுவாக தமிழ் மக்கள்மீது பாவிப்பதற்கு சிங்கள இனவாத அமைப்பிடம் இலகுவான சூத்திரங்கள் எதுவும் கிடையாது. ஏனெனில் தமிழர்களின் தேசிய தலைமையும் அமைப்பும் பலமிக்கதொரு விடுதலை இராணுவத்தை உருவாக்கியுள்ளது. இதனைத் தோற்கடித்து விடுதலைப்போரை நசுக்குவதற்கு பாரியதொரு இராணுவ பலம் சிங்கள இனவாதத்திற்கு தேவையாகும்.

இந்த நோக்கை முன்னைய தலைவர்களான ஜே.ஆர். ஜெயவர்த்தனா முதல் டி.பி.விஜயதுங்க வரை படிப்படியாக அமுல்படுத்தி வந்தனர். 1994–ம் ஆண்டு டி.பி.விஜயதுங்கா தலைமையிலான ஐ.தே.கட்சி அரசு ஆட்சியை விட்டு அப்புறப்படுத்தப்பட்ட போது 24 பில்லியன் ரூபாய்களை சிங்கள இனவாத அமைப்பு இராணுவத்திற்கான நேரடி செலவீனமாகப் பாவித்தது. சுமார் 158,000 படையினர் முப்படைகளிலும், காவற்துறையினரிடமும் துணைப் படைகளிலும் இருந்தனர்.

இதன் இறுதிக்கட்டத்தில் (1993–1994) சிங்கள இராணுவம் தளர்ச்சியடையத் தொடங்கியது. இராணுவத்தின் எல்லை முடிவடைந்து விட்டது போன்றும் இராணுவத்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தினை சிங்கள இனவாதம் தன் பலமாக கருத முடியாது என்றதொரு கருத்தும் உருவாகத் தொடங்கியது. தமிழர்களின் அரசு யாழ் குடா நாட்டிலும் வன்னிப் பகுதிகளிலும் திடமாகக் கால் ஊன்றி நடைமுறையில் செயற்படும் அரசாக உருவாகியிருந்தது.

ஆனால் சிறீலங்காவில்சமூக, பண்பாட்டு, அரசியல், இராணுவ வாழ்வில் ஆழ வேரூன்றி இருந்த சிங்கள பௌத்த இனவாதம் தன்னை நவீனமயப்படுத்தியது. சிங்களத் தேசியம் தன் தோல்வியை அப்பட்டமாக உணர்ந்தபோதும் தோல்வியைத் தவிர்ப்பதற்கான உத்திகளையும் திட்டங்களையும் தயாரித்தது.

தமிழர்களின் விடுதலைப் போரை நசுக்கி எறிவதற்கான சாதுரியமான வழிமுறைகளை அது நாடியது. சிங்கள தேசம்மீது விழுந்த அழுக்கான சர்வதேசத் தோற்றம் களையப்பட வேண்டும்; அதன் மூலம் சிங்கள பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான சர்வதேச ஆதரவைத் திரட்ட வேண்டும்; இவற்றினூடாக இராணுவத்தினை பலப்படுத்தி தமிழர்களை நசுக்கி எறிந்துவிடவேண்டும் என்பதே 1993– 1994 காலகட்டங்களில் சிங்களத்தின் தேவையாக இருந்தது.

சந்திரிகா இத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டார். இது ஒரு இயற்கையான தேர்வாகும். அவர் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர். உலக அபிப்பிராயத்தைத் திரட்டக்கூடிய பின்புலத்தைக் கொண்டவர். மேலும் சிங்கள பௌத்த உயர் மட்டத்தின் அபிலாசைகளை "புத்திஜீவித்தனமான" வார்த்தைகளூடாக பிரதிபலிக்கக்கூடியவர்.



இவரது தேர்வை சிங்கள பௌத்த தேசம் வரவேற்றது. இவரது தாயாரது குடியுரிமையைப் பறித்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா சந்திரிகாவின் கோட்பாட்டை வரவேற்றமை சிங்கள அமைப்பின் புதிய தேர்வு இயல்பானது என்பதைக் காட்டியது.



புதிதாகப் பதவியேற்ற சந்திரிகா தமிழர்களை அவர்களது விடுதலைக்கான தீர்மானத்திலிருந்து பிரித்தெடுக்க முனைந்தார். புலிகளை தமிழர்களது விடுதலைக்கான பிரதிநிதிகள் என்பதை அங்கீகரிக்க வேண்டிய நிலையில் இருந்த சந்திரிகா புலிகளை உலகின் பார்வையிலிருந்து தனிமைப்படுத்த விழைந்தார்.

பேச்சுவார்த்தைகளை நவீன இனவாத அமைப்பை உருவாக்குவதற்கான கால இடைவெளிக்காக சந்திரிகா பாவித்தார். உண்மையான ஆக்கபூர்வமான தீர்வுக்கான சாத்தியங்களை சாதுரியமாக நிராகரித்து பிரச்சார வளம் நிறைந்த விடயங்களை மட்டும் புதிய அரசு தேர்ந்தெடுத்தது. ஆயினும் பலமான – தீர்க்கமான– சாதுரியமான தமிழர் தலைமை சந்திரிகாவை சரியாக எடைபோட்டது. அதனது இராணுவ நோக்கை இனங்கண்டது. சந்திரிகாவின் பிரச்சார நோக்கிலான வலையில் சிக்கி தமிழர்களது எதிர்காலத்தை நாசப்படுத்த தலைவர் பிரபாகரன் தயாராக இருக்கவில்லை.

**தமிழர்கள் பலப்படுத்தப்பட்ட இனவாத இராணுவத்தை தமது தீர்க்கமான ஆற்றலினால் பொறிக்குள் விழவைத்துள்ளனர். ''ஜெயசிக்குறுய்'' அந்தப் பொறியாக மாறியது. 64,000 படையினரை பாவித்து வன்னி நெடுஞ்சாலை ஒன்றை கைப்பற்றுவதற்கான சமரை தமிழர்களது தேசியத் தலைவர் தாய்ச் சமராக மாற்றி எதிரியை இதனுள் சிறையிட்டார்.**

போர் வெடித்தது. இம் முறை போரின் தேவைகள் பற்றி சிங்கள இனவாதம் ஒரு முழுமையான பார்வையைக் கொண்டிருந்தது. ஆட் பலத்தை அதிகரித்து– இராணுவ தளபாடங்களை பெருமளவு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ரத்வத்தவின் கொடும்பாவியை எரிக்கும் சிங்கள மக்கள்

நவீனமயப்படுத்தி சிங்களத்தின் பலத்தை சந்திரிகா அதிகரித்தார். 1993–களில் இருந்து 1997–வரை ஒரு இலட்சம் புதிய துருப்பினர் பயிற்று விக்கப்பட்டனர். 1994–இல் 23 பில்லியன் ரூபாவாக இருந்த செலவீனம் 1998–இல் 52 பில்லியன் ரூபாயாக உத்தியோகபூர்வமாக அதி கரிக்கப்பட்டது.

யுத்த விமானங்கள்– உலங்கு வானூர்திகள்– கடற்படைக்கலங்கள்– பீரங்கிகள்– டாங்கிகள் என இராணுவ பலம் பலமடங்கு அதிகரிக்கப்பட்டது. இச் செலவின் அதிகரிப்பானது உல கின் வளர்முக நாடுகளின் இராணுவ செலவீனத்தோடு ஒப்பிடுகையில் மிகமிக அதிகமானது. வளர்முக நாடு களின் இராணுவ செலவீனம் அத னது சராசரி உள்ளூர் உற்பத்தியின் யின் 3.1 வீதமாக இருக்கையில் சிறீ லங்காவினது 4.4 வீதமாகக் காட்டப் பட்டது. இது இராணுவ வெறியும் அடக்குமுறை தாகமும் கொண்ட ஒரு ஆட்சி அமைப்பை உலகுக்கு வெளிக் காட்டியது.

இந்த இராணுவ செலவீனத்திற் கும் பிரகடனங்களிற்கும் முண்டு கொடுப்பதற்காக பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் இன் "தீர்வுப் பொதி" என்ற பெயரில் ஒரு திரை உருவாக்கப் பட்டது. அனைத்து படுகொலைக ளும், காணாமல் போதலும், பாலி யல் வன்முறைகளும், ஒடுக்குமுறை கட்டங்களையும் இத்திரை மூலம் மறைத்துவிட நவீன சிங்கள இன வாதம் முயன்றது. சந்திரிகா அரசின் இராணுவ நோக்கையும் அதற்கான பொருளாதார தேவைகளையும் பூர்த்தி செய்ய கதிர்காமர் தலை மையில் ஒரு "கோமாளியை" உலகம் பூராகவும் சிங்கள பௌத்த இன வாதம் அனுப்பியது.

புலிகளின் பலத்தை அழிப்பத னூடாகவே இன ஒடுக்குமுறையை பாதுகாக்கலாம் என்பதில் தெளி வாக இருந்த எதிரி தீர்வுப் பொதி யையும், இராஜதந்திரப் படையெடுப் பையும் இராணுவ நடவடிக்கைக் காக என்பதை கணித்துத்தான் உரு வாக்கியிருந்தது.

ஆனால் தமிழர்கள் பலப்படுத்தப் பட்ட இனவாத இராணுவத்தை

**தமிழர்களது பொருளாதாரம் விடுதலை இராணுவத்தின் பீரங்கிகளுக்கும், ஏறிகணைகளுக்கும், கடற் கலன்களுக்கும், வான் பாதுகாப்பிற்கும் பலம் சேர்க்க வேண்டும். இதன் மூலம் மற்றுமொரு சக்கரத்தை சிங்கள இராணுவம் வரையாது பாதுகாக்கலாம்.**

தமது தீர்க்கமான ஆற்றலினால் பொறிக்குள் விழவைத்துள்ளனர். "ஜெயசிக்குறுய்'' அந்தப் பொறியாக மாறியது. 64,000 படையினரை பாவித்து வன்னி நெடுஞ்சாலை ஒன்றை கைப்பற்றுவதற்கான சமரை தமிழர்களது தேசியத் தலைவர் தாய்ச் சமராக மாற்றி எதிரியை இதனுள் சிறையிட்டார். இந்த "எதிர் பாராத" திட்டமிடல் பிழையானது, இராணுவ நடவடிக்கையின் கால எல்லையை நீடித்து "தீர்வுப் பொதியை அம்பலப்படுத்தியது. பீரிஸ் வருந்த "தீர்வுப் பொதி" உள்ளடக்கமற்றது. ஆனால் சாயம் பூசப்பட்டது. "பிராந்தியங்களின் கூட்டமைப்பாக" சிறீலங்காவை தீர்வுப் பொதி வரை யறை செய்தது. உலகம் இதனை நம்பியது. ஒரு கூட்டாட்சிக்கான தீர்வு என இதனைப் பாராட்டியது. ஆனால் மிகச்சாதுரியமாக பிராந்தி யங்களை இன முரண்பாட்டைக் கருத்தில் எடுத்து வகுக்காது புவிய மைப்பைப் பாவித்து வகுத்தது. இதுதான் பேராசிரியரின் பொறி. தமிழர்களது விழிப்புணர்வையும்– வரலாற்றுப்பார்வையையும் அற்ப மாக எண்ணிய சந்திரிகா தமிழ்– சிங்கள முரண்பாட்டை வரைவு மூலம் அங்கீகரிக்காது வெறும் புவிய மைப்பு ரீதியிலான 9 பிராந்தியங் களை உருவாக்கி எமது "தேசியம்" என்ற கோட்பாட்டை நசுக்கிவிட





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



முனைந்தார். எனினும் தமிழர்கள் இவ் நாசகாரத் திட்டத்தை எதிர்ப் பார்கள் என அறிந்திருந்த சிங்கள இராணுவ அரசியல் தலைமை ஒரு குறிப்பிட்ட கால எல்லையில் புலி களை நசுக்கி எறிந்துவிட்டால் தீர்வுப் பொதியினை அரைகுறை யாக அமுல்படுத்திவிடலாமென நம்பியது. மேலும் சிங்கள இனவாத இனவெறியர்களின் உதவியுடன் தீர் வுப் பொதியை கால ஒட்டத்தில் வலுவிழக்க வைக்கலாம் என பேராசி ரியர் பீரிஸ் திட்டமிட்டிருந்தார். எனினும் புலிகளது வலிமையும்— வழிகாட்டலும் இராணுவத் திட் டத்தை முண்டுகொடுத்து நின்ற அரசியல் திட்டத்தை இனங்காட்டி விட்டது. இதன் மூலம் இராஜதந்திர திட்டம் பலமிழந்துவருகிறது. இந் நிலையில் சாதுரியமான இனவாதி சந்திரிகா கரடுமுரடான இனவாதி டி.பி. விஜயதுங்க பாணியில் போரைப் பற்றி ஓலம் எழுப்ப ஆரம்பித்து விட்டார்.

சந்திரிகாவின் 4 வருட ஆட்சி ஒரு வட்டத்தைச் சுற்றி வந்து மீள அதனது ஆரம்பப் புள்ளியை அடைந்துவிட்டது.

மீள முழு சிங்கள பொருளா தாரத்தையும் குவித்து போரை விரிவுபடுத்தி ஆயுத தளபாடங்களை நவீனமயப்படுத்தி போரை வெல்ல எதிரி முற்படுவான்.

ஆயினும் நவீன சிங்கள இன வாதி சந்திரிகாவின் அரசியல் இராஜ தந்திர செல்லுபடித்தன்மை கேள்விக் குறியாகியுள்ளது. இம்முறை ரணில் விக்கிரமசிங்க சிங்கள இனவாதத் தின் அடுத்த கட்ட நவீனமயப் படுத்தலுக்கு பாவிக்கப்படக்கூடும்.

ஆனால் தோல்வியின் பதிவு களை சிங்கள இராணுவம் பெற்று வருகிறது. தப்பியோடும் இராணுவத் தினரின் எண்ணிக்கையும் புதிய படையினர் சேருவதில் உள்ள சிரம மும் இதற்கான ஆதாரங்களாகும்.

மேலும் சகல அரச சொத்துக் களையும் தனியாருக்கு விற்று, வரிச் சுமையைஅப்பாவி மக்கள்மேல் சுமத்தி சிங்கள இனவெறி அமைப் பின் பொருளாதார வலு நீடிக்கப் பட்டு ஈற்றில் மீளமுடியாத ஒரு எல்லையை அடையும் சூழ்நிலைக் குத் தள்ளப்படும். அக்கால எல்லை சிறீலங்கா— தமிழீழ உடைதலுக்கான நாட்களாக அமையும்.

இதன் மறுபுறம் தமிழர் தம் பொரு ளாதார வளங்களைத் திரட்டி விடுத லைப் போருக்கு ஆதாரமாய் பாவித் தால் அந்த வெற்றிக்கான நாட்களை அண்மிக்கலாம்.

தமிழர்களது பொருளாதாரம் விடுதலை இராணுவத்தின் பீரங்கிக ளுக்கும், எறிகணைகளுக்கும், கடற் கலன்களுக்கும், வான் பாதுகாப்பிற் கும் பலம் சேர்க்க வேண்டும். இதன் மூலம் மற்றுமொரு சக்கரத்தை சிங் கள இராணுவம் வரையாது பாது காக்கலாம்.

**-நாதன்**

## 'வெற்றி இல்லாவிட்டால் எமக்கென்றொரு எதிர்காலமே இல்லை'

பிரித்தானியப் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் 13.05.1940 இல் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரை.

நாம் மிகவும் பயங்கரமானதும், கஷ்டமானதுமான ஒரு காலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றோம். தியாகங்கள் பல செய்ய வேண்டியதும், கடுமையாகப் போராட வேண்டியதுமான, நீண்ட பல மாதங்கள் எங்களுக்கு முன்னால் இருக்கின்றன. உங்களுடைய கொள்கைதான் என்ன? என்று நீங்கள் எங்களைக் கேட்கிறீர்களா? நான் சொல்லுகிறேன்:

எமது கொள்கை போராட்டம்தான். தனி மனித வரலாற்றில் இருண்டதும், இரக்கப்படவேண்டியதுமானதும் - ஒரு காலத்திலும் நடக்காத பயங்கரமான கொடுங்கோன்மைக்கும் எதிராக எங்களுடைய முழுச் சக்தியையும் திரட்டி அத்துடன் இனிமேல் ஆண்டவன் எமக்குத் தரும் பலத்தையும் சேர்த்துப் போராடவேண்டும் என்பதே நீங்கள் கேட்ட எமது கொள்கை.

அடுத்ததாக எமது நோக்கம் என்ன என்று கேட்கிறீர்களா? அதற்கு ஒரே சொல்லில் பதிலளிக்கிறேன். - வெற்றி - வெற்றியின் பாதை என்ன தூரமானா லும் எத்தனை பயங்கரமானதாகவும் வேதனைகளும் சோதனைகளும் நிறைந்த தாக இருந்தாலும் வெற்றிக்காக என்ன விலை கொடுக்க நேரிடினும் - வெற்றி தான் எமது நோக்கம். ஏனென்றால் வெற்றி இல்லாவிடின் எமக்கென்று ஒரு எதிர்காலமே இல்லை.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# ஐ.நா.சபை நோக்கி மாபெரும் அமைதிப் பேரணி

**10.08.98** [redacted]ங்கட் கி[redacted]ை ம ஜெனிவா நகரில் கொழுத்து[redacted]வெய் யிலையும் பொருட்படுத்தாது[redacted]மிழீழ விடுதலை உணர்வுடன் [redacted]லந்து கொண்ட ஐயாயிரத்திற்கு[redacted] மேற் பட்ட தமிழீழ மக்களினா[redacted] மேற் கொள்ளப்பட்ட ஐ.நா. [redacted]க்கிய இந்த அமைதிப் பேரணி [redacted]னீவா புகையிர நிலையத்தில் ஆ[redacted]பித்து ஐக்கிய நாடுகள் சபையின் [redacted]சயல கத்தை நோக்கிச் சென்றது. [redacted]ரணி யில் மாணவர்கள், பெண்க[redacted] முன் பகுதியில் செல்ல எம் தா[redacted]த்தில் நடைபெறும் சோகமான [redacted]மனித உரிமை மீறல்களைச் சித்[redacted]க்கும் இரு ஊர்திகள் பின்தொடர்[redacted]ன.

**"எங்கள் தலைவர் பிரபாகரன்", "எங்கள் தேசம் தமிழீழம்", "எமக்கு வேண்டியது சுதந்திர தேசம்", "சிறீலங்காவே எங்கள் மீது அடக்குமுறை செய்யாதே", "எங்களின் விடிவு தமிழீழம்தான்"**

எமது தேசியக் கொடியையும் எம் தேசியத் தலைவரின் உருவப்படத் தையும் தாங்கிய வண்ணம் "எங்கள் தலைவர் பிரபாகரன்", "எங்கள் தேசம் தமிழீழம்", "எமக்கு வேண்டி யது சுதந்திர தேசம்", "சிறீலங்காவே எங்கள் மீது அடக்குமுறை செய் யாதே", "எங்களின் விடிவு தமிழீழம் தான்" போன்ற கோஷங்கள் வானைப் பிளக்க பேரணி ஐ.நா நோக்கிச் சென்றது.

ஐ.நா சபையின் முன்றலை மக் கள் சென்றடைந்ததும் தமிழீழ விடுத லைப் புலிகளின் சுவிஸ் ஒருங்கி ணைப்பாளர் தமிழீழத் தேசியக் கொடியை கொடிவணக்கப் பாடலு டன் ஏற்றி வைத்தார். தமிழர் புனர் வாழ்வுக் கழக சுவிஸ் கிளை பொறுப் பாளர் வரவேற்புரை வழங்கினார்.




தொடர்ந்து சிங்களப் பேரின வாதிகளால் திட்டமிட்டு தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொள்ளப் படும் அடக்கு முறைகளையும், அழிவு அனர்த்த நடவடிக்கைக ளையும், மனித உரிமை மீறல்களை யும் சர்வதேச உலகிற்கு எடுத்துக் காட்டி தமிழினத்தின் நியாயமான நீதியான விடுதலைப் போராட் டத்தை அங்கீகரிக்கக் கோரியும், சுயநிர்ணய உரிமை, சுதந்திரம் என்ப வற்றை வலியுறுத்தி ஐ.நா. சபையி டம் கையளிக்கப்பட்ட மனுவின் சாராம்சத்தை சுவிஸ் தமிழ்ச் சங்கங் களின் கூட்டமைப்புப் பிரதிநிதி அனைவருக்கும் அறியப்படுத்தினார்.

இந் நிகழ்வில் ஜேர்மனி, பிரான்ஸ், டென்மார்க், இத்தாலி, இங்கிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த தமிழீழ மக்கள் உணர்வுடன் கலந்துகொண் டனர். பேரணியின் முடிவில் நடை பெற்ற பொதுக்கூட்டத்தின் போது தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தமிழீழ ஆதரவாளர் திரு சுப.வீர பாண்டியன், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜேர்மன் பணியக கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. கா.சிவநாதன், தமிழர் மனித உரிமை மையத்தைச் சேர்ந்த செல்வி டியற்றி மைக்கொனல், உலகக் கல்வி மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த கரன் பாக்கர் (அமெரிக்கா), பிரான் ஸிலிருந்து வருகைதந்திருந்த திரு. பாலசுந்தரம் இங்கிலாந்திலிருந்து வந்த திரு. ச.பத்மநாதன், பெண்கள் விடுதலை அமைப்பைச் சேர்ந்த பூங்கோதை, சுவிஸ் அகதிகள் உதவி அமைப்பைச் சேர்ந்த அத்துரோ பொட்ஸி, தமிழர் மனித உரிமைகள் மையத்தைச் சேர்ந்த திரு.கிருபாகரன் (பிரான்ஸ்), சுவிஸ் தமிழர் ஒருமைப்பாட்டு அமைப்பைச் சேர்ந்த மதலின் மைக்கல், ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்த மிஷேல் ம[illegible]யூ, தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன டென்மார்க் கிளைப் பொறுப்பாளர் திரு. அருளானந்தராஜா, இத்தாலியில் இருந்து வருகைதந்திருந்த திரு. சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

திரு சுப. வீரபாண்டியன் அவர்கள் உரையாற்றுகையில்....

ஈழம் தமிழ்நாடு என்னும் இரு நாட்டினையும் ஆழம் மிகுந்த அலை மாகடல் பிரிக்கும். ஆழம் மிகுந்த கடல் பிரித்தாலும் பாலும் இளநீரும் பாகும் செங்கரும்பும் நாலும் கலந்து எங்கள் தமிழ் நாளும் எங்களை இணைக்கும். கடல் பிரித்தாலும் தமிழ் எங்களை இணைக்கும். உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவனின் நிழலில் புலிக் கொடிகளை தாங்கி நிற்கும் பல்லாயிரக் கணக்கான மக்கள் மத்தியில் நான் பேசுவதற்குப் பெருமைப்படுகிறேன். தமிழீழ தாயகத்திலிருந்து படும் அனர்த்தங்களின் விளைவாகவே தமிழ் மக்கள் புலம் பெயர்ந்தனர். கிருஷாந்தி பாலியல் கொலை, செம்மணி புதைகுழி விவகாரம் என்பவற்றைக் கூறி கிருஷாந்திக் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவனுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு உலகத்தை ஏமாற்றும் ஒரு போலியான தீர்ப்பு என்பதைச் சுட்டிக்காட்டினார். ராஜீவ் காந்தி எனும் தனிமனிதனின் கொலை தொடர்பாக 26 பேருக்கும் மரண தண்டனை இது எந்த வகையில் நீதியாகும்? மகாத்மாகாந்தி கொலை வழக்கில் ஏழுபேர் குற்றம் சாட்டப்பட்டு இருவருக்குத் தூக்குத் தண்டனை, இந்திரா காந்தி கொலை வழக்கில் 4 பேர் குற்றம் சாட்டப்பட்டு இருவருக்கு தூக்கு ஆனால் ராஜீவ் கொலைவழக்கில் 26 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இதில் எவருமே சம்பந்தப்பட்டவர் இல்லை. இதுபோன்ற கொடுமைகளைக் கேட்பதற்கு ஐ.நா. சபையால் முடியாதா? என கேள்விக் கணை தொடுத்தார். புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் களத்திலுள்ள எமது போராளிகளின் கரங்களை வலுப்படுத்தினால் இன்று ஐ.நா முன் பறக்கும் புலிக்கொடி தலைவன் பிரபாகரன் காலத்தில் ஐ.நா சபையினுள்ளும் பறக்கும். “வெல்லட்டும் தமிழீழம்”, “வெல்வார்கள் புலிகள்” எனக் கூறி தனது பேச்சை முடித்தார்.

**புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் களத்திலுள்ள எமது போராளிகளின் கரங்களை வலுப்படுத்தினால் இன்று ஐ.நா முன் பறக்கும் புலிக்கொடி தலைவன் பிரபாகரன் காலத்தில் ஐ.நா.சபையினுள்ளும் பறக்கும்.**







இங்கிலாந்திலிருந்து வருகைதந்திருந்த அயர்லாந்தைச் சேர்ந்த பெண்மணி டியற்றி மக்கொனல் அவர்கள் உரையாற்றும்போது, ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை மூலம் அரசு எதிர்கொள்ளும் பின்னடைவையும், புலிகள் பெற்று வரும் அதீத பலத்தையும் எடுத்துக் காட்டி கூடியுள்ள மக்களால் உணர்த்தப்படும் கோரிக்கைகளுக்கு ஐ. நா செவிமடுக்க வேண்டுமெனவும் கூறிக்கொண்டதோடு “நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்” எனவும் தமிழில் கூறி தனது பேச்சை முடித்தார்.

★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# அமெரிக்கா- சிறீலங்கா நெருக்கம்?


## தென்னாசியாவில் புதிய சமன்பாடு

எப்பாவெல பொஸ்பேற் படிவு பிரதேசத்தினை அமெரிக்க நிறுவனத்திற்கு விற்பனை செய்ய சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் முன்வந்துள்ளமையானது சிறீலங்கா அமெரிக்க உறவின் நெருக்கத்தினை வெளிப்படுத்துவதற்கான நல்லதொரு குறிகாட்டியாகும். ஆனால் மூன்று ஆண்டுகளுக்கு முன் குமாரதுங்க தலைமையிலான பொ.ஐ.மு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய போது ஐ.தே.க அரசாங்கத்திற்கு கிடைக்கப் பெற்றது போன்று அமெரிக்க நிதி உதவி கிடைக்கப்பெறுமா? என்றதொரு நிலையே இருந்தது.

ஏனெனில் பொ.ஐ.முன்னணிக்கு தலைமைதாங்கிய சிறீலங்கா சுதந்திரக் கட்சியினது கடந்தகால வரலாறும் இவ் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கூட்டணிக் கட்சிகளின் வரலாறும் இவ் அச்சத்தை உருவாக்கி இருந்தன. இதற்கு ஏற்றாற்போல் அமெரிக்காவின் ஒலிபரப்பு நிலையம் (VOICE OF AMERICA) புத்தளம் பகுதியில் அமைவதற்கு பொ.ஐ.மு காட்டி வந்த எதிர்ப்பும் இருந்தது.

ஆனால், கடந்த மூன்றாண்டு கால ஆட்சியில் சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் சிறீலங்கா ஆட்சியாளர் எவருமே கொண்டிராத அளவில் அமெரிக்காவுடனான உறவை வளர்த்துக் கொண்டுள்ளது. இவ் உறவானது ஒருபுறம் சிறீலங்கா அரசு தனது தேவைக்காக வளர்த்துக் கொண்டது எனின் மறுபுறம் அமெரிக்கா வழமை போன்றே தனது ஏகாதிபத்திய நலனுக்காக சிறீலங்கா வழங்கிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டுள்ளதெனலாம். இதே சமயம் இவ் விவகாரத்தில் சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் பங்கும் அதேவேளை கடந்த மூன்றாண்டுகால இந்தியாவில் நிலவும் ஸ்திரமற்ற ஆட்சியும் இதற்கு அனுசரணையாகவும் இருந்துள்ளன.

சிறீலங்கா ஆட்சியாளர்கள் குறிப்பாக நீண்டகாலம் ஆட்சி புரிந்த ஐ.தே.க வினர் மேற்குலகம் சார்ந்த போக்கைக் கொண்டவர்களாக இருந்



சிறிலங்காப் படைகளுக்கு அமெரிக்க இராணுவ அதிகாரிகள் பயிற்சி வழங்குகின்றனர்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

திருப்பினும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக் காலத்தின் போது இதில் சில பிறழ்வுகளும் இருக்கத் தான் செய்தன. அதிலும் எஸ்.டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்கா, சிறீமாவோ பண்டாரநாயக்கா ஆட்சிக் காலத்தின் போது மேற்குலகு சார்ந்த போக்கில் இருந்து சிறீலங்கா சிறிது மாறுபட்ட நிலைப்பாட்டுடனேயே இருந்தது.

அதேசமயம், சிறீலங்காவின் வெளியுறவுக் கொள்கையானது இந்தியாவுடன் அனுசரித்த போக்கைக் கொண்டதாகவே பெரும்பாலும் இருந்து வந்தது, இருந்துவரவேண்டிய நிர்ப்பந்தமும் இருந்தது. இந் நிலையானது நேரு காலத்திலிருந்து ராஜீவ் காலம் வரை காணப்பட்டது. சில சமயங்களில் சிறீலங்கா ஆட்சியாளர் அகலக் கால் வைக்க முற்பட்டபோது இந்தியாவின் மறைமுக அச்சுறுத்தலுக்கும் உள்ளாகி இருந்தனர். இந்த வகையில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா, பிரேமதாசா ஆகியோர் காலத்தில் இவ்வாறான அழுத்தங்கள் சில இந்தியாவால் ஓரளவு வெளிப்படையாக பிரயோகிக்கப்பட்டிருந்தது. இதன் ஓர் அம்சமாக இந்தியா– சிறீலங்கா சமாதான உடன்பாடும் உருவாகியது.

இதே சமயம், இந்தியாவுடன் விரோதப் போக்கைக் கைக்கொண்டு சிறீலங்காவுடன் நேரடி உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதிலும் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகள் ஆர்வம் காட்டவில்லை. இதனை அமெரிக்காவின் கடந்தகால நடவடிக்கைகளே நிரூபிப்பனவாகவும் இருந்தன.

இதேவேளை இலங்கையில் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் முனைப்புப் பெற்றது. அதற்கு எதிரான உலக ரீதியில் நண்பர்களைத் தேடவும், ஆயுத உதவிகளைப் பெறவும் சிறீலங்கா அரசு முயன்றது. இதில் மேற்குலகத்தினர் பாலும் சிறீலங்காவின் கவனம் செல்லாமல் இல்லை. அத்தோடு ஆட்சியிலிருந்தவர்களும் மேற்குலக விசுவாசிகளாகவே இருந்தனர்.

ஆனால், அமெரிக்காவோ அன்று சிறீலங்கா அரசிற்கு உதவி வழங்க விருப்பம் கொண்டிருந்த போதிலும் நேரடியாகவோ வெளிப்படையாகவோ அதனை வழங்க முன்வரவில்லை. தனது நட்புநாடுகளான இஸ்ரேல், பாகிஸ்தான் என்பவற்றினூடாக அதனைச் செய்ய முன்வந்தது. சிறீலங்கா ஆயுதப் படையினருக்கு வெளிப்படையான பயிற்சிகளைக் கூட செய்வதற்கு அது தயாராக இருக்கவில்லை என்றே கூறவேண்டும்.




அவ்வாறு இல்லாது நேரடியான தலையீட்டை செய்யும் பட்சத்தில் தென்னாசியப் பிராந்தியத்தில் பெரும் நெருக்கடியும் சில சமயம் சிறீலங்காவின் இறைமையும், இலங்கையின் பிரதேச ஒருமைப்பாடும் இழக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என அமெரிக்கத் தரப்பு கருதியமையே அவ்வாறான உதவிகளை தவிர்ப்பதற்குக் காரணமாக இருந்தது.

இதனை உறுதிப்படுத்துமாப் போன்றே இந்தியாவும் நடந்து கொண்டது. எடுத்துக்காட்டாக *1987*–ல் இந்திய– சிறீலங்கா சமாதான உடன்பாடு ஏற்படுத்தப்பட்ட போது அவ் உடன்பாடு இனப்பிரச்சினைக்கான தீர்வு எனக் கூறிக் கொள்ளப்பட்டதாயினும் உண்மையில் அதில் பெரும்பாலான விடயங்கள் இந்திய– சிறீலங்கா உறவு பற்றியதாகவும் சிறீலங்காவில் வெளியாரின் இராணுவத் தலையீடுகள் மட்டுப்படுத்துவது குறித்ததுமாகவே இருந்தது. குறிப்பாக அன்று சிறீலங்காவில் இருந்த இஸ்ரேலிய "மொசாட்" அமைப்பை வெளியேற்றுவதாகவும், அந்நிய வல்லரசுகளுக்கு பொருளாதார வளங்களை வழங்குவதை மட்டுப்படுத்துவதாகவுமே இருந்தது.

ஆனால் சந்திரிகா குமாரதுங்க ஆட்சியில் இதுவரையிலும் இல்லாத அளவில் அமெரிக்க சிறீலங்கா அரசு உறவுகள் அரசியல்– இராணுவ– பொருளாதார ரீதியில் நெருக்கமடைந்துள்ளது. இது சிறீலங்காவின் அரசியல்– இராணுவ– பொருளாதார விடயங்களில் அமெரிக்கா நேரடியாகத் தலையீடு செய்யும் நிலை வரையிலும் இன்று இட்டு வந்துள்ளது.

இராணுவ ரீதியில் இவ் உறவானது சிறீலங்காவிற்கு நேரடி ஆலோசனைகளும், பயிற்சியும் வழங்கும் முக்கிய நட்பு நாடு அமெரிக்காவே என்ற நிலையை உருவாக்கியுள்ளது. அத்தோடு, இராணுவத் தளபாட உதவிகளும் குறிப்பிடத்தக்க அளவில் கிடைப்பதற்கான சூழ்நிலைகளும் உருவாகியுள்ளன.

பொதுவான இராணுவப் பயிற்சித் திட்டத்தின்படி அமெரிக்காவில், சிறீலங்கா படைத்துறை அதிகாரிகள்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நீண்ட காலமாகவே பயிற்சி பெற்று வருகின்றனர். ஆனால் தற்பொழுது அமெரிக்க இராணுவப் பயிற்சியாளர்களும், ஆலோசகர்களும் சிறீலங்காவிற்கு அடிக்கடி பயணங்களை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

இதில் அமெரிக்க பயிற்சி நிறுவனமான 'கிறீன்பெரே' அமைப்பு சிறீலங்கா இராணுவத்தின் கொமாண்டோப் படைப்பிரிவினருக்குப் பயிற்சி அளித்து வருகின்றது. ஆரம்பத்தில் இரகசியமாக மேற்கொள்ளப்பட்ட இப்பயிற்சித் திட்டமானது பின்னர் பத்திரிகைகளில் வெளியான செய்திகளைத் தொடர்ந்து பகிரங்கமாக ஒப்புக்கொள்ளப்பட்டதொன்றாகியுள்ளது.

இதேபோன்று தற்பொழுது "சீல்" (SEAL) என்னும் அமெரிக்க அமைப்பினால் சிறீலங்கா கப்பல் படைக்கு விஷேட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு பயிற்சிபெற்ற ஒரு பிரிவு ஏற்கனவே பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறியும் உள்ளது.

பயிற்சித் திட்டங்கள் இவ்வாறு இருக்க ஆலோசனைகள் என்ற ரீதியில் அமெரிக்கப் படைத்துறை அதிகாரிகள் கொழும்பிற்கு விஜயங்களை மேற்கொண்டுள்ள அதேவேளை சில அமெரிக்க அதிகாரிகள் வன்னிப் போர்க்கள நிலவரத்தை அவதானிப்பதற்காக நேரடியாகவும் யுத்தகளப் பகுதிக்கு விஜயம் செய்துள்ளனர்.

குறிப்பாக அமெரிக்காவின் கிழக்குப் பசுபிக் பிராந்திய பாதுகாப்புத் துறை அதிகாரிகள் பல தடவை கொழும்பிற்கு விஜயங்களை மேற்கொண்டனர். இவர்களில் சிலர் ஜெயசிக்குறு படை நிலைகளுக்கு விஜயங்களை மேற்கொண்டதாக தகவல்கள் உள்ளன. இதே சமயம் அமெரிக்காவிற்கு சிறீலங்காப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் றொகான் தளுவத்த ஆகியோர் உட்பட பல தளபதிகள் உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொண்டும் உள்ளனர். அங்கு பல கருத்தரங்குகளில் கலந்துகொண்டதோடு போர்த் தளபாடங்களை பார்வையிடும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டும் திரும்பியுள்ளனர்.

இதைத் தவிர தற்பொழுது சில உயர் தொழில்நுட்ப இராணுவ தளபாடங்களை சிறீலங்காவிற்கு விற்பதற்கு அமெரிக்கா சம்மதித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதில் குறிப்பாக எறிகணைகளின் திசையறியும் ராடர் சாதனத்தை (ஹைக்ஸ் ஏ.என்.ரி.பி.கியூ 36 ஃபயர் பைண்டர் ராடர்) அமெரிக்கா வழங்கவுள்ளமை ஊர்ஜிதப்படுத்தப்பட்டதான தகவல் உள்ளது. இதேசமயம் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய தாக்குதல் உலங்கு வானூர்தியான "COBRA" உலங்கு வானூர்திகளையும் சிறீலங்கா கொள்வனவு செய்யும் முயற்சியில் ஈடுபாடு காட்டி வருகின்றது.

இந்த வகையில் இராணுவ ஒத்துழைப்பு இருக்கையில் அரசியல் ரீதியான நெருக்கமும் அதிகரித்துச் செல்வதாகவே உள்ளது. ஒருபுறம் சிறீலங்காவின் கோரிக்கைக்கு இணங்கி அமெரிக்கா விடுதலைப்புலிகள் மீதான தடையை அறிவித்துள்ள அதேவேளை அமெரிக்கக் காங்கிரஸ் தூதுக்குழு ஒன்று சிறீலங்காவிற்கு விஜயம் ஒன்றையும் மேற்கொண்டது. இக்குழு இனப்பிரச்சினை தொடர்பாக கொழும்பிலுள்ள பலதரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தியது. இது அமெரிக்கா இனப்பிரச்சினைக்கான இராணுவத் தீர்வில் கொண்டுள்ள ஆர்வத்தை மறைமுகமாகப் பிரதிபலிப்பதாகவே இருந்தது.

இவ்வாறாக இராணுவ- அரசியல் ஒத்துழைப்பு இருக்கையில் அமெரிக்காவுடன் நெருக்கமான பொருளாதார ஒத்துழைப்பை அதிலும் குறிப்பாக அமெரிக்காவின் பொருளாதார நலன்களைப் பேணும் விடயத்தில் சந்திரிகா அரசாங்கம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. அன்று அமெரிக்க ஒலிபரப்பு நிலையத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொ.ஐ.மு அரசாங்கம் இன்று ஒரு கனிம வளப் பிரதேசத்தை அமெரிக்காவிற்குத் தாரைவார்க்கச் சம்மதித்ததோடு அவற்றை ஏற்றிச்செல்வதற்கு திருகோணமலைத் துறைமுகத்தின் ஒரு பகுதியையும் ஒதுக்கித் தர சம்மதம் தெரிவித்துள்ளது.

இந்த வகையில் இன்று சிறீலங்காவிற்குள் அமெரிக்கா வலுவானதாகக் காலூன்றத் தொடங்கிவிட்டது என்றே கொள்ளலாம். இதற்கு சந்திரிகா அரசின் வெளியுறவுக் கொள்கை முக்கிய காரணியாக இருப்பினும் கூட இவ் உறவு நெருக்கத்திற்கு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் நடவடிக்கைகளும் காரணமாகும். மேற்குலகு சார்ந்த நிலைப்பாட்டையே வெளிப்படையாகக் கொண்டுள்ள லக்ஷ்மன் கதிர்காமர் இவ் உறவிற்காக நீண்ட நாட்களாகவே முயற்சிகள் மேற்கொண்டிருந்தார். இதன் மூலம் சர்வ

> **ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் மூன்றாண்டுகால ஆட்சியானது அமெரிக்க- சிறீலங்கா உறவில் என்றுமில்லாத அளவில் நெருக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நெருக்கமான உறவிற்கு சிறீலங்காவின் தேவையும் அமெரிக்காவின் அபிலாஷைகளும் காரணமாக இருப்பினும்கூட இந்தியாவின் ஸ்தீரணமற்ற அரசியல் சூழ்நிலையும் இதற்கான வாய்ப்பைக் கொடுத்துள்ளதெனலாம். ஆனால் எதிர்காலத்தில் இவ் உறவானது தென்னாசியாவில் ஏற்படுத்தக்கூடிய தாக்கமானது இப்பிராந்தியத்தின் அரசியல்- இராணுவச் சமன்பாட்டில் பெரும் மாற்றத்தை விளைவிக்கக்கூடியதாக மாறினும்கூட ஆச்சரியப்பட எதுவுமில்லை.**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



அமெரிக்க இராணுவ அதிகாரிகளுடன் சிறீலங்கா இராணுவத்தினர்

தேச ரீதியில் அமெரிக்காவின் ஆசீர் வாதத்துடன் அங்கீகாரம் பெறவும் அதன் அடிப்படையில் ஏனைய நாடுகளின் உதவியைப் பெற்றுக் கொள்வதும் அவரது குறியாகும்.

இதைத் தவிர சிறீலங்காவில் அமெரிக்கா காலூன்ற இந்தியா விலிருந்த ஸ்தீரணமற்ற அரசியல் சூழ்நிலையும் ஓர் முக்கியமான காரணமாகும். இதனை வேறு வித மாகக் கூறுவதானால் இந்தியாவின் ஸ்தீரணமற்ற அரசியல் நிலையைச் சிறீலங்காவும் அமெரிக்காவும் தத்த மக்குச் சாதகமாக்கிக் கொண்டுள் ளன என்றே கூறவேண்டும். இல்லா துவிடில் மொசாட்டின் பயிற்சித் திட்டத்திற்கும் வொய்ஸ் ஒப் அமெ ரிக்கா நிறுவனத்திற்கு நிலம் வழங் கவும், திருமலை எண்ணெய் குதங் களை அமெரிக்க சார்புக் கம்பனிக ளுக்கு குத்தகைக்கு விடுவதற்கும் முட்டுக்கட்டை போட முயன்ற இந்தியாவால் அமெரிக்காவின் நேர டிப் பிரசன்னத்தை எவ்வாறு பார்த்துக்கொண்டிருக்கமுடியும்?

ஆனால் எது எவ்வாறாயினும் அமெரிக்க– சிறீலங்கா இராஜீய உறவானது முன்னெப்பொழுதும் இல்லாதளவில் உச்சநிலையில் உள் ளது என்பது வெளிப்படையானது. இவ் உறவு நிலையானது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதி ரான வெற்றியைச் சிறீலங்கா அர சிற்குப் பெற்றுக் கொடுக்கின்றதோ இல்லையோ தென்னாசியப் பிராந்தி யத்தின் தென்கோடியில் அமெரிக்கா வலுவாகக் காலூன்ற உதவும் எனத் திட்டவட்டமாகக் கூறலாம். அமெரிக் காவின் குறிக்கோளும் அதுவே.

ரமணன்

எது எவ்வாறாயினும் அமெரிக்க– சிறீலங்கா இராஜீய உறவானது முன்னெப்பொழுதும் இல்லாதளவில் உச்சநிலையில் உள்ளது என்பது வெளிப்படையானது. இவ் உறவு நிலையானது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான வெற்றியைச் சிறீலங்கா அரசிற்குப் பெற்றுக் கொடுக்கின்றதோ இல்லையோ தென்னாசியப் பிராந்தியத்தின் தென்கோடியில் அமெரிக்கா வலுவாகக் காலூன்ற உதவும் எனத் திட்டவட்டமாகக் கூறலாம்.

## அற்புதமானதுமான காரியம்

'சுதந்திரத்தையும் விடுதலையையும் விட அரிய பொருள் வேறொன்றும் கிடையாது. நமது நாட்டையிழந்து மீண்டும் அடிமைப்படுவதைவிட அனைத்தையும் தியாகம் செய்வோம்.'

மக்களுடைய நலன்களுக்காக பாடுபடுவதை விட அழகு மிக்கதும் அற்புதமானதுமான காரியம் எதுவும் சமுதாயத்தில் கிடையாது.

– வியற்நாமின் தந்தை கோ.சி.மின்.

## யாழ் மக்களுக்கு இராணுவ விஷேட அடையாள அட்டைகள்

யாழ் குடாநாட்டில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற் குள் வாழும் பொது மக்களுக்கு இராணுவத்தினரும் அரச அதிகாரிக ளும் இணைந்து விஷேட அடையாள அட்டை ஒன்றினை வழங்கி வருவதாக செய்தி ஒன்று கூறுகிறது.

குடாநாட்டில் வாழும் மக்களில் 3,32,164 மக்களுக்கு இவ்வாறான அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும். இதில் சாவகச்சேரி பிரதேச மக்களில் 40,329 பேருக்கும், நல்லூர்ப் பிரதேசத்தில் 32,539 பேருக்கும், கோப்பாய் பிரதேசத்தில் 30,040 பேருக்குமாக இவ் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட் டுள்ளதாக அச் செய்தி மேலும் தெரிவிக்கின்றது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# துவண்டுபோன கைமுனுக்களும் சீறிப்பாய மறுக்கும் சிங்கங்களும்

பௌத்த சிங்கள பேரினவாதிகளோஅன்றிச் சிங்கள ஆட்சியாளர்களோ ஒரு போதும் கற்பனை செய்து கூடப் பார்த்திருக்கமாட்டார்கள், தமிழர் மீதான தாக்குதலுக்கு ஆட்சேர்ப்பது இவ்வளவு கடினமானதொரு காரியமாக இருக்கும் என்று. அதாவது, இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பது இவ்வளவு சவாலான காரியமாக மாறும் என்று.

இலங்கையின் சனத்தொகையில் 74 சதவீதத்திற்கு மேற்பட்ட (அதாவது, 2/3 பங்கு மக்கள் தொகையைக் கொண்டு ஓர் இனத்திலிருந்து சுமார் 12 சதவீதம் தற்போதைய வீதாசாரம் இதனைவிடக் குறைவு) மக்களைக் கொண்ட ஓர் இனத்திற்கு எதிராக அரசின் அனுசரணையுடன் போராட இராணுவத்திற்கு ஆட் திரட்டுவது இவ்வளவு கடினமானதொரு காரியமாக மாறுவது ஆச்சரியமான தொன்றுதான்.

அதிலும், சிங்கள இனமோ தமிழருக்கு எதிராக வெறியூட்டப்பட்ட தொன்றாகவே வரலாற்று ரீதியில் இருந்து வந்துள்ளது. இதனைத் தமது அடிப்படைக்கோட்பாடுகளில் ஒன்றாக பௌத்த பேரினவாதிகள் கொண்டும் இருந்தனர். இதனை உணர்த்துமாப் போன்று கடந்த காலத்தில் தமிழ் மக்கள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள் கூடச் சிங்களப்பேரினவாதத்தினால் கட்டவிழ்த்துவிடப்பட்டும் இருந்தது.

இதற்கேற்ப, ஆரம்பத்தில் தமிழருக்கு எதிரான போருக்கு சிங்கள இளைஞர்கள் முண்டியடித்துவந்தமையும் உண்டுதான். அப்பொழுது 'புலிகளுக்கு எதிராகச் சிங்கங்கள் சீறிப்பாயத் தொடங்கிவிட்டன' எனவும் 'துட்டகைமுனுக்கள் களம்புகத் தயாராகிவிட்டனர்' எனவும் பேரினவாத தரப்பிலிருந்து பெரும் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறாகச் சிங்கங்கள் சீறிப்பாயத் தயாரானதற்கு சுதந்திரத்தின் பின்னான வரலாறுகளும் சிங்கள இனத்தின் இப் பெரும்பான்மையும் ஆட்சியும் சிங்கள இளைஞர்களுக்கு உற்சாகமூட்டுபவையாக இருந்தன. அதாவது, சிங்களவர்கள் வெறிகொண்டு தாக்கியபோதெல்லாம் தமிழர்கள் தப்பியோடுபவர்களாகவே இருந்தனர். திருப்பித்தாக்குபவர்களாகவோ அன்றி எதிர்த்து நின்று தாக்குபவர்களாகவோ இருக்கவில்லை. இவற்றிற்கு சிங்களவர்களின் பெரும்பான்மையும் ஆட்சியாளர்கள் அவற்றிற்கு அளித்த ஆதரவும் காரணங்களாக இருந்தன.

அத்தோடு கிழக்கை சிங்களக் குடியேற்றங்கள் மூலம் ஆக்கிரமித்திருந்த சிங்களவர்கள் அப் பிரதேசத்தில் இருந்து தமக்கு எதிர்ப்பு





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வரும் என எதிர்பார்க்கவில்லை. அதிலும் முஸ்லிம் அரசியல் தலைமைகளை தமது கைக்குள் போட்டு வைத்துக்கொள்வதன் மூலம் கிழக்கை இலகுவாக கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்துவிட முடியும் என்றே கருதினர்.

இந்த நிலையில்தான் 'சிங்கங்கள் சீறிப்பாய' தொடங்கின. ஆனால், இம்முறை தமிழர்கள் சிதறி ஓடவில்லை. சிங்கங்களை எதிர்கொள்ளவே தயாராகினர். அப்பொழுதுதான் சிங்கங்களுக்கு தமது இயலாமை புரியத்தொடங்கியது. நவீன 'துட்டகைமுனு' க்களுக்கு தமிழருக்கு எதிரான போர் மகாவம்சத்துக் கட்டுக்கதை போன்றதல்ல என்பதையும் தெளிவுபடுத்தின.

இதன் பின்புதான் அதாவது தமிழர்கள் பலமான ஒரு தலைமையின் கீழ் இன்று எதிர்க்கத் தொடங்கிய போதுதான் போரின் தாக்கம் புரியத் தொடங்கியது. போர் என்பது அடிப்பது மட்டுமல்ல, அடிவாங்குவதும்தான் என்பது தெரிய வந்தது. இத்தோடு, இழப்புக்கள் என்பது கற்பனைக்கும் அப்பாற்பட்டதாக நினைத்துப் பார்க்க முடியாதளவு ஏற்பட்ட போதுதான் சிங்கள இளைஞர்கள் இராணுவத்தை விட்டு ஓடத் தொடங்கினர்.

அதாவது போர்க்களம் என்பது செல்வத்தையும் சுகத்தையும் அறுவடை செய்யும் ஒரு வளமான வயலல்ல உயிரிழப்புக்களையும் அவையவங்களையும் துண்டாடும் ஒரு இரத்தம் சிந்தும் களம் என்பதையும் புரிந்துகொள்ளத் தொடங்கியதுமே சிங்கள இளைஞர்களுக்குப் போர்க் களம்குறித்த அச்சம் உருவாகியது.

இராணுவத்திலிருந்து தப்பியோடுதல் என்பது 1993–ல் ஆரம்பித்தது. 1992–ம் ஆண்டின் இறுதியிலிருந்து 1993 முழுவதுமாக விடுதலைப்புலிகள் இயக்கம் தீவிரமான முறையில் மேற்கொண்ட கெரில்லாப்பாணியிலான தாக்குதலில் இறங்கியபோது சிறீலங்கா இராணுவத்தினரின் நிம்மதியும் தூக்கமும் தொலைந்து போனது. பகலில் தூங்கி இரவில்



அமெரிக்காவினால்கூட சிங்கங்களைப் பாயவைக்க முடியவில்லை

விழித்திருங்கள் என அன்றைய ஜனாதிபதியான டி.பி.விஜயதுங்க கூறும்வகையில் நிலைமை சென்றது.

இக்காலப் பகுதியிலேயே அதாவது 1993, 94–ம் ஆண்டுகளிலேயே பெரும் எண்ணிக்கையிலான துருப்புக்கள் படையைவிட்டுத் தப்பியோடி இருந்தனர். அதன் பின்னர் 1996–ல் விடுதலைப் புலிகள் முல்லைத்தீவுப் படைத்தளத்தை தாக்கி அழித்தமை இராணுவத்தினர் தப்பியோடுவதை மீண்டும் தீவிரமாக்கியது.

அதாவது 'ரிவிரச' நடவடிக்கை மூலம் இராணுவத்தினருக்குக் கொடுக்கப்பட்டு வந்த நம்பிக்கை முல்லைத்தீவுப் படைமுகாமின் வீழ்ச்சியுடன் வீழ்ந்ததெனலாம். இதைத் தொடர்ந்து மீண்டும் படையினர் தப்பியோடத் தொடங்கியுள்ளனர். புதியவர்கள் இராணுவத்தில் இணைவதையே நிறுத்திக் கொண்டனர்.

இந்த நிலையில் 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கையும் எதிர்பார்த்ததையும் விட பலமான எதிர்ப்பைச் சந்தித்து நிற்கிறது. இதன் காரணமாக எதிர்பார்த்ததற்கும் மேலான அதிகப்படியான துருப்புக்கள் அதற்குத் தேவையாக உள்ளது. ஆனால், சிங்கள இளைஞர்களோ இராணுவத்தில் இணைந்துகொள்ளவோ அன்றி போரில் ஈடுபடவோ தயாராக இல்லை. எட்டுத் தடவைகள் பொது மன்னிப்பு புதியபுதிய சலுகை அறிவிப்புக்கள் எவையுமே சிங்கங்களைச் சிலிர்க்கச் செய்ய முடியவில்லை.

இதன் தாக்கமானது அரசாங்கம் கட்டாய இராணுவ சேவையை அமுல்செய்ய வேண்டி வரும் என எச்சரிக்கும் நிலையிலும் அதே சமயம் பாடசாலைகளில் இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் முயற்சியிலும் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் சிறீலங்கா அரசாங்கம் இதில் எந்தளவு தூரத்தில் வெற்றி பெறும் என்றோ அன்றி எதிர்ப்புக்களைச் சம்பாதித்துக் கொள்ளுமோ என்பது ஒருபுறமிருக்க சிங்கள ஆட்சியாளர்கள் இத்தனைதூரம் இராணுவ ஆட்சேர்ப்புக்கு மேற்கொள்ளும் முயற்சியானது சிங்கங்கள் சீறியெழ அஞ்சுவதனையும், துட்டகைமுனுக்கள் துவண்டுபோய் விட்டதையுமே காட்டுபவையாக உள்ளது.

**ரமணன்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அரசாங்கம் மரணிக்கும் முன் இராணுவத்தை பலியிட முனைகிறது



மாங்குளத்திலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் கிளிநொச்சியிலும் ஜூன் மாதத்தின் முதல் பத்து நாட்களுக்குள் நடந்த பலத்த சண்டைகளின் தொடராக அடுத்தடுத்த வாரங்களிலும் சண்டைகள் சில இடம்பெற்றன. ஆயினும் முன்னைய மோதல்கள் போன்று உக்கிரமானவையாக அவை இருக்கவில்லை. இந்த வகையில் இச் சண்டைகள், "ஜெயசிக்குறுய்" நடவடிக்கை தொடர்ந்து கொண்டிருக்கின்றது என்பதை ஒருபுறம் வலியுறுத்துவதாக இருப்பதற்காகவும் அதே சமயம் கள நிலவரத்தில் ஏதாவது மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா? அல்லது ஏற்படுத்த முடியுமா? என்பதை அவதானிக்கும், பரீட்சிக்கும் நோக்கம் கொண்டவையாக இருக்கலாம் என்றே கருத இடமுண்டு.

மேமாதம் 28–ம் திகதி சுமார் ஐந்துவார கால இடைவெளியின் பின்னர் "ஜெயசிக்குறுய்" துருப்புக்கள் ஆரம்பித்த நகர்வு முயற்சியும் அதன் பின்னர் ஜூன்மாத ஆரம்பத்தில் கிளிநொச்சியிலும் மாங்குளத்திலும் அம்பகாமத்திலும் மாறிமாறி மேற்கொண்ட முயற்சிகளும் அரசைப் பொறுத்து அரசியல் நோக்கில் மிக முக்கியமானவையாகவும் அவசியமானவையாகவும் இருந்தன.

ஒருபுறம் இராணுவம் மாங்குளத்திற்கென ஏற்கனவே பல மாதங்கள் போரிட்டுத் தோல்வி கண்டிருந்தது. இது இராணுவத்தைப் பொறுத்து ஓர் கௌரவப் பிரச்சினையாகவும் இதேசமயம் ஜெயசிக்குறுவை முன்னெடுப்பதற்கு அவசியமானதாகவும் இருந்தது. இந்தவகையில் இராணுவம் மேற்கொண்ட இம் மும்முனை முயற்சியில் மாங்குளம், கிளிநொச்சி, அம்பகாமம் எப்பகுதியிலாயினும் போர் அனுகூலத்தை அது பெற்றிருக்குமானால், அதனால் ஜெயசிக்குறுவை அடுத்தகட்டத்திற்கு நகர்த்துவதற்கு அது உதவியாக இருந்திருக்கும். இதே சமயம் அரசியல் தலைமைக்கு ஜெயசிக்குறுய் நடவடிக்கை அதன் எதிர்காலத்தையே

> இழப்புக்களைக் கண்டு பின்வாங்க முடியாத ஓர் நெருக்கடிக்குள் சந்திரிகா அரசு சிக்கிக்கொண்டுள்ளது. இந்நிலையிலிருந்து அரசு விடுபட வேண்டுமானால் அவசியம் இராணுவம் முன்னோக்கிய நகர்வையோ அன்றிப் பாய்ச்சலையோ செய்யவேண்டி இருந்தது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தீர்மானிக்கும் சக்தியாக மாறியிருந்தது. அதாவது, இழப்புக்களைக் கண்டு பின்வாங்க முடியாத ஓர் நெருக்கடிக்குள் சந்திரிகா அரசு சிக்கிக் கொண்டுள்ளது. இந் நிலையிலிருந்து அரசு விடுபட வேண்டுமானால் அவசியம் இராணுவம் முன்னோக்கிய நகர்வையோ அன்றிப் பாய்ச்சலையோ செய்யவேண்டி இருந்தது.

அதிலும் ஆளும் கட்சி மாகாண சபைத் தேர்தலுக்குத் தயாராகிக் கொண்டிருக்கையில் அதற்கு இந் நகர்வு அவசியமானதாக இருந்தது. ஏனெனில் ஆளும் கட்சிக்கு இதைத் தவிர தேர்தலின் போது தனது சாதனைகளாகக் கூறிக்கொள்வதற்கு வேறு எதுவும் இருப்பதாக இல்லை.

இந்த நிலையில் மே மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கை பலத்த எதிர்பார்ப்புக்களையும் தேவையையும் கொண்டதாக இருந்தது. ஆனால் நடவடிக்கையின் விளைவுகளோ "பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான" கதை போன்றதாக மாறியிருந்தது. அதாவது நடவடிக்கையின் நோக்கத்தை அது நிறைவு செய்யாதது மட்டுமல்ல இராணுவ ஆளணி இழப்பை எந்தளவிற்குக் குறைக்க முடியுமோ அந்தளவிற்குக் குறைக்கு வேண்டும் எனத் திட்டமிட்டிருந்த இராணுவத் தலைமைக்கும் அரசாங்கத்திற்கும் பெரும் அடியாக விழுந்தது.


இதன் விளைவே அவசர அவசரமாக அரசாங்கம் பிரகடனம் செய்த செய்தித் தணிக்கை ஆகும். அதாவது இப்பெரும் இழப்பு அரசியலில் பாதகமான விளைவுகளை உண்டு பண்ணிவிடக்கூடாது என்பதனாலேயே ஆகும். ஆளும் கட்சியினரும், பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவும் என்னதான் கூறிக்கொண்டாலும் இச்செய்தித் தணிக்கையானது இராணுவ இழப்புக்களை மூடி மறைப்பதற்கான நடவடிக்கை என்பதில் எவருக்கும் ஐயம் இருக்கவில்லை.

ஆனால் இராணுவ இழப்பு அதிகமானதாக இருந்தபோதும் சரி செய்தித் தணிக்கையினால் அவற்றை மூடிமறைத்துவிடும் முயற்சி தோல்வி கண்டுவிட்ட போதிலும் சரி அர



சாங்கத் தரப்பினால் இராணுவ நடவடிக்கையை நிறுத்தி வைக்க முடியவில்லை என்றே கூறவேண்டும். அதனையே கள நிலவரமும் உணர்த்துகின்றது. அதாவது இராணுவ வெற்றி என்பது காலத்தின் கட்டாய தேவையாக ஆட்சியாளர்களுக்கு உள்ளது.

இந்த நிலையில்தான் தற்பொழுது செய்தித் தணிக்கையுடன் கூடிய ஒரு பிரச்சார யுத்தத்தையும் அதே சமயம் ஓரளவு மட்டுப்படுத்தப்பட்ட அளவினதான இராணுவ நடவடிக்கையையும் அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. இதன் மூலம் ஜூன்மாத ஆரம்பத்தில் ஏற்பட்ட இழப்புக்களின் மூலம் இராணுவம் தளர்வடையவில்லை என்பதையும் இராணுவம் முன்னேறிக்கொண்டிருக்கின்றது என்றதொரு பொய்யான தோற்றப்பாட்டினை ஏற்படுத்தவும் அரசாங்கம் முனைகிறது எனலாம்.



அத்தோடு, இத் தந்திரோபாயமானது ஒருபுறம் யுத்தத்தில் இராணுவம் பேரிழப்பைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது எனவும், இது சந்திரிகா அரசின் தவறான வழிநடத்தலின் விளைவு என்ற ரீதியில் அரசாங்கத்திற்கு எதிராக எழுந்த எதிர்ப்புணர்வை மாறச்செய்யும் நோக்கம் கொண்டதாகவும் உள்ளது.

இதே சமயம் மாகாணசபைத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கையில் அரசின் செல்வாக்கு வீழ்ச்சியடையுமானால் அதனை மீளவும் கட்டியெழுப்ப முடியாது என்ற நிலையில் அரசாங்கத்தின் செல்வாக்கை மீளக் கட்டி நிமித்தும் நோக்கம் கொண்டதாகவும் அமைகின்றது. ஆனாலும், இத் தந்திரோபாயமானது தனியாக அரசியல் குறிக்கோள் கொண்டது மட்டும் தானா, இவ் யுக்தியின் இராணுவ இலக்கு என்ன என்ற கேள்வியும் இல்லாமல் இல்லை.

ஆகையினால் ஜெயசிக்குறு நடவடிக்கை ஓயவில்லை என்பதை காட்டுவதற்கும் அப்பால், ஜூன் மாதத்தின் நடுப்பகுதியில் இராணு



www.tamileelamarchive.com

வம் மேற்கொண்ட மூன்று இரா ணுவ நகர்வும் எந்தளவிற்கு? எந்த வகையில் இராணுவ தந்திரோ பாயத்துடன் தொடர்புபட்டது என்ற கேள்வியும் பலமாகவே உள்ளது.

அதாவது போர் முனையை என் றும் பதட்ட நிலையில் வைத்திருப் பதன் மூலம் புலிகளைக் களைப்ப டையச் செய்யலாமென இராணுவம் கருதுகின்றதா? அன்றி புலிகளின் பாதுகாப்பு நிலைகளில் எங்காவது "பொத்தல்" உண்டா? அல்லது பெரி யளவிலான படை நகர்வு முயற்சிக்கு முன்னோடி நடவடிக்கைகளாக இவற்றை இராணுவம் மேற்கொள் கின்றதா? என்ற கேள்வியும் இல் லாமல் இல்லை.

ஆனால் எது எவ்வாறு இருப்பி னும் ஜெயசிக்குறுய் நடவடிக்கையில் இராணுவம் பெரும் பாதிப்பிற்கும் களைப்பிற்கும் உள்ளாகியுள்ளது என்பது வெளிப்படையானது. இதே சமயம் சிறீலங்கா இராணுவத் தலைமையும் தனது திறனாற்றலை இந்நடவடிக்கைக்கு என முழுமை யாகப் பயன்படுத்திக் கொண்டுள் ளது என்பதும் மறுக்கமுடியாதது.

எவ்வாறு இருப்பினும் இராணுவ– அரசியல் யதார்த்தமானது ஜெயசிக் குறுய் நடவடிக்கை கைவிடமுடி யாததொரு நிர்ப்பந்தத்தையே அர சிற்கு ஏற்படுத்தி இருக்கின்றது என்றே கொள்ளலாம். அதாவது ஜெயசிக்குறுய் நடவடிக்கையைக் கைவிட்டு இராணுவத்தைப் பின் வாங்குவது என்பது அரசாங்கத் தைப் பொறுத்து தற்கொலைக்கு ஒப்பானது என்றே கருதப்படுகின்றது.

> ஜெயசிக்குறுவை மேலும் நகர்த்திச் செல்வதன் மூலம் இராணுவத்தைக் கொலைக் களத்திற்குள் நகர்த்திச் செல்வதா? அன்றி இராணுவத்தைப் பின்வாங்கிக் கொள்வதன் மூலம் அரசாங்கம் தற்கொலை செய்துகொள்வதா? என்பது இன்று அரசாங்கத்தின் முன்னுள்ள பலமான வினாவாகும்.

இந்த நிலையில் ஜெயசிக்குறுவை மேலும் நகர்த்திச் செல்வதன் மூலம் இராணுவத்தைக் கொலைக் களத் திற்குள் நகர்த்திச் செல்வதா? அன்றி இராணுவத்தைப் பின்வாங்கிக் கொள்வதன் மூலம் அரசாங்கம் தற்கொலை செய்துகொள்வதா? என்பது இன்று அரசாங்கத்தின் முன்னுள்ள பலமான வினாவாகும். ஆனால் தேசிய நலன் என்பதைவிட தமது ஆட்சி அதிகாரத்தைப் பற்றி யும், தமது நலனைப் பற்றியுமே சிந்திக்கும் அதிகாரத்திலுள்ள ஆட்சி யாளர்கள் தமது அதிகாரத்தை இழப்பதைவிட இராணுவத்தைப் பலியிடவே விரும்புவர். ஆகையி னால், இராணுவம் எவ்வளவு இழப் புகளைச் சந்தித்தாலும் "ஜெயசிக் குறுய்" நடவடிக்கை தொடரவே செய்யும். இதன் சமிக்ஞைகளாகவே மீண்டும் அரசாங்கம் ஆரம்பித் துள்ள பொய்ப் பிரச்சாரமும், இரா ணுவ நகர்வுகளும் உள்ளன. ஆனால் இதன் இறுதி விளைவு இராணுவம் அழிவதாக மட்டுமிராது. சந்திரிகா அரசின் அழிவும் அதிலேயே தீர் மானிக்கப்படுவதாகவே இருக்கும்.

**ரமணன்**

# புதுடில்லியில் அத்வானியிடம் வாங்கிக் கட்டிய கதிர்காமர்

**தமிழக சஞ்சிகை தகவல்**

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானியிடம் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் பற்றிக் கருத்துத் தெரிவித்து நன்றாக வாங்கிக் கட்டிக்கொண்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜோர்ஜ் பெர்ணான்டஸிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பு இருப்பதாக சொல்லப்படுவது குறித்து கதிர்காமர் குறிப்பிட்ட போது எமது அமைச்சரின் செயற்பாடுகளை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம் எனக் காட்டமாக அத்வானி பதிலளித்ததாகவும், புலிகளை அடக்குவதாகச் சொல்லிக்கொண்டு ஈழப்பிரச்சினையைத் தீர்க்காமல் இருப்பது எந்தவகையில் நியாயம்? எனச் சுடச்சுட திருப்பிக் கேட்டதாகவும் அச்செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

அரசியல் மொழியில் நாகரீகமாக பேசக்கூடியவர் எனப் புகழப்படும் கதிர்காமருக்கு இது பலத்த அடி எனவும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


## பல முனைகளில் தொடர் தாக்குதல்

# ஜயசிக்குறுவின் புதிய தந்திரோபாயம்!

ஜூன் மாதத்தின் ஆரம்பத்தில் இடம்பெற்ற நான்குநாள் தொடர்ச்சியான பலத்த சண்டைகளின் பின்னர் வன்னிப் போர்க்களம் சற்று ஓய்ந்தது. ஆனால், இது நிரந்தரமானதல்ல. எப்பொழுது வேண்டுமானாலும் கடும்மோதல்கள் வெடிக்கலாம் என்ற எதிர்பார்ப்பிலேயே வன்னிப் போர்க் கள நிலை உள்ளது.

இக்கடும் சண்டைகள் அதற்கு முதல்வாரம் அதாவது, மே– 28–ஆம் திகதி இடம்பெற்ற மோதலின் தொடர் சம்பவமே ஆகும். ஏனெனில் மே 28–இல் ஆரம்பித்த நடவடிக்கையுடன் இணைந்ததாகத் திட்டமிட்ட இவ் இராணுவ நடவடிக்கைகள் எதிர்பாராத பின்னடைவினால் மீண்டும் ஒரு வாரத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டதெனலாம்.

**இராணுவ நகர்வுகளின் இலக்கு குறித்து பல கற்பிதங்களை உருவாக்கக்கூடிய நகர்வுகளைச் செய்வதன் மூலம் புலிகள் மத்தியில் குழப்பத்தை உண்டுபண்ணும் அதேவேளை முக்கிய கேந்திர நிலைகளை மாறிமாறித் தாக்குவதும் கிடைக்கும் வாய்ப்பினை பயன்படுத்தி புலிகளின் முன்னணிப் பாதுகாப்பு நிலைகளை ஊடறுத்து உட்புகுவதன் மூலம் புதிய பகுதிகளை ஆக்கிரமித்துக் கொள்வதும் ஜயசிக்குறுவின் புதிய தந்திரோபாயமாகும்.**




'ஜயசிக்குறு' படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு ஒருவருடம் பூர்த்தியாகிவிட்ட நிலையில், இப்படை நடவடிக்கையை விரைவிலேயே முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என இராணுவத்தரப்பும்– அரச தரப்பும் தீவிர அக்கறை கொண்டிருந்தன. இதற்கென புதிய இராணுவ



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தந்திரோபாயத்திலும் அக்கறை காட்டப்பட்டது.

இந்த வகையில், மே 28–ம் திகதி 'ஜயசிக்குறு' படை நகர்வு ஆரம்பிக்கப்பட்டபோது அது தொடர்ச்சியான நகர்வுத் திட்டங்கள் பல வற்றைக் கொண்டிருந்தது. இந் நகர்வுத் திட்டங்களானது விடுதலைப்புலிகளுக்கு பல முனைகளில் அழுத்தம் கொடுப்பதாகவும்– அதே சமயம் அவர்கள் மத்தியில் குழப்பத்தை உண்டுபண்ணுவதாக இருந்த தோடு, சில கேந்திர நிலைகளைக் கைப்பற்றும் நோக்கம் கொண்டதாகவும் இருந்தது.

இராணுவம் வகுத்துக் கொண்ட இத் தந்திரோபாயமானது. மண் பானையில் ஓட்டையையோ வெடிப்பையோ கண்டறிவதற்கு அதனைச் சுற்றிச் சுற்றி சுண்டிப்பார்ப்பது போன்றதாக இருந்தது. அதாவது, புலிகளின் பாதுகாப்பு அரண்களில் எப்பகுதியில் ஓட்டைகள் உள்ளனவோ அவற்றிற்கூடாக, நுழைதல் அல்லது புகுந்துவிடுதல் என்பதை குறியாகக் கொண்டிருந்தது.

முதலில் மே 28–ல் நடவடிக்கையை ஆரம்பித்த இராணுவம் பழைய கண்டிவீதியில் உள்ள அம்பகாமம் கிராமத்தை – சந்தியைக் குறியாகக் கொண்டது. அடர்ந்த காட்டின் ஊடாக அம்பகாமத்திற்கு கிழக்கே பல கிலோமீற்றர் தொலைவின் ஊடாக நகர்ந்து அம்பகாமத்தின் பின்புறத்தை அதாவது, வட பகுதியை அடைவதன் மூலம்– புலிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கி அப் பகுதியைக் கைப்பற்றிக் கொள்வதே நோக்கமாக இருந்தது. இது புலிகளின் பாதுகாப்பு நிலைகளுக்கு பின்புறமாகத் தாக்குவதன் மூலம் புலிகளை நிலைகுலையச் செய்து அம்பகாமம் பகுதியைக் கைப்பற்றிக் கொள்ளுதல் ஆகும்.

இவ்வாறு அம்பகாமம் பகுதியைக் கைப்பற்றிக் கொள்வதன் மூலம் புலிகள் தரப்பில் பலத்த குழப்பங்கள் உருவாகும் என இராணுவத் தரப்பினால் கருதப்பட்டது. இதில் முக்கியமானதாக இராணுவம் பழைய கண்டிவீதி ஊடாக நகர முற்படுகின்றதா என்ற கேள்வியைப் பலமாக உருவாக்குதல் ஆகும். இதன் மூலம், பிரதான வீதியில் தனது படையணிகளை நிறுத்தி வைத்தல் குறித்து புலிகள் பலமாகச் சிந்தனை செய்ய வேண்டியும், குழப்பத்திற்கு உள்ளாக வேண்டியும் வரும் எனவும் இராணுவத் தரப்பு எதிர்பார்த்தது.

ஆனால், எதிர்பார்த்தது போன்று அம்பகாமம் பகுதி நோக்கிய நகர்வு வெற்றி பெறவில்லை. இது இராணுவத் தரப்பிற்கு பலத்த இழப்பை மட்டுமல்ல, குழப்பத்தையும் ஏற்படுத்தியதெனலாம். அதாவது இராணுவம் எதிர்பார்த்ததற்கு மாறாக புலிகளின் அவதானிப்பு நீண்ட தொலைவிற்கு உள்ளதென்பது இதன் மூலம் வெளிவந்தது. இந்த நிலையில் ஆரம்பத்தில் திட்டமிட்டவாறு இராணுவத்தால் அடுத்த கட்ட முயற்சியை மேற்கொள்ள முடியவில்லை.

ஆயினும், ஒருவார கால தாமதத்தின் பின்னர் அடுத்த கட்ட நகர்வை ஜூன் 4–ம் திகதி கிளிநொச்சியில் இராணுவம் மேற்கொண்டது. இந் நகர்வு முயற்சியானது அம்பகாமத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி போன்றதல்லாது– நேரடியான மோதலாக இராணுவம் ஆரம்பித்தது. புலிகளின் நிலைகளை ஊடறுத்து உட்புகுந்து ஏற்கனவே கடந்த பெப்ரவரியில் புலிகளிடம் பறிகொடுத்த பிரதேசத்தைக் கைப்பற்றுவதே இதன் குறிக்கோளாகும்.

இந் நடவடிக்கை மூலம் புலிகளுக்கு பெரும் உயிர்ச் சேதத்தை ஏற்படுத்துவது மட்டுமல்ல, 'ஜயசிக்குறு' நடவடிக்கை இரு எதிர் எதிர் முனைகளில் இருந்தும் ஆரம்பிக்கப்பட்டு விட்டது என்ற தோற்றப்பாட்டை உருவாக்குவதும் இராணுவத்தின் குறியாக இருந்தது.

ஆனால், கிளிநொச்சியிலும் இராணுவம் எதிர்பாராத அளவில் புலிகளின் பதிலடி நடவடிக்கை இருந்தது. மே 28–ல் இருந்து ஜூன் 08–ஆம் திகதிவரை இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் ஜூன் 04–ல் கிளிநொச்சியில் இடம்பெற்ற மோதலே உக்கிரமானதாகவும்–கடுமையானதாகவும் இருந்தது.



புலிகளின் சில நிலைகளை ஊடறுத்துப் புகுந்த சிறீலங்கா இராணுவம் புலிகளின் உக்கிரமான பதிலடியினால் பலத்த உயிரிழப்பைச் சந்திக்க வேண்டி வந்தது. ஆரம்பத்தில் இச் சண்டையில் 200–க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டும், 400 பேர் காயமடைந்தமையும் ஊர்ஜிதப்படுத்தப்பட்ட தகவலாக வெளிவந்திருப்பினும் அதன் பின்னர் வெளியான



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அரசதரப்பு தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிட்டால் இழப்பின் தொகை இன்னமும் அதிகமானதாக இருக்கும் என்றே கணிப்பீடு செய்யக்கூடியதாக உள்ளது. இது கடந்த டிசம்பரில் மன்னகுளத்தில் இராணுவம் பெற்ற அடிக்கு அடுத்த பெரிய அடியாக இருந்தது எனலாம்.

இவ்வாறு கிளிநொச்சியில் ஏற்பட்ட இழப்பானது சந்திரிகா அரசினை இராணுவ, யுத்தச் செய்திகளுக்குத் தணிக்கையைக் கொண்டு வரும் நிலை வரைக்கும் கொண்டு சென்றது. அரசாங்கத் தரப்பு அவசர அவசரமாகக் கொண்டுவந்த இச் செய்தித் தணிக்கைக்கு என்ன காரணங்களைக் கூறிக் கொண்டாலும், இதனை எவருமே ஏற்றுக் கொள்வதாக இல்லை.

ஆனால், கிளிநொச்சியில் பலத்த அடிவாங்கிய போதும் இராணுவத் தலைமை தனது அடுத்தகட்ட நகர்வை கைவிடவில்லை. அடுத்த நாள் அதாவது ஜூன் 05–ஆம் திகதி அம்பகாமம் நோக்கி கிழக்கு மேற்காக இரு நகர்வு முயற்சிகளை மேற்கொண்டது. ஆயினும் இந் நகர்வு முயற்சிகளும் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து அடுத்த நாள் மாங்குளம் நோக்கி அதன் தென் கிழக்கில் இருந்து நகர்வு முயற்சி இராணுவத்தால் மேற்கொள்ளப் பட்டது. இம்முயற்சியானது புதிய தந்திரோபாயத்தின் மற்றுமோர் அங்கமாகும். ஏனெனில் மூன்றாவது மையத்தில் தொடங்கப்பட்ட நடவடிக்கையாக இருந்தது.

அதாவது அம்பகாமம், கிளிநொச்சி என்பனவற்றிற்கு அடுத்ததாக மாங்குளம் நோக்கியதாக இது இருந்தது. இது 'ஜயசிக்குறு' நடவடிக்கையை நகர்த்திச் செல்வதற்கான சகல கேந்திர நிலைகளையும் இராணுவம் தாக்குவது போன்றதானதொரு நிலையை உருவாக்குவதாக இருந்தது. ஆனால் இம்முயற்சியும் விடுதலைப் புலிகளின் பதிலடியினால் முறியடிக்கப்பட்டது.

ஆயினும், அடுத்த நாளும் இராணுவம் புதிய முயற்சிகளை மேற்கொண்டது. அம்பகாமம், மாங்குளம் ஆகிய பகுதிகள் மீது தாக்குதலைத் தொடுத்தது. ஆனால், புலிகள் இவ்விரு பகுதிகளிலும் இராணுவத்தினை எதிர்கொண்டு இராணுவத்தினரின் முயற்சியை முறியடித்தனர்.

**இராணுவம் எதிர்பார்த்த வெற்றியைப்பெறவில்லை என்பது மட்டுமல்ல, எதிர்பாராத அளவில் இழப்புக்களையும் சந்திக்க வேண்டியும் வந்தது.ஒட்டுமொத்தமாக ஐந்து தினங்கள் நடந்த இச்சண்டையில் மட்டும் 1500—க்கு மேற்பட்ட இராணுவத்தினர் காயமடைய வேண்டிவந்ததென பாராளுமன்றத்தில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஒப்புக்கொள்ள வேண்டிய அளவிற்கு நிலைமை இருந்தது.**

இத் தொடர் நடவடிக்கையின் இறுதித் தாக்குதலை அடுத்த நாள் இராணுவம் கிளிநொச்சியில் மேற்கொண்டது. நான்கு தினங்களுக்கு முன்னதாக கிளிநொச்சியில் மேற்கொண்ட தாக்குதலை ஒத்ததாகவே இருந்த இத்தாக்குதலானது ஏறத்தாழ அதை ஒத்ததான ஒரு பதிலடியையே விடுதலைப் புலிகளிடம் பெற்றுக் கொண்டது.

இந்த வகையில் ஓராண்டு நிறைவின் பின்னர் 'ஜயசிக்குறு' துருப்புகள் மேற்கொண்ட புதிய நகர்வு முயற்சிகள் புலிகளால் முறியடிக்கப்பட்ட புதிய தந்திரோபாயத்தைக் கேள்விக்குள்ளாக்கும் நிலை வரையிலும் கொண்டு சென்றுள்ளது. அதாவது இராணுவத்தின் நடவடிக்கையின் நோக்கம் குறித்து புலிகளுக்கு குழப்பத்தை உண்டுபண்ணுவதோடு பல முனைகளில் தாக்குதலை ஆரம்பித்தல் மூலம் புலிகளின் பலத்தை சிதறடித்தல் என்ற தந்திரோபாயம் தோல்விகளுக்குள்ளான தெனலாம்.

இப் புதிய நகர்வு முயற்சியின் போது அம்பகாமம் நோக்கியதாக இராணுவம் மூன்று தடவையும் மாங்குளம் நோக்கியதான இரண்டு தடவையும், கிளிநொச்சி நோக்கிய தான இரண்டு தடவையும் நகர்வு முயற்சிகளை மேற்கொண்டது. மறுவளமாக கூறுவதானால் இன்று யுத்த களப் பிரதேசத்திலுள்ள மூன்று கேந்திர நிலைகளையும் இராணுவம் ஏழு தடவைகள் இக்காலப் பகுதிக்குள் தாக்கியுள்ளது. இதில், கிளிநொச்சியில் நடத்தப்பட்ட இரு தாக்குதல்களையும் தவிர மற்றைய தாக்குதல்கள் அனைத்தும் வெவ்வேறு முனைகளில் நடத்தப்பட்டவையாகும்.

ஆனால், இதில் இராணுவம் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை என்பது மட்டுமல்ல, எதிர்பாராத அளவில் இழப்புக்களையும் சந்திக்க வேண்டியும் வந்தது. ஒட்டுமொத்தமாக ஐந்து தினங்கள் நடந்த இச் சண்டையில் மட்டும் 1500—க்கு மேற்பட்ட இராணுவத்தினர் காயமடைய வேண்டி வந்ததென பாராளுமன்றத்தில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஒப்புக்கொள்ள வேண்டிய அளவிற்கு நிலைமை இருந்தது. இதன் மூலம், புதிய தந்திரோபாயத்தின் மற்றொரு அங்கமாக இருந்த இராணுவ ஆளணி இழப்பைக் குறைத்தல் என்ற குறிக்கோளுக்கும் புலிகள் பலமான அடி ஒன்றைக் கொடுத்தனர்.

இதேசமயம், 400—க்கு அதிகமான இராணுவத்தினை பலி கொடுத்துவிட, 1500—க்கும் மேற்பட்ட இராணுவத்தினருக்கு காயங்களையும் உண்டாக்கிய இப் புதிய தந்திரோபாயமானது 'ஜயசிக்குறு' நடவடிக்கையை ஓரளவேனும் முன் நகர்த்த உதவவில்லை என்பது மிக முக்கியமானது. ஆகையினால், 'ஜயசிக்குறு' நடவடிக்கையானது மேலும் புதிய தந்திரோபாயங்களை வேண்டி நிற்பது தவிர்க்க முடியாததொன்றாகவே மாறிவிட்டது.

–ஜெயராஜ்–



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# யுத்தம் வெற்றி நோக்கிச் செல்வதாக அரசால் எவ்வாறு கூறமுடியும்!

"யுத்தம் ஒரு தீர்க்கமான கட்டத்தை அடைந்துவிட்டது. விரைவில் யுத்தம் முடிவிற்குக் கொண்டுவரப்படும்"

—அரசதரப்பு அறிவிப்பு.

"அண்மைய மோதல்களில் 400–ற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். 2000–ற்கும் மேல் காயமடைந்துள்ளனர். இச் சண்டை பற்றிய தகவல் வெளிவருவது செய்தித்தணிக்கையால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது."

—பாராளுமன்றத்தில் ரணில்


அண்மையில் இடம்பெற்ற மோதல்களில் 800–ற்கும் மேற்பட்ட படையினரை இராணுவம் இழந்துள்ளது. ஆனால் இதை வெளியிடவோ அன்றி பிரசுரிக்கவோ முடியாது செய்தி ஊடகங்களுக்கு தணிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

– பி.பி.ஸி சிங்கள சேவை.

யுத்த முனைகளில் நடக்கும் சம்பவங்களை அவ்வப்போது அவதானித்துச் சேகரித்து வருகின்றோம். செய்தித் தணிக்கை அடுத்த வாரமோ அன்றி அடுத்த மாதமோ அல்லது அடுத்த வருடமோ நீக்கப்படும் போது வாசகர்களுக்கு நிச்சயம் அறியத் தருவோம். அதுவரை வாசகர்கள் அம்புலன்ஸ் வண்டிகளின் சைரன் சத்தங்களையும் இரத்த தானம் செய்யுமாறு தேசிய வைத்திய சாலை வைத்தியர்கள் விடுக்கும் கோரிக்கைகளையும் பார்த்தால் அங்கு என்ன நடக்கின்றது என்று ஊகித்துக் கொள்ளலாம்.

– ஐலண்ட் பத்திரிகையின் பாதுகாப்புத்துறைச் செய்தியாளர்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் அண்மைக் கால இழப்புக்கள் போன்று சிறீ லங்கா இராணுவம் தொடர்ச்சியான பெரும் இழப்புக்களைச் சந்தித்ததில்லை. கடந்த மூன்றாண்டு காலத்தில் – மூன்றாம் கட்ட ஈழப்போரில் 8000–ற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பலியாகியுள்ளதாக சிறீலங்கா அரசே ஒப்புக்கொள்கிறது. இவ் அளவானது சிறீலங்கா இராணுவம் முதலாம், இரண்டாம் கட்ட ஈழப்போர்கள் இடம்பெற்ற 12 வருடங்களில் சந்தித்துள்ள இழப்பைவிட அதிகமானதாகும்.



அதிலும் குறிப்பாக "ஜெயசிக்குறுய்" படை நடவடிக்கையில் இராணுவம் சந்தித்து வரும் இழப்பானது மிகவும் அதிகரித்த அளவினதாகும். இவ்வருட மே 28–ம் திகதிக்கும் ஜூன் 9–ம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் ஜெயசிக்குறுய் துருப்புக்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலே இவ்விழப்பு வீதாசாரம் உச்சக்கட்டத்திற்குச் சென்றுகொண்டிருப்பதை வெளிக்காட்டுவதாக உள்ளது.


மேற்குறிப்பிட்ட கால மோதல்களில் சிறீலங்கா இராணுவம் சந்தித்த பெரும் இழப்பினால் அரசாங்கம் செய்தித் தணிக்கையை பிரகடனப் படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானது. அவ்வாறிருந்தும், பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டப் பிரேரணையின் போது பேசிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவிற்கு இழப்புக்களின் குறைந்த மட்ட அளவினையாவது கூறவேண்டிய நிர்ப்பந்தம் எழுந்திருந்தது.

இந்த வகையில் 10 அதிகாரிகள் உட்பட 208 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் இரு அதிகாரிகள் உட்பட 65 படை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




புலிகள் எதிர்கொண்ட மரபுவழிச்சமர்களில்
ஒரு போராளிக்கு இராணுவ இழப்பு விகிதாசாரம்

யினரைக் காணவில்லை எனவும், 61 அதிகாரிகள் உட்பட 1536 பேர் காயமடைந்ததாகவும்– இதில் 206 பேர் மோசமான காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனப் பாராளு மன்றத்தில் அவர் ஒரு புள்ளி விபரத்தைக் கொடுக்கவேண்டி இருந்தது.

ஆனால், இவ்வாறு புள்ளி விபரங்களை வெளியிட்ட பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த இவை உறுதியானவையும், முழுமையானவையும் இல்லை என்பதையும் பிரதிபலித்தே விட்டார் என்றே கூறலாம். அவர் தனது உரையில் "நாடு யுத்தத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் சகல தகவல்களையும் வெளியிட முடியாது. இவ்விடயம் தெடர்பாக, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தனிப்பட்ட முறையில் தகவல்களை வழங்கத் தயார்" எனக் குறிப்பிட்டமை அவர் யுத்தம் குறித்து மேலதிக தகவல்களைக் கொண்டிருப்பதையே காட்டுவதாயுள்ளது.

இந்த நிலையில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளது போன்று 400 இராணுவத்தினர் கொல்லப்பட்டோ அன்றி 2000–ற்கு மேற்பட்டோர் காயத்திற்கு உள்ளாகியுமுள்ளனர் என்ற தகவல்கள் முற்றிலும் சரியானதும் அதே சமயம் ஓர் குறைந்த மட்ட அளவினதானது என்றுமே கொள்ளலாம். ஏனெனில் பி.பி.ஸி யின் சிங்கள சேவையான சந்தேசிய 800 இராணுவத்தினர் பலியாகியிருக்கலாம் என்ற கூற்று நிராகரிக்கப்படக்கூடியதொன்றல்ல. ஏனெனில் தாண்டிக்குளத்திலும் மன்னகுளத்திலும் பேரிழப்பைச் சந்தித்த போதும் செய்தித் தணிக்கையை அமுல் செய்யாத அரசு தற்பொழுது செய்தித் தணிக்கையை அமுல்செய்துள்ளது என்பது இழப்பின் தொகை அதிகம் என்பதையே வெளிக்காட்டும் குறிகாட்டியாக உள்ளது.

இவ்வாறான உயர்ந்த பட்ச இராணுவ இழப்பானது தரைவழிப் பாதை திறப்பதென்பதை பெரும் கடினமாக்கியுள்ளதோடு, அதற்காக இராணுவம் கொடுக்கும் விலை அதிகரித்ததொன்றாக மாறியுள்ளது. அதாவது கடந்த 13 மாத ஜெயசிக்குறுய் களச் சண்டைகளில் இராணுவம் குறைந்தது 3500 பேர் வரையில் இழந்துள்ளது. 9000 படையினர் வரையில் காயத்திற்கு உள்ளாகியுள்ளனர். இது சிறீலங்கா இராணுவத்தைப் பொறுத்து ஒரு மோசமான புள்ளி விபரமாகும்.

இந்த வகையில் பார்க்கையில் இராணுவம் ஒரு கிலோ மீற்றரைக் கைப்பற்ற 110 பேர் வரையில் பறிகொடுத்துள்ளதோடு கிலோமீற்றருக்கு 250 பேருக்கு மேல் காயமடையவும் நேர்ந்துள்ளது. இவ் வீதமானது புளியங்குளம் வரையில் ஒரு கிலோமீற்றருக்கு 30 எனவும் புளியங்குளத்திலிருந்து கனகராயன் குளம் வரையும் ஒரு கிலோ மீற்றருக்கு 60 எனவும் இருந்த நிலை தற்பொழுது முன்னேற்றம் எதுவும் அற்ற ரீதியில் கிலோ மீற்றருக்கு 110 என்ற நிலையை அடைந்துள்ளது.

இப்போக்கானது ஜெயசிக்குறுய் நடவடிக்கையானது பெரும் இழப்புக்களுடன் கூடியதாக மாறிவிட்டது என்பதை உறுதிசெய்யும் ஒன்றாகியுள்ளது. இதற்கு மரபுப் போர் வழிமுறையில் விடுதலைப் புலிகள் கண்டுகொண்டுள்ள கணிசமான வளர்ச்சி முக்கிய காரணிகளில் ஒன்றாகும். அதாவது படிப்படியாக மரபுப் போர் வழிமுறையில் வளர்ச்சி கண்டு வந்த புலிகள் இன்று சிறீலங்கா இராணுவத்தைவிட மரபுப் போர் வழி முறையிலும் தொழில்சார் சிறப்புடன் செயற்படுவதையே வெளிப்படுத்துபவர்களாக உள்ளனர்.

இவற்றினை ஒப்பரேசன் பலவேகயவுடன் தற்பொழுது தொடர்ந்து கொண்டிருக்கும் ஜெயசிக்குறுய் நடவடிக்கையை ஒப்பிடுவதன் மூலம் காணக்கூடியதாக உள்ளது. அதாவது புலிகள் ஒருபெரும் படையெடுப்பினை நீண்டகாலத்திற்கு எதிர் கொண்டு போரிடும் ஆற்றலையும் அதே சமயம் ஒப்பீட்டு ரீதியில் எதிர்த் தரப்பிற்கு தம்மைவிட அதிகரித்த இழப்பினை ஏற்படுத்தும் ஆற்றலையும் பெற்றுக் கொண்டுவிட்டனர் என்பதை அண்மைய சமர்கள் உணர்த்துகின்றன. இதனை இங்கு கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையும், வரைபடமும் தெளிவுபடுத்துகின்றன.

விடுதலைப்புலிகள் மரபு வழிப் போர்முறையில் எதிர்கொண்ட நடவடிக்கையில் ஆரம்பத்தில் புலிகளுடன் ஒப்பிடுகையில் இராணுவத்தின்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

| இராணுவ நடவடிக்கை | சண்டை நாட்கள் | இராணுவ இழப்பு | புலிகளின் இழப்பு | புலிகள் : இராணுவம் இழப்பு வீதம் |
|---|---|---|---|---|
| பலவேகய – 1991 | 31 | 400 | 602 | 1 : 0.66 |
| மின்னல் – 1991 | 29 | 300 | 238 | 1 : 1.28 |
| யாழ்தேவி – 1993 | 07 | 150 | 88 | 1 : 1.77 |
| சூரியக்கதிர் 1 – 1995 | 49 | 750 | 434 | 1 : 1.71 |
| சத்ஜெய – 1996 | 70 | 700 | 254 | 1 : 2.75 |
| ஜெயசிக்குறுய்– 1997 மே 13 முதல் 1998 ஜூன் 15 வரையில் | 400 | 3500 இற்குமேல் | 1400 | 1 : 2.5 |

இழப்பீடு குறைவாக இருந்ததையும் பின்னர் அது படிப்படியாக உயர்வடைந்து செல்வதையும் தெளிவாகவே அவதானிக்க முடிகின்றது. எடுத்துக் காட்டாக பலவேகய 1–ன் போது புலிகள்– இராணுவம் இழப்பு 1:0.66 என்பதாக இருந்தது. ஜெயசிக்குறுவில் 1:2.5 என்ற ரீதியில் மாற்றம் கண்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றில் – விடுதலைப் புலிகள் மரபுவழிப் போர் முறையில் சிறீலங்கா இராணுவத்தை முதன்முதலில் 1991–ல் ஒப்பரேசன் பலவேகய 1–ன் போது எதிர்கொண்டனர். இச்சமரானது விடுதலைப்புலிகளைப் பொறுத்து ஓரளவு பின்னடைவுடன் முடிவடைந்த சமர் என்றே கொள்ளுதல் வேண்டும். இச் சமரில் 602 விடுதலைப் புலிகள் வீரச்சாவடைந்தனர். இராணுவத் தரப்பில் 400 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இந்த வகையில் இராணுவம்–புலிகள் இறப்பு வீதமானது 1:1.5 என்ற ரீதியிலானதாக அமைந்தது. ஒப்பீட்டு ரீதியில் புலிகளுக்கு அதிகரித்த தொகையாகவும் இருந்தது. இது புலிகளின் முதலாவது மரபு வழிச் சமர் என்ற ரீதியில் அவர்களின் அனுபவமின்மை என்பதையும், புலிகளின் மரபுவழிச் சமருக்கேற்ற ஆயுத தளபாடங்களைக் கொண்டிருக்கவில்லை என்பதையும் வெளிப்படுத்துவதாக இருந்தது.

ஆனால் பலவேகய 1–ன் பின்னர் விடுதலைப் புலிகள், மின்னல்–1991, யாழ்தேவி–1993, சூரியக்கதிர்–1995, சத்ஜெய–1996, ஜெயசிக்குறுய்–1997/98 ஆகிய நடவடிக்கைகளை ஓரளவு மரபுவழிப் போர்முறை சார்ந்து எதிர்கொண்டனர். ஒப்பீட்டு ரீதியில் இந்நடவடிக்கைகளின் முடிவுகளானது பலவேகயவிற்கு மாறானதாக புலிகள் மரபு வழிப் போர் முறையில் மிக வேகமாக வளர்ச்சிபெற்று வந்துள்ளதை வெளிக்காட்டுவதாக இருந்தது. இதனை இராணுவத்தின் இழப்பு வீதத்துடன் புலிகளின் இழப்பு வீதத்தை ஒப்பிடுகையில் அது விரைவாக வீழ்ச்சி கண்டு வந்துள்ளதைக் கொண்டே அவதானிக்கமுடியும்.

அதாவது ஒப்பரேசன் பலவேகய 1–ல் 1:1.5 என இருந்த இராணுவம் புலிகள் இழப்பு விகிதாசாரம் மின்னலில் 1:0.79 எனவும் யாழ்தேவியில் 1:0.58 எனவும், சூரியக்கதிரில் 1:0.58 எனவும், சத்ஜெயவில்1:0.36 எனவும், ஜெயசிக்குறுவில் 1:0.40 எனவும் விரைவான ரீதியில் வீழ்ச்சி கண்டது. அதாவது புலிகள் விரைவான வேகத்தில் மரபுவழிப் படையணியாகச் செயற்படும் ஆற்றலும், திறனும் அதற்கு ஏற்றவகையிலான ஆயுத தளபாடங்களை ஓரளவேனும் பெற்றுக்கொண்டுள்ளமையும் வெளிப்படுத்துபவையாக அமைந்தன.

அதிலும் குறிப்பாக ஜெயசிக்குறுய் நடவடிக்கைகளில் 1:0.4 என்ற விகிதாச்சாரத்தை புலிகளால் வைத்துக் கொள்ள முடிந்தமையானது ஒரு வகையில் மிகப் பெரும் சாதனையே ஆகும். ஏனெனில், ஜெயசிக்குறுய் நடவடிக்கையானது இறுதிப்பெரும் படையெடுப்பு என்ற அறிவிப்புடன் சிறீலங்கா அரசினால் ஆரம்பிக்கப்பட்டதொன்றாகும். இதற்கென ஏற்கெனவே பெருமெடுப்பில் இராணுவம் பெரும் தயாரிப்பு நடவடிக்கைகளிலும் இறங்கியுமிருந்தது.

அதாவது சிறீலங்கா இராணுவம் இதுவரையில் மேற்கொண்ட பாரிய படை நடவடிக்கைகள் யாவற்றையும் விட நவீன ஆயுத தளபாடங்களை மட்டுமல்ல அவற்றை அதிகரித்த தொகையிலும் பயன்படுத்தியுள்ளது. ஆட்லறிகள், மோட்டார்கள், டாங்கிகள் என்பன முன்னெப்பொழுதும் இல்லாதளவில் உயர்ந்தளவில் பயன்படுத்தப்பட்டன. இதேபோன்று இராணுவத்தின் ஏனைய சுடுதிறனும் அதிகரிக்கப்பட்டதொன்றாகவே இருந்தது.

இதைத் தவிர இந் நடவடிக்கையானது தற்பொழுது 15 மாதங்களைக் கடந்துவிட்டது. இந்த நிலையில் இராணுவத்தின் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்திப் போரிட்டு வருவதோடு தமது இழப்புக்களைக் குறைந்த மட்டத்தில் பேணுவது என்பது நவீன மரபுவழிப் போர் முறையின் மிகவும் முன்னேற்றகரமானதாகும்.

அதிலும் ஜெயசிக்குறுய் படை நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் இராணுவ நகர்வுமுயற்சிகளின் போது மேற்கொள்ளும் பதிலடி நடவடிக்கைகள் மிகவும் முக்கியம் வாய்ந்தவையாக மாறியுள்ளன. அதாவது உலக ரீதியில் கெரில்லாப் போர் முறையில் பிரசித்தி பெற்றிருந்த விடுதலைப்புலிகள் மரபுவழிப் போர் முறையில் இராணுவத்திற்கு பாரிய சேதத்தை விளைவிக்கும் பதிலடி நடவடிக்கைகளிலும் இன்று முன்னுதாரணங்களை ஏற்படுத்துபவர்களாக மாறியுள்ளனர். இதற்குச் சிறப்பான எடுத்துக்காட்டாக கடந்த



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஆண்டு டிசம்பர் மாதம்4-ம் திகதி மன்னகுளத்திலும் இவ்வருடம் ஜூன் மாதம் 4-ம் திகதி கிளிநொச்சியிலும் விடுதலைப்புலிகள் ஜெயசிக்குறுய் துருப்புக்கள் மீது நடத்திய தாக்குதல்கள் சிறப்பான முன்னுதாரணங்களாகும்.

இவ்விரு தாக்குதல்களிலும் புலிகள்- இராணுவம் இறப்பு வீதாச்சாரம் 1:10-க்கும் மேலாக இருந்தது. இவ் வீதாச்சாரமானது நேரடிச் சண்டை என்ற ரீதியில், ஓர் மட்டுப்படுத்தப்பட்ட ஆளணி- ஆயுத தளபாட வசதிகளைக் கொண்ட அமைப்பினால் ஏற்படுத்துவதென்பது மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் சிறீலங்கா இராணுவத்தைப் பொறுத்து இது மிகவும் அச்சமூட்டத்தக்க அளவாகும்.

இவ்வாறாக ஒருபுறம் ஜெயசிக்குறுய் நடவடிக்கை முற்றுப்பெறாமல்நீடித்துக் கொண்டும் மறுபுறம் இராணுவத்திற்குப் பேரிழப்பை உண்டுபண்ணும் நடவடிக்கையாகவும் இருக்கையில் அரச தரப்பு எதனைக்கொண்டு யுத்தம் ஓர் தீர்க்கமான கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது எனக்கூறுவதை எவருமே விளங்கிக் கொள்வது கடினமானதொன்றாகவே நிச்சயம் இருக்கும்.

அத்தோடு ஜெயசிக்குறுய் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் முன்னரும்சரி, ஆரம்பிக்கப்பட்ட பின்னரும் சரி, தரைவழிப் பாதை திறப்பதைவிட அதனைப் பாதுகாப்பதும் தக்கவைப்பதுமே கடினமென இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்திருந்தனர். ஆனால் இன்று ஜெயசிக்குறுய் நடவடிக்கையே கேள்விக்குரியதாக மாறி இருக்கையில் பாதையைக் கைப்பற்றினும் அதனைப் பாதுகாப்பது பற்றி எவ்வாறு எதிர்வு கூறமுடியும்? அதாவது இன்றைய நிலையில் தரைவழிப் பாதை திறப்பானது யுத்தத்தை எவ்வாறு தீர்க்கமான முடிவிற்குக் கொண்டுவர உதவும் என்பது அரச தரப்பினருக்கே வெளிச்சம்.

**ஜெயராஜ்**

# போதைவஸ்துக்கு அடிமையான 400 சிறீலங்கா இராணுவத்தினர் பலாலி முகாமில் தடுத்துவைப்பு

## அமைச்சர் ரத்வத்த தெரிவிப்பு

போதைவஸ்து பழக்கத்துக்கு அடிமையான 400 இராணுவத்தினர் பலாலி இராணுவ முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார். வீக் எண்ட் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

படை முகாம்களில் கடமை இல்லாத நேரத்தில் படையினருக்கு சிகரட், மதுபானம் என்பவை வழமையாக வழங்கப்படுகிறது எனவும் ஆனால் கடுமையான போதைப் பொருட்கள் வழங்கப்படுவதில்லை எனவும் தெவித்த அவர் விடுமுறைக்கு வீட்டிற்குச் செல்லும் படையினர் நண்பர்களுடன் சேர்ந்து போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானதாகவும் தெரிவித்தார்.

தப்பியோடிய படையினரைக் கைதுசெய்யும் நடவடிக்கையை மேற்கொண்டபோது கைதான படையினரில் 400 பேர் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களாக உள்ளனர். இவர்கள் பலாலி இராணுவ முகாமின் சிகிச்சை முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இராணுவப் பயிற்சி பெற்றவர்களாக இருப்பதால் தென்பகுதியில் வைத்திருந்தால் தப்பியோடக்கூடிய வாய்ப்பு உண்டு. ஆனால் யாழ்ப்பாணத்தில் அவர்களால் ஓட முடியாது.

தப்பியோடிய இராணுவத்தினரில் பலர் கைதாகியுள்ளதைத் தொடர்ந்து தென் பகுதியில் குற்றச்செயல்கள் 50 சதவீதம் குறைந்துள்ளன.

தப்பியோடிய படையினர் கைதாகும்போது உடனடியாக அவர்கள் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்படுகின்றனர். அங்கு இரண்டுவார கால யுத்தப் பயிற்சி பெற்றபின் யுத்தமுனைக்கு அனுப்பப்படுகின்றனர் என பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கூடைக்குள் போட்டு மூடினால் சேவல் கூவாது போகுமா?

ஜூன் மூன்றாம் திகதி சிறீ லங்கா அரசு அவசரகாலச் சட்டங்களின் கீழ் இராணுவ யுத்த களச் செய்திகளை தணிக்கைக்கு உட்படுத்துவதாக அறிவித்ததுடன் இதற்கு பத்திரிகைக் கவுன்சில் ஆணையாளர் ஒருவர் இருப்பினும் கூட சிறீலங்கா இராணுவ ஜெனரல் ஒருவரை தணிக்கை அதிகாரியாக வும் நியமித்துள்ளது.

பேய்களின் ஆட்சியில் பிணம் தின்னும் சாத்திரங்கள் என்பதற்கு அமைய ஜெயசிக்குறுய் நடவடிக் கையை வெற்றிக்கு இட்டுச் செல்லும் வரை அதி உயர் ரகசியப் பேணல் ஒன்றை நடைமுறைப்படுத்துவதே இத் தணிக்கையைக் கொண்டுவருவ தற்கான காரணம் என தற்போதைய ஆட்சியாளர்கள் தமக்குத் தாமே சமாதானம் கூறிக்கொண்டாலும் வளர்ந்து விட்ட / வளர்ந்து வரும் செய்தி ஊடகங்களின் நவீன வளர்ச்சி வேகம் உண்மைகளை ஆட்சியாளர் எந்தவித திரைபோட்டு மறைக்கப்பார்ப்பினும் அது வெளிப் படுவதை தடுக்கமுடியாது என்பதே நிதர்சனமாகும்.

இத் தணிக்கையைப் பற்றி அர சின் அமைச்சர்கள் உளறுவாயர்கள் போல் கணத்துக்குக் கணம் முரண் பாடான கருத்துக்களை தெரிவிப்பதை வழமையாகக் கொண்டுள்ளனர்.

இத் தணிக்கை பற்றி உள்ளூர் பத்திரிகையாளர்கள், வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் தமது எதிர்ப்பை அடக்கியே வெளிக்கொணர்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இதற்கும் ஒருபடி மேலாக அர சின் ஊது குழலான லேக் கவுஸ் ஏரிக்கரைப் பத்திரிகைகளில் ஒன் றான 'தினமின' தனது தலையங் கத்தில் இராணுவத்தின் இழப்போ, பின்னடைவோ வெளியிடப்பட வேண்டிய செய்திகள் அல்ல. சிறீ லங்காவின் பத்திரிகைகளின் கடமை ஜெயசிக்குறுவின் வெற்றிச் செய் தியை வாசகர்களுக்கு அளிப்பதே தலையாய தேசிய கடமை என எழுதியுள்ளது.

> **சிங்களப் பத்திரிகைகள் தம்மைத்தாமே தேசியப்பத்திரிகைகள் எனக்கூறிக்கொண்டு தமது பத்திரிகை விற்பனையைக் கூட்டிக்கொள்வதற்காக நூறு 'புலிப் பெடியன் பலி' அல்லது நூறு 'புலிக்குட்டிகள் பலி' அல்லது நூறு 'புலிப்பெட்டைகள் பலி' என்றே சிங்கள வாசகர்களை திருப்திப்படுத்துவதற்காக தலைப்பிடுவதை வழமையாகக் கொண்டுள்ளன.**

இவ்வரசு ஆட்சிக்கு வருவதற்காக சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதான தேவதையாக வலம் வந்து 'யுத்தத்தை நிறுத்தி சமாதான நாடாக சிறீலங்காவை மிளிரச் செய்வேன்' என்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நம்பி ஆட்சியில் அவரை மக்கள் அமரச் செய்தனர்.

தென்னிலங்கை சிங்கள மக்கள் இந்த யுத்தச் செய்திகளைவிட நல்ல விடயங்கள் பத்திரிகைகளில் வராதா என்றே எதிர்பார்த்திருந்தனர். ஆயி னும் சிங்களப் பத்திரிகைகள் தம் மைத்தாமே தேசியப் பத்திரிகைகள் எனக்கூறிக்கொண்டு தமது பத்தி ரிகை விற்பனையைக் கூட்டிக்கொள் வதற்காக நூறு 'புலிப் பெடியன் பலி' அல்லது நூறு 'புலிக்குட்டிகள் பலி' அல்லது நூறு 'புலிப்பெட்டைகள் பலி' என்றே சிங்கள வாசகர்களை திருப்திப்படுத்துவதற்காக தலைப் பிடுவதை வழமையாகக் கொண் டுள்ளன.

இத் தணிக்கை பற்றி பல்வேறு கருத்துக்களை அரச தரப்பினர் கூறி வருவதுதான் வேடிக்கையிலும்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வேடிக்கையாக இருக்கிறது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அவசரகாலச் சட்ட நீடிப்பு மசோதா விவாதத்தில் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது – இது எனது பெயரைப் பிரபலப்படுத்தவோ எமது அரசுக்கு ஆதாயம் தேடவோ எடுக்கப்பட்ட நடவடிக்கை இல்லை எனவும், யுத்த களத்தில் உள்ள இராணுவ அதிகாரிகளின், சிப்பாய்களின் வேண்டுகோளின் பேரிலே இத் தணிக்கையைக் கொண்டுவருவதாகவும், ஜெயசிக்குறுய் நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டுவர சில தினங்களை காலக்கெடுவாக நிர்ணயித்தாலும் அது தோல்வியில் முடிவுற்றதாகவும், எந்தச் சூழ்நிலை ஏற்பட்டாலும் இந் நடவடிக்கையை இறுதிவரை நடாத்தப் போவதாகவும் தெரிவித்ததோடு இப்பொழுது பலர் பத்திரிகைக் கவுன்சில் ஆணையாளர் ஒருவர் இருக்கையில் தணிக்கை அதிகாரியாக இராணுவ ஜெனரல் ஒருவரை நியமித்தது ஏன் எனக் கேட்கின்றனர். இராணுவ விவகாரங்களைக் கையாள இராணுவ அதிகாரியை நியமிக்காது சிவில் நிர்வாகியையா நியமிப்பது? எனவும் வினாவியுள்ளனர்.

இத் தணிக்கை அவ்வளவு பாரதூரமானதல்ல. ஏனெனில் இது இரண்டாவது உலக யுத்தக் காலத்திலும் மத்திய கிழக்கு யுத்தத்தின் போதும் கடைப்பிடிக்கப்பட்டவையே எனவும் கூறியுள்ளார்.

இதே வேளை பாதுகாப்பு அமைச்சு செயலாளர் யுத்தகளச் செய்திகளையும், படை நகர்வுத் திட்டங்களையும் சில பத்திரிகைகள் தொடர்ந்து வெளியிட்டு வந்தமையே இச்செய்தித் தணிக்கைக்கு காரணம் எனவும் கூறியுள்ளார்.

தகவல் அமைப்பு ஒலிபரப்பு அமைச்சரான மங்கள சமரவீர தேசியப் பத்திரிகைகள் எமது செய்திகளை சரியாக வெளியிடுவதில்லை எமது இழப்புக்களை பெரிதுபடுத்தியும், ஊழல்கள் பெருமளவில் நடைபெறுவதாகவும் கூறி இராணுவத்தினரின் உளவியல் ரீதியான மனோபாவத்தை சிதைவுறச்செய்துள்ளன என்றும், எமது தேவைகள் பூர்த்தியானவுடன் ஒரு நிமிடமாவது இத் தணிக்கை அமுலில் இருக்காது எனவும் கூறியுள்ளார்.

ஆனால் பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் அளிக்க முடியாது அரசின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் தகவல் அமைச்சரும் தடுமாறியுள்ளனர்.

கால நிலைகளையும், சூழ்நிலைகளையும் கணக்கில் எடுக்காது அரசியல் சாதகங்களை தமக்குச் சாதகமாகப்பெற்றுக் கொள்ளவே ஜெயசிக்குறுய் நடவடிக்கை என்ன விலை கொடுத்தேனும் நடைபெறவேண்டுமென அரசு கங்கணம் கட்டிக் கொண்டு செயற்படுகிறது என்று இராணுவ அதிகாரிகள், படையினர் கருத்துத் தெரிவித்துள்ளதாகவும், இத் தணிக்கையைக் கொண்டு வந்ததன் மூலம் அரசு பெரும் நெருக்கடிக்குள் சிக்கி இருப்பதாகவும் பத்திரிகையாளர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கே பதிலளிக்கமுடியாது திண்டாடியுள்ளனர்.

எதிர்க் கட்சியோ யுத்த களத்திலுள்ள இராணுத்தினரின் நலன்கள் பற்றி அவர்களது உற்றார் உறவினர் அறிவதற்குக் கூட இத் தணிக்கை தடைபோட்டுள்ளதாகவும், தமது ஆட்சியில் நல்ல நிலைமையில் இருந்த இராணுவத்தினரை சடலங்களாகவும் அங்கவீனர்களாகவும் ஆக்கியது இவ்வரசே என குற்றம் சுமத்தியுள்ளது.

இதற்குப் பதிலளித்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் – 17 வருடங்களாக போலி யுத்தத்தை நடாத்திக் கொண்டிருந்த ஐ.தே.க போலல்லாது நாம் உண்மையான யுத்தத்தை நடாத்திக் கொண்டிருக்கிறோம் என சவால் விட்டதுமல்லாமல் சொல்லியே ஆக வேண்டும் என்பதால் இராணுவத்தின் இழப்புக்கள் சில வற்றை வெளியிடவேண்டிய நிர்ப்பந்தத்திற்கும் உள்ளானார். கடைசியாக குளிரூட்டப்பட்ட அறையில் இருந்து கொண்டு யுத்தத்தை தொடர்ந்து நடாத்திக் கொண்டு என்னால் இருக்க முடியும். ஆனால் நான் அடிக்கடி யுத்த முனைக்குச் சென்று யுத்தத்தை நெறிப்படுத்தி ஜெயசிக்குறுவை வெற்றிக்கு இட்டுச் செல்வேன் என சூளுரைத்துள்ளார்.

ஆயினும் இவ் இராணுவச் செய்தித் தணிக்கையானது ஜெயசிக்குறு மாபெரும் வெற்றி கண்டுவிட்டது

**கூவும் சேவலை கூடைக்குள் போட்டு மூடிவிட்டு அதன் மேல் பாறாங்கல்லைத் தூக்கி வைத்துவிட்டு அது கூவாது என பகற் கனவு காணும் ஆட்சியாளர்கள் தணிக்கையைக் கொண்டு வந்திருப்பதும் இதைப்போலத்தான் ஆயினும் சேவல் கணக்காய்க் கூவுவது தப்பாது**

என சிங்கள வாக்காளர்களுக்கு ஒரு மாய் மாலத்தை ஏற்படுத்துவதன் மூலம் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களில் தமது வாக்கு வங்கிகளை நிரப்பிக் கொள்வதற்கான முயற்சியாக இருக்கலாம் என சந்தேகம் தெரிவித்துள்ள ஐ.தே.க பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவுக்கும் தணிக்கைக்கும் எதிராக எதிர் வரும் மாகாணசபைத் தேர்தலுக்கு முன் ஒரு நம்பிக்கை இல்லாப் பிரேரணையைக் கொண்டுவர கங்கணம் கட்டிக் கொண்டு தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

ஆனால் அரசியல் வாதிகள் அவர்கள் எதிர் கட்சியாயினும் சரி,



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஆளும் கட்சியாயினும் சரி காரணங்கள். எதைக்கூறினும் தென்னிலங்கைப பத்திரிகையாளர்கள் சிலரே ஏன் இந்தச் செய்தித் தணிக்கை என்பதற்கான காரணத்தை வெளிப்படுத்தியுள்ளனர். இதில் ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் சமீபத்தில் நடைபெற்ற கிளிநொச்சி சண்டையில் சிறீலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்ட பெரும் இழப்புக்கள் வெளிவந்ததையடுத்தே இத் தணிக்கை வெளிவந்தது எனவும், இதில் ஜயசிக்குறுய் நடவடிக்கை படையினருக்கு எந்தவித பயனையும் தரவோ, பெறவோ முடியாது என்பதன் வெளிப்பாடே சிவில் நிர்வாக அதிகாரி ஒருவரை விடுத்து இராணுவத்தரத்திலான அதிகாரி நியமித்ததிலிருந்தே இது வெட்ட வெளிச்சமாகியுள்ளது எனத் தெரிவித்தமை இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

அதாவது, செய்தி ஊடகங்கள் இராணுவத்தின் கையாலாகாத்தனத்தையும், இழப்புக்களையும், பாதுகாப்பு படையினரான முப்படைகளதும், பொலிஸாரினதும் ஊழல்களை வெளிப்படுத்தியமையும் ஒரு காரணமாகும்.

செய்தியாளர் அமால் ஜெயசிங்கவின் கூற்றுப்படி தினந்தோறும் ஐந்து அல்லது எட்டு படையினர் கொல்லப்படுவதாக இராணுவப் பேச்சாளரே அறிவித்ததானது கூட்டிப்பார்க்கும் போது பெருந்தொகையை எட்டுமெனவும், இதில் படுகாயமடைந்து மரணிப்பவர்களின் எண்ணிக்கை சேர்க்கப்படமாட்டாது எனவும் காணாமல் போவோர் பட்டியலும் இழப்புக்களில் சேர்க்கப்படாது என கூறியதும் குறிப்பிடத்தக்கதே.

கூவும் சேவலை கூடைக்குள் போட்டு மூடிவிட்டு அதன் மேல் பாறாங்கல்லைத் தூக்கி வைத்து விட்டு அது கூவாது என பகற் கனவு காணும் ஆட்சியாளர்கள் தணிக்கையைக் கொண்டு வந்திருப்பதும் இதைப்போலத்தான் ஆயினும் சேவல் கணக்காய்க் கூவுவது தப்பாது என்பதுபோல் நவீன செய்தி ஊடகங்களின் வளர்ச்சியானது இங்கு நடைபெறும் யுத்தம் சம்பந்தமான நிகழ்வுகளை, தரவுகளை பெறுவதையும் அறிவதையும் அரசு எப்படித்தான் முட்டுக் கட்டைகள் பல போட்டுவிடினும் அது வெளிவருவது தவிர்க்க முடியாதது என்பதே உண்மையாகும்.

ந.புஸ்பராஜன்

---

எமது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக ஒரு புதிய இளம் பரம்பரை தோற்றம் கொள்ள வேண்டும். ஆற்றல் மிகுந்தவர்களாக, அறிவு ஜீவிகளாக, தேசப் பற்றாளர்களாக, போர்க்கலையில் வல்லுனர்களாக, நேர்மையும்— கண்ணியமும் மிக்கவர்களாக, ஒரு புதிய— புரட்சிகரமான பரம்பரை தோன்ற வேண்டும். இந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக, நிர்வாகிகளாக ஆட்சியாளர்களாக உருப்பெற வேண்டும்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன்

---

# தேர்தல்

ஜெனரல் ரத்வத்த பௌத்த பீடாதிபதிகளை சந்தித்து இரகசிய பேச்சுவார்த்தைகளை நடாத்தினார். வன்னிப் போரின் இராணுவ தொழில்நுட்ப விளக்கங்களை ஜெனரல் ரத்வத்த புனித புத்தரின் பீடாதிபதிகளுக்கு வழங்கி போர் நடாத்துவதற்கும் புலிகளைத்தோற்கடிப்பதற்கும் "ஆசி" கோரினர். பீடாதிபதிகள் அந்த ஆசியை பகிரங்கமாக வழங்கினர்.

புலிகளுடனான போரை வெல்வதற்கு சந்திரிகா அரசிற்கு உதவ வேண்டுமென பீடாதிபதிகள் பகிரங்கமாகக் கோரியதுடன் மாகாண சபைத் தேர்தல்களை இதற்காக ஒத்தி வைக்க வேண்டுமென கேட்டனர்.

தேர்தலை ஒத்தி வைப்பதற்கான முதலாவது "நாடகத்தை" சந்திரிகா இவ்வாறுதான் நடாத்தினார். சிங்கள பௌத்த தேசத்தை வழி நடத்தும் இனவெறிக் கோட்பாடுகளை தனது சுய அதிகாரத்தை பாதுகாப்பதற்கான நலன்களுடன் ஒன்றிணைப்பதன் மூலம் அதிகாரத்தை பாதுக்காத்துக் கொள்ளும் பாசிசமே இந் நாடகத்தின் அடிநாதமாய்த் திகழ்ந்தது.

★★★

தேர்தலை ஒத்திவைப்பது என்பது சந்திரிகா தன் அதிகாரத்தை காப்பதற்கான தேவையாகிவிட்டது. "ஜெயசிக்குறுய்" போர் முனையில் புலிகள் ஏற்படுத்திய சரிவும் பின்னடைவும் சந்திரிகா கட்டியெழுப்பிய போலித் தோற்றங்களையும் அதன் பிரமிப்பினையும் தகர்த்து மற்றுமொரு ஐ.தே.க அரசாக இதனை உருவாக்கி விட்டது. சிங்கள தேசியம் தனக்கு மற்றுமொரு தலைமையை நாடும் புள்ளியை நோக்கி தள்ளப்படுவதை சந்திரிகா உணரத் தொடங்கியுள்ளார்.

தேர்தல் தோல்வி இவ் "பிரதியீட்டுக்கான" வேகத்தை தூண்டிவிடக் கூடும். மாகாணசபைத் தேர்தலின்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அவசரகாலச் சட்டம் - சந்திரிகா



சரிவு அடுத்த பாராளுமன்றத் தேர்தல்களிலும் பிரதிபலித்து ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகா முழுமையாக அப்புறப்படுத்தப்படலாம் என்ற அச்சம் பூதாகரமாகியுள்ளது. சிங்கள இனவெறி அமைப்பின் தேவைகளை பூர்த்திசெய்யமுடியாத நிலைக்கு "ஜெயசிக்குறுய்" பின்னடைவுகள் மூலம் சந்திரிகா தள்ளப்பட்டதால் பிரதியீட்டை சிங்களம் தேட ஆரம்பித்துள்ளது. இதன் மறுபுறம் கடுமையான இராணுவ நலன்களை பிரதிபலிக்கும் தலைமை ஒன்றை சிங்கள இனவெறி இயந்திரம் தேடத்தொடங்கும் போது சந்திரிகாவின் சுயமான நிகழ்ச்சித் திட்டத்தை சிங்களம் அங்கீகரிக்காது.

இதனால் தேர்தல்களை ஒத்திவைக்க வேண்டிய கட்டாயம் உருவாகியது. ஆனால் சந்திரிகாவின் நான்கு வருடங்கள் பழமையான முகமூடியான "ஜனநாயகவாதி" என்ற வேடம் தேர்தல் தள்ளி வைப்புகளுக்கு சற்று ஒத்து வராதது ஆகும். சந்திரிகாவை தாங்கிப்பிடிக்கும் சர்வதேச சக்திகள் தேர்தல் ஒத்திவைப்புகளை விரும்பக்கூடிய சாத்தியங்கள் குறைவானவை.

எனவே தேர்தலை ஒத்தி வைப்பதற்கான காரணங்களை சந்திரிகா தேடினார். புலிகள் – தமிழ்த் தேசியத்தின் குறியீடாகவும் அடக்குமுறைக்கு எதிரான பிரதிபலிப்பாகவும் விளங்கும் சக்தி – சந்திரிகாவின் தேடலுக்கும் சிங்கள இனவெறி அமைப்பின் வெறுப்புக்கும் பொதுவான விடயமாகியது. புலிகளை ஒடுக்குவதற்கு துருப்புக்கள் தேவை; எனவே சிங்கள துருப்புக்களை இப்போது தேர்தலுக்குப் பாவிப்பின் புலிகள் யாழ் குடாநாட்டைக்கைப் பற்றிவிடுவார்கள் என சந்திரிகா– ஜெனரல் ரத்வத்த– பீரிஸ் குழு பௌத்த பீடாதிபதிகளிற்கும் சிங்கள மக்களிற்கும் கதையளந்தது.

> சந்திரிகா அரசின் பௌத்த இனவாதம் அறிமுகப் படுத்திய நவீன யுத்திகளுடன் கூடிய அடக்குமுறை வடிவம் இன்று உலக சமூகத்தினால் இனம்காணப் பட்டுவிட்டது. எனினும் சிங்கள– தமிழ் தேசியங் ளுக்கு இடையேயான முரண்பாட்டை முழுமையாகத் தீர்த்து வைப்பதன் மூலமே "சந்திரிகா" போன்ற இனவெறித்தலைமைகள் அத் தீவில் உருவாவதைத் தடுத்து நிறுத்தலாம்.

பௌத்த பீடாதிபதிகளின் ஆதரவை இதன் மூலம் திரட்டிய அரசு தேர்தல் ஒத்திவைப்பை சட்டபூர்வமாக நிறைவேற்ற முனைந்தது. இதே வேளை ஜே.வி.பி. போன்ற தீவிர இடது சாரி சக்திகள் முன்னர் சந்திரிகா சிங்கள அரசியலில் வைத் திருந்த இடைவெளியை நிரப்ப முற்பட்டுள்ளதால், இவ் இளைய துடிப்புள்ள சிங்கள சக்திகளை அடக்குவதற்கு ஓரளவான விஷேட அதிகாரங்களும் அரசுக்குத் தேவைப் பட்டது. ஜே.வி.பி போன்ற சக்திகளின் குரல் வளைகளை நெரிக்க ஒரு அடக்குமுறைச் சட்டம் தேவைப் பட்டது.

எனவே "அவசரகாலச்சட்டம் ஒரு வசதியான ஆயுதமாகப் பாவிக்கப்பட்டது. தேர்தலை இவ் விதிகளைப் பாவித்து ஒத்திவைத்தார். இவ் ஒத்தி வைப்பை எதிர்ப்பவர்களை இச்சட்டத்தைப் பாவித்து நசுக்கிவிடலாம்.

★★★

இன்று சந்திரிகா அரசு செய்தித் தணிக்கை – அவசரகால விதி அறிமுகம் – செம்மணிப் புதைகுழிகள்– தேர்தல் ஒத்திவைப்பு என்பன மூலம் நிர்வாணப்படுத்தப்பட்டுவிட்டது.

சந்திரிகா அரசின் பௌத்த இனவாதம் அறிமுகப்படுத்திய நவீன யுத்திகளுடன் கூடிய அடக்குமுறை வடிவம் இன்று உலக சமூகத்தினால் இனம்காணப்பட்டுவிட்டது. எனினும் சிங்கள– தமிழ் தேசியங்ளுக்கு இடையேயான முரண்பாட்டை முழுமையாகத் தீர்த்து வைப்பதன் மூலமே "சந்திரிகா" போன்ற இனவெறித்தலைமைகள் அத் தீவில் உருவாவதைத் தடுத்து நிறுத்தலாம்.

**கோவலன்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உலகம் காண்பதற்கு மறுக்கும் இலங்கையில் நிகழும்

# இன அழிப்பு!

இருபத்தி ஐந்திற்கு மேற்பட்ட அப்பாவி மக்களை பலி கொண்டும், 50–க்கும் மேற்பட்டோரைப் படுகாயப்படுத்தியதுமான தாக்குதல் இடம்பெற்று சில வாரங்கள் கடந்துவிட்டன. இத்தாக்குதலில் குழந்தைகள், சிறுவர்கள் ,பெண்கள், வயோதிபர்கள் எனப் பலதரப்பினரும் கொல்லப்பட்டனர். படுகாயத்திற்கு உள்ளாகியுமுள்ளனர்.

இக் கோரத் தாக்குதலினால் விளையாடிக் கொண்டிருந்த தனது பிள்ளைகளைத் தேடி ஓடிய தகப்பனார், தனது மூன்று பிள்ளைகளின் சதைத்துண்டங்களையே தேடி எடுக்க வேண்டிய நிலை இருந்தது. வேலைக்குச் சென்ற தனது மகளின் வருகைக்காகக் காத்திருந்த தாய்க்கு தனது மகளின் சிதைந்த உடலே தசைத்துண்டங்களாக வந்து சேர்ந்தது.

இவ்வாறாக இரத்தத்தை உறையச் செய்யும் கோரப் படுகொலைகள் இடம்பெற்றதை உலகம் பெரிதாகக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. இது குறித்து எவருமே கவலையோ கண்டனங்களோ தெரிவித்ததாக இல்லை.

ஆனால், இத்தனைக்கும் இத்தாக்குதல்கள் திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் என்பதற்கு ஐயத்திற்கே இடமில்லை. ஏனெனில், இப்படுகொலைகள் யுத்த முனைப் பிரதேசத்திலோ அன்றி யுத்தம் நடைபெறும் பிரதேசத்திற்கு அண்மையாகவோ இடம்பெற்ற தாக்குதல் அல்ல, மோதல்கள் இடம்பெறும் பகுதிகளில் இருந்து வெகு தொலைவிலேயே நடக்கின்றன. தொலைவில் குறி வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் என்பதே இது திட்டமிட்ட தாக்குதல் என்பதை வெளிப்படுத்தப் போதுமானதாகும்.

அத்தோடு, எவ்வளவிற்கு எவ்வளவு அதிகரித்த தொகையில் அப்பாவி மக்களைக் கொல்ல முடியுமோ அத்தனை அளவில் கொல்வதே இத்தாக்குதலின் நோக்கமென்பதை இத்தாக்குதல் நடாத்தப்பட்ட முறையே தெளிவாக உணர்த்துவதாகவுள்ளது. அதாவது விமானக்குண்டு வீச்சுடன் ஆரம்பிக்கப்பட்டு அதைத் தொடர்ந்து ஆட்லறி ஷெல்கள் மழைபோல் பொழியப்பட்டன.

சுமார் அரைமணி நேரத்திற்குள் நூற்றிற்கும் மேற்பட்ட ஆட்லறி ஷெல்கள் ஒரு குறிப்பிட்ட பகுதி மீது வீசப்பட்டுள்ளன. அத்தோடு, இச் ஷெல்கள் குடியிருப்புக்கள் மீதும் அப்பகுதியின் பிரதான வீதிகளை மையமாக வைத்தும் மேற்கொள்ளப்பட்டன.

இதனை நோக்குகையிலேயே இத்தாக்குதலின் அடிப்படை நோக்கம் வெளிப்படுகின்றது. அதாவது விமானக் குண்டு வீச்சினாலோ அன்றி ஷெல் வீச்சினாலோ கொல்லப்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

படுபவர்கள் ஒருபுறம் இருக்கக் காயமடைந்தவர்களைக்கூட ஆஸ்பத்திரிகளுக்குக் கொண்டு செல்லக் கூடாது என்ற ரீதியில் இத்தாக்குதலின் நோக்கம் இருந்தது.

ஆனால், இவ்வாறு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இப்படுகொலைகள் குறித்து உலகம் கண்டு கொண்டதாக இல்லை. சிறீலங்கா அரசாங்கம் செய்தித்தணிக்கை மூலம் இது குறித்து மறைத்துவிட்டதாயினும் இதனை உலகம் அறிந்து கொள்ள முடியாத ஓர் இருண்ட பகுதிக்குள் இப்படுகொலைகள் இடம் பெற்றுவிடவில்லை.

ஒருபுறம், இங்கு இடம்பெற்ற படுகொலைகள் பற்றித் தகவல்கள் வெளியில் சொல்லப்பட்டுவிட்டன. மறுபுறம் இங்கு இடம்பெற்ற படுகொலைகள் குறித்துத் தகவல்களைத் திரட்டிக் கொள்ளும் வாய்ப்பு உலகில் மனித உரிமைகள், ஜனநாயகம் பற்றிப் பேசுவோருக்கு நிரம்பவே உண்டு. அவ்வாறு இருந்தும் அவர்கள் மௌனமாகவே உள்ளனர்.

சிறீலங்கா அரசாங்கத்தைப் பொறுத்து அதன் பரிபாஷையில் இத் தாக்குதல்கள் 'பயங்கரவாதிகள்' மீது மேற்கொண்ட தாக்குதல்களாக கூட இருக்கலாம். ஒரு வயதுப் பாலகனில் இருந்து கிழடு தட்டிய வயோதிபர்கள்வரை அனைவரையுமே பயங்கரவாதிகள் என சிறீலங்கா அரசாங்கம் முத்திரை குத்திவிடுவதற்கு தயங்கப்போவதில்லை.




**ஒரு இனத்தையே படுகொலைமூலம் அழித்துவிட கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கும் அரசினை ஆதரிப்பவர்களை எவ்வாறு நடுநிலைமையாளர்கள், மனித உரிமையை மதிப்பவர்கள் என ஒப்புக்கொள்ளமுடியும்.**

ஆனால், இப் படுகொலைகளை உலகமும் பயங்கவராதிகள் மீதான தாக்குதல் என ஏற்றுக்கொள்ளத் தயாரா?

ஏனெனில், இத் தாக்குதல்கள் இன அழிப்பு நோக்கம் கொண்டவை என்பது வெட்ட வெளிச்சமானது. இது இனப்படுகொலை அன்றி பயங்கரவாதிகளுக்கு எதிரான தாக்குதலா என ஆராய முற்படுபவர்களாக இருப்பின் அவர்கள் உலகை ஏமாற்ற முனைபவர்களாக மட்டும் இருக்க முடியாது. தம்மைத்தாமே ஏமாற்ற முற்படுபவர்களாகவுமே இருக்க முடியும்.

சிறீலங்கா அரசைப் பொறுத்து அது என்றுமே இனப்படுகொலை நடத்துவதை தொடர்ச்சியாக மேற்கொள்கிறது. ஒவ்வொரு இராணுவத் தோல்விகளின் பின்னர் அது இவ்வாறான படுகொலைகளை அரங்கேற்றியே வந்துள்ளது. இதனை ஒருவகையில் இயலாமையின் வெளிப்பாடு என்றுகூடக் கூறலாம்.

இதற்கு 1983–ஆம் ஆண்டு இனக் கலவரத்தில் இருந்து இன்று சுதந்திரபுரம்– உடையார்கட்டுப் பகுதிகளில் நடந்தேறிய படுகொலைகள் வரையில் எடுத்துக்காட்டுக்களாகும். ஆனால், இதனை உலகம் புரிந்து கொள்ளவில்லை என்பதுதான் அரசியல் என்பது எத்தனை தூரம் கீழ்மட்டத்தைத் தொட்டுவிட்டதென்பதை வெளிப்படுத்துவதாக உள்ளது.

சந்திரிகா அரசு ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு என 'உலக ஜனநாயகவாதிகள்' சில சமயம் விளக்கம் கூறலாம். அவ்வாறானால், பெரும்பான்மை அரசொன்று சிறுபான்மை இன மக்களைக் கொன்று தீர்க்க ஜனநாயகம் இடம் அளிக்கின்றதா? 'ஜனநாயக அரசு' என்பதனால் படுகொலைகளுக்கு அங்கீகாரம்தான் உண்டா?

அவ்வாறு 'ஜனநாயக அரசு'களுக்குப் படுகொலை புரிய அங்கீகாரம் உண்டானால், இதனை அங்கீகரிக்கும் அரசுகளுக்கும் சரி அமைப்புகளுக்கும் சரி மனித உரிமைகள் பற்றியும், ஒடுக்குமுறைகள் குறித்தும் பேசுவதற்கு என்ன யோக்கியதை உண்டு? ஒரு இனத்தையே படுகொலைமூலம் அழித்துவிட கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கும் அரசினை ஆதரிப்பவர்களை எவ்வாறு நடுநிலைமையாளர்கள், மனித உரிமையை மதிப்பவர்கள் என ஒப்புக்கொள்ளமுடியும்.

ரமணன்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

### அரசின் உள்நாட்டு அராஜகத்தினால்

# தோல்விகண்ட வெளியுறவு கொள்கை

தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் சோவியத் யூனியனின் சிதைவுடன் உலகில் வல்லரசுகளுக்கிடையிலான கெடுபிடிப்போர் முடிவிற்கு வந்தது என்ற நிலையில் உலகிற்கு தனது தலைமையில் புதிய அரசியல் ஒழுங்கொன்றை அமெரிக்கா உருவாக்க முயன்றது. ஜனநாயகம் மனித உரிமைகள் மற்றும் 'பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை' என்பனவற்றின் அடிப்படையில் உலகிற்குத் தலைமை தாங்கி வழி நடத்திச் செல்லப் போவதாக காட்ட விளைந்தது.

அதாவது கெடுபிடி போர்க் காலத்தில் கம்யூனிஸ்ட்டுகளின் அச்சுறுத்தலுக்கு எதிரான செயற்பாடு என்ற ரீதியில் உலகில் ஒரு தொகுதி நாடுகளுக்கு தலைமை தாங்கிய அமெரிக்கா– கம்யூனிசத்தின் வீழ்ச்சியின்பின்– உலகத் தலைமையை ஒட்டுமொத்தமாக வைத்துக் கொள்ளவும்– முரண்பாடான போக்குக் கொண்டவர்களுக்கு எதிரான நடவடிக்கைக்கென ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் 'பயங்கரவாதம்' என்பனவற்றை ஆயுதமாகவும் தயார்படுத்திக் கொண்டது.

இவ்வாறானதொரு தோற்றப்பாட்டை சர்வதேச ரீதியில் அமெரிக்கா உருவாக்க முயன்றுகொண்டிருக்கையில் சிறீலங்காவில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்று கொண்டிருந்த சந்திரிகா குமாரதுங்க தலைமையில் பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜனநாயக மீட்பு மற்றும் மனித உரிமை மீறல்கள் என்ற ரீதியில் பெரும் பிரச்சார நடவடிக்கைகளில் இறங்கியிருந்தது.

பொ.ஐ.முன்னணியின் இந்நிலைப்பாடு ஏதோ அமெரிக்கா வகுக்க முயன்ற உலக அரசியல் ஒழுங்கை நிலைநிறுத்தும் சிந்தனையின் பாற்பட்டது என்பதல்ல. அன்று சிறீலங்காவில் இருந்த அரசியல் சூழ் நிலையில் இதுவே எடுபடக்கூடிய பிரச்சார அம்சமாக இருந்தது. ஆகையினால், இதனைச் சந்தர்ப்பவசத்தால் அமைந்த போக்கு என்றே கூறலாம்.

இதேசமயம், சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.மு இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியில் தீர்வு காணப்படும் எனவும் தெரிவித்தது. இதுகூட அன்றைய உலகின் போக்கை அனுசரித்ததொன்றாகவே இருந்தது. ஆனால், தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சிப் பொறுப்பு ஏற்று சிறிது காலத்திற்குள்ளேயே இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியிலான அரசியல் தீர்வு என்ற நிலைப்பாட்டில் இருந்து தன்னை போருக்குத் தயாராக்கிக் கொண்ட சந்திரிகா அரசாங்கம் அதனைத் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான நடவடிக்கை என்பதற்கு மாறாக, பயங்கரவாதத்திற்கு எதிரான போர் எனப் பிரச்சாரப்படுத்தவும் தொடங்கியது.

இது மேற்குலகத்திற்குத் தலைமை தாங்குவதோடு உலகிற்கு தலைமை தாங்க முயன்று கொண்டிருந்த அமெரிக்காவின் அறிவிப்புடன் ஒத்துப்போகும் தன்மையை கொண்ட





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தாக இருந்தது. ஆனால், இது சந்தர்ப்பவசமான அரசியல் சூழ்நிலை ஆயினும் அமெரிக்காவின் பிரகடனங்களுக்கு ஏற்ப சிறீலங்காவின் அறிவிப்புக்களும் இருந்தமை மேற்குலகத்தை நோக்கிய நகர்விற்கு இது பெரிதும் உதவியாக இருந்தது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பம் முதலே சந்திரிகா அரசாங்கம் மேற்குலகத்தின் பால் தீவிர அக்கறை காட்டியது. சிறீலங்கா வெளிவிவகார அமைச்சு முடுக்கிவிடப்பட்டு பெரியளவில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரச்சாரங்கள் மேற்குலகில் மேற்கொள்ளப்பட்டன.

இதன் ஓர் அங்கமாக வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு பல தடவை விஜயங்களை மேற்கொண்டார். இதன் மூலம் அந்த அரசாங்கங்களின் நிலைப்பாட்டை சிறீலங்கா அரசிற்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ள பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு இரு காரணங்கள் முக்கியமானவையாக இருந்தன. ஒன்று புதிய உலக அரசியல் ஒழுங்கில் உலக அரசியல் போக்கை தீர்மானிக்கும் சக்தியாக அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகள் இருந்தன. ஆகையினால் அவர்களைத் திருப்திப்படுத்தல்– அதாவது, தமது போர் நடவடிக்கையை நியாயப்படுத்தல் சிறீலங்காவிற்கு அவசியமானதாக இருந்தது. ஏனெனில், அவர்கள் உலக அரசில் வகிக்கும் செல்வாக்கும் சிறீலங்காவின் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் சக்தியாக இருந்தமையும் காரணமாகும்.

இரண்டாவதாக, மேற்குலகில் குறிப்பாக மேற்கு ஐரோப்பிய நாடுகள் மற்றும் கனடாவில் இடம்பெயர்ந்து




வாழும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுக்கும் விடுதலைப் போராட்டத்திற்கும் அழித்து வந்துள்ள ஆதரவாகும். இவ் ஆதரவானது மேற்குலகில் புலிகளுக்கு ஆதரவானதொரு அரசியல் சூழ்நிலையை உருவாக்குவதற்கும்– புலிகளுக்குப் பெருந்தொகை நிதி கிடைப்பதற்கும் உதவும் எனச் சிறீலங்கா அரசாங்கம் கருதியது.

இந்த நிலையில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான பெரும் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு தமது நிலைப்பாட்டிற்கு அங்கீகாரம் பெறும் பொருட்டு அதிகாரப் பரவலாக்கல் என்ற ரீதியில் இனப்பிரச்சினைக்கு இரட்டைவழி அணுகுமுறையைக் கைக்கொள்ளப் போவதாகவும் அரசாங்கம் அறிவித்தது. அதற்கென ஓர் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தையும் முன்வைத்தது.

சிறீலங்கா அரசாங்கத்தின் இம் முயற்சியானது மேற்குலகில் அரச மட்டத்தில் கணிசமான வரவேற்பையும், திருப்தியையும் ஏற்படுத்தியிருந்தன. இதனை அந் நாடுகள் சந்திரிகா அரசிற்கு அளித்து வந்த தொடர்ச்சியான நிதி உதவிகளிலிருந்தே புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது.

இச் சூழ்நிலையை மேலும் பயன்படுத்திக் கொள்ள சந்திரிகா அரசாங்கம் முனைந்தது. இதன் பிரகாரம் மேற்குலக அரசுகள் விடுதலைப் புலிகள் மீது சில அழுத்தங்களைப் போடும் வகையில் தனது முயற்சிகளை மேற்கொண்டது. இம் முயற்சியானது மூன்றாம் கட்டப் போர் தொடங்கிய காலத்திலிருந்து முனைப்புப் படுத்தப்பட்டது.

ஆனால், மூன்றாண்டு முயற்சிகளும் ஐரோப்பிய நாடுகளில் சிறீலங்கா அரசினால் எதிர்பார்த்த அனுகூலத்தைப் பெறமுடியவில்லை. அமெரிக்கா மட்டும் கடந்த ஆண்டின் இறுதியில் உலகில் பயங்கரவாத அமைப்புக்கள் எனப் பட்டியலிட்ட 30 அமைப்புக்களில் விடுதலைப்புலிகள் அமைப்பையும் இணைத்துக்கொண்டது.

ஆனால், அமெரிக்காவின் இந் நடவடிக்கையானது அமெரிக்கா தரப்பிலோ அன்றிச் சிறீலங்கா தரப்பிலோ கூறிக்கொள்வது போன்று பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை என்பதல்ல. இது அரசியல் சார்நோக்கம் கொண்டது என்பதை தென்னாசியாவில் அரசியல் சூழ்நிலை தெளிவுபடுத்தக்கூடியதாகும். அதாவது, தென்னாசிய அரசியலில் தனது காலை வலுவாக ஊன்றிக்கொள்ள அமெரிக்காவுக்கு ஒரு சந்தர்ப்பத்தை

**இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து மேற்குலகில் வாழ்ந்துவரும் தமிழ் மக்கள் இரண்டு விடயங்களை மேற்குலகத்தவருக்கு உணர்த்திய வண்ணமே உள்ளனர். ஒன்று சிறீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியான இன ஒடுக்குமுறை ஒன்றைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது என்பதாகும். இதற்கு ஆதாரமாக இலங்கையின் வடக்கு கிழக்கில் இடம்பெற்று வரும் இனப்படுகொலைகளையும் ஒடுக்குமுறையையும் ஆதாரங்களுடன் அவர்களால் முன்வைக்க முடிகின்றது.**

**இரண்டாவதாக விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழரின் விடுதலைக்காகவும், உரிமைக்காகவும் போராடும் இயக்கம் என்பதையும் வெளிப்படுத்தி வருகின்றனர். இதற்கென வெளிநாடுகளில் அவர்கள் தமிழீழப் போராட்டத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஆதரவான போராட்டங்களை நடத்தி வருவதோடு பொருளாதார ஆதரவும் வழங்கி வருகின்றனர்.**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வழங்குவதற்கு சிறீலங்கா தயாராக இருந்ததே காரணமாகும்.

இவ்விடயத்தினை, சிறீலங்கா அரசு அமெரிக்காவிற்கு முன்னதாகவே பலதடவை வருந்திக் கேட்டுக்கொண்டபோதும் பிரிட்டன் தடைவிதிக்க முன்வராததில் இருந்தே புரிந்துகொள்ளமுடியும். பிரிட்டிஷ் உள்நாட்டுச் சட்டங்கள் இத்தடைக்கு அனுகூலமாக இல்லை என்பதே காரணமாக இருப்பினும்கூட தென்னாசிய அரசியலில் குறித்த அவர்களின் நிலைப்பாடும், உள் நாட்டு அரசியலில் விளையக்கூடிய பாதிப்புக்களையும் பொறுத்தே பிரிட்டன் இவ்வாறு நடந்துகொண்டது.



ஒருபுறம் சந்திரிகா அரசாங்கம் புலிகளுக்கு எதிரான எவ்வகையிலான பிரச்சாரத்திலும், இராஜீக முயற்சியிலும் ஈடுபட்டுவந்த போதிலும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இருபெரும் அம்சங்கள் சிறீலங்கா அரசிற்கு சாதகமான சூழ்நிலையை தோற்றுவிப்பதில் முட்டுக்கட்டையான விடயங்களாக இருந்தன.

இதில், ஒன்று சர்வதேச ரீதியிலான மனித உரிமை அமைப்புக்களின் அறிவிப்புக்களும், அரச சார்பற்ற நிவாரண அமைப்புக்களின் அறிக்கைகளுமாகும். இவ்விரண்டு அமைப்புக்களும் சிறீலங்கா அரசாங்கம் எவ்வளவுதான் மூடிமறைக்க முற்பட்டாலும் தமிழருக்கெதிராக மேற்கொள்ளும் ஒடுக்கு முறைகளையும் மனித உரிமை மீறல்களையும் வெளிக்கொண்டு வந்து இருந்தன. இந்த நிலையில் சந்திரிகா அரசாங்கம் என்னதான் முயற்சிகளை மேற்கொண்டாலும். பக்கச்சார்பற்ற அமைப்புக்கள் என்ற ரீதியில் இவ் அமைப்புக்களின் அறிக்கைகள் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கணிசமான தாக்கத்தை விளைவிப்பனவாகவே இருந்துவந்துள்ளன.

இந்த வகையில் மே மாதம் ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா சபையின் மனித உரிமைகளின் ஆணைக்குழுவின் 54–வது கூட்டத்தொடரில்கூட சிறீலங்கா அரசின் இன ஒடுக்குமுறையைக் கண்டித்து 54 வெளிநாட்டு அரசு சார்பற்ற நிறுவனங்கள் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்து இருந்தன.

சில சமயம் மேற்கு ஐரோப்பிய அரசுகள் விரோதமான போக்கை மேற்கொள்ள முயன்ற போதுகூட இவ்வமைப்புக்கள் அவற்றைக் கண்டனம் செய்யத் தவறவில்லை. இந்த வகையில் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் 54–வது கூட்டத்தொடரில் ஐரோப்பிய கூட்டமைப்பின் சார்பில் பிரத்தானிய தூதர்

> சந்திரிகா அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைத்த இரட்டைவழி அணுகுமுறையானது தோல்வி அடையும் நிலையில் உள்ளது என்பதையும் ஐரோப்பிய அரசுகள் புரிந்து கொண்டுள்ளன. ஒருபுறம் இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகளை சிறீலங்கா இராணுவத்தினால் வெற்றி கொள்ள முடியாது என்பதையும் மறுபுறம் சந்திரிகா அரசாங்கத்தினால் அதிகாரப் பரவலாக்கல் திட்டமொன்றை அமுல்செய்யமுடியாது என்பதையும் பெரும்பாலும் ஏற்கத் தொடங்கியுள்ளனர்

ஓர்ட்றி கிளேவர் அம்மையார் வெளியிட்ட அறிக்கையை அனைத்துலக கல்வி ஒருங்கிணைப்பு அமைப்பு கண்டனம் செய்ததை சுட்டிக்காட்ட முடியும்.

சிறீலங்கா அரசு மனித உரிமைப் பதிவுகளை முனைப்படுத்துவதில் தான் முழுமனதுடன் ஈடுபடுவதாகக் கூறுவதை ஐரோப்பியக் கூட்டமைப்பு அப்படியே விழுங்கிவிட்டதாக குற்றம் சாட்டியுள்ள அவ் அமைப்பு, சுதந்திர செய்தியாளர்கள் சென்று உண்மை பொய் சரிபார்க்க முடியாத நிலையில் யாழ்ப்பாணத்திலும்சரி வன்னியிலும் சரி எல்லாமே அமைதியாக இருப்பதாக காட்டுவதாக இருப்பதை ஐரோப்பிய சமூகம் ஏற்றுக்கொண்டது போல இருப்பதாயும் கண்டித்துள்ளது. அத்தோடு, சந்திரிகா அரசாங்கம் அதிகாரப்பரவலாக்கல் விடயத்தில் அரசு ஏமாற்றுவித்தை புரிகிறது எனவும் சாடியுள்ளது.

இந்தவகையில் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒருவகையில் மேற்குலகின் அரசியல் சார்ந்த போக்கிற்கு கடிவாளம் இடும் முக்கியமான பாத்திரம் ஒன்றை வகித்து வருகின்றது என்றே கூறுதல் வேண்டும்.

அடுத்த முக்கிய அம்சமாகவுள்ளது இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து மேற்குலகில் வாழ்ந்துவரும் தமிழ் மக்கள் ஆகும். இவர்கள் இரண்டு விடயங்களை மேற்குலகத் தவருக்கு உணர்த்திய வண்ணமே உள்ளனர். ஒன்று சிறீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியான இன ஒடுக்குமுறை ஒன்றைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது என்பதாகும். இதற்கு ஆதாரமாக இலங்கையின் வடக்கு கிழக்கில் இடம்பெற்று வரும் இனப்படுகொலைகளையும் ஒடுக்குமுறையையும் ஆதாரங்களுடன் அவர்களால் முன்வைக்க முடிகின்றது.

இரண்டாவதாக விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழரின் விடுத



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

லைக்காகவும், உரிமைக்காகவும் போராடும் இயக்கம் என்பதையும் வெளிப்படுத்தி வருகின்றனர். இதற்கென வெளிநாடுகளில் அவர்கள் தமிழீழப் போராட்டத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஆதரவான போராட்டங்களை நடத்தி வருவதோடு பொருளாதார ஆதரவும் வழங்கி வருகின்றனர்.

இந்த நிலையில்தான், சந்திரிகா அரசாங்கம் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிராக மேற்கொண்ட இராஜதந்திர முயற்சிகளும் பிரச்சார முயற்சிகளும் எதிர்பார்த்த வெற்றியடையாமைக்கு காரணங்களாகும்.

அத்தோடு, சந்திரிகா அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைத்த இரட்டைவழி அணுகுமுறையானது தோல்வியடையும் நிலையில் உள்ளது என்பதையும் ஐரோப்பிய அரசுகள் புரிந்துகொண்டுள்ளன. ஒருபுறம் இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகளை சிறீலங்கா இராணுவத்தினால் வெற்றிகொள்ள முடியாது என்பதையும் மறுபுறம் சந்திரிகா அரசாங்கத்தினால் அதிகாரப் பரவாலாக்கல் திட்டமொன்றை அமுல்செய்யமுடியாது என்பதையும் பெரும்பாலும் ஏற்கத் தொடங்கியுள்ளனர் எனலாம்.

இந்த நிலையில்தான் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பிரிட்டனிடம் நட்பு என்ற பெயரில் இரந்து கேட்டுக் கொண்ட போதும், பிரிட்டன் விடுதலைப் புலிகள் விவகாரத்தில் சட்டத்திற்கு மாறான விதத்தில் நடந்துகொள்வதற்கில்லை என்ற ரீதியில் நடந்துகொண்டுள்ளது. அதாவது சந்திரிகா அரசின் மூன்றாண்டு வெளியுறவுக் கொள்கை இரந்து கேட்கும் கட்டத்திற்கு சிறீலங்கா அரசினை இட்டுச்சென்றுள்ளதெனலாம்.

–ஜெயராஜ்

## அவனுக்குள் மட்டுமாய்

எண்ணை ராங்கருக்குள்
நிம்மதி தேடும் தமிழன்
கூடு பிரிந்த குயிலென
கூவி அழும் பாச உறவுகளுக்கு
கடல் அலையால் ஒரு திரை
மூச்சுத் திணற முகம் வெளிர
உயிரும் உடலினுள் ஊசலாட
அவன் பயணம் தொடர்கிறது
நல்லதென்ற வெளிநாட்டில்
நல்வரவுக்காய் அகதி முகாம்
கோட்டுடன் சூ அணிந்து
அதிக நேர அடிமை வேலை
விலங்கெனத் தமிழன்
சிறைக்குள் மட்டுமா அடைவு
இரவல் காருடன் ஒரு படம்
வெள்ளைக் காரனுடன் மறுபடம்
அடுத்த ராங்கருக்குள் தொடரும்
அடுத்தவர் பயணம்
திரையின் பின் ஊருக்குள் உலா
அவன் வெளிநாட்டு மாப்பிள்ளை
அடிமையின் அவல வாழ்வு
அவனுக்குள் மட்டுமாய்

– வீ. பாஸ்கரன்

## பகைவனை நாம்

கொல்லவரும் பகைவனை நாம்
கொல்ல ‘வேணும்’
கொல்வதனால் பகையை நாமும்
வெல்ல ‘வேணும்’
வெல்வதனால் விடுதலையை
வேண்ட ‘வேணும்’
விடுதலையால் வெற்றி வாகை
சூட ‘வேணும்’
இல்லை என்பது இங்கு
இல்லாதிருக்க ‘வேணும்’
இல்லாதிருத்தலினால் எல்லா
வளங்களும் மலிய ‘வேணும்’
வள மலிவால் வள நாடாய்
ஆக ‘வேணும்’
வள நாடு ஈழத்திருநாடு என
வையகம் போற்ற ‘வேணும்’

_ பிரமதீஸ்வரி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## சிங்கள அரசின் இனப்பிரச்சினைத் தீர்வு

# விழுந்துவிட்டது பொதிக்கான கடைசித் திரை

வெண்புறா நாயகியின் உள்ளுடனற்ற உன்னதமான தீர்வுப் பொதி நித்திய கண்டமும் பூரண ஆயுசுமாக நாட்களைத் தள்ளிக்கொண்டிருக்கிறது. அதென்ன நித்திய கண்டமும் பூரண ஆயுசும்? தீர்வுப் பொதிபற்றி அரசு சொன்னாலும் சொன்னது பாருங்கள், ஒவ்வொரு மூலைமுடுக்கிலிருந்தெல்லாம் பொதியைக் குறிவைத்தும் அதைக் கொண்டு வந்த அரசின் மீதும் கல்லெறிகள் விழுந்தவண்ணமே உள்ளன. அப்படியானால் பூரண ஆயுசு இதனென்ன கேள்வி? இந்தப் பொதி நடைமுறைப்படுத்தப்படுவது சாத்தியமா?



சிங்களத்தின் சகல தரப்பிலுமே எதிர்ப்புகள் எழும்போது யாரதை நடைமுறைப்படுத்த விடப் போகிறார்கள். பொ.ஐ.மு—ன் பதவிக் காலம் வரையும் பொதியும் தங்கத்தாம்பாளத்தில் நாலொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகக் கம்பீரம் குறைய இருக்க வேண்டியதுதான். கடைசியாகப் பொதிக்கு விழுந்திருக்கிற எறி சந்திரிகாவுக்கே ஆழ வலியேற்படுத்தக்கூடியது. ஏனெனில் (எறிந்தவரும், எறியும் அவ்வளவு கனமானது சந்திரிகாவைப் பொறுத்தவரை ஆட்சியை நடத்த/ ஆட்சியில் தொடர) எறிந்தது சிங்கள ஆணைக்குழு புகழ் அகில இலங்கைப் பௌத்த சங்கம். பிரித்தானியரால் இலங்கையில் சிங்கள மக்களிற்கு அநீதி இழைக்கப்பட்டுவிட்டதாகக் கனவு கண்டு கொண்டிருக்கும் அவர்கள் கொஞ்சம் விவகாரமான ஆட்கள்தான். அப்படி என்ன சொல்லிவிட்டது பௌத்த சங்கம்?

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அரசு தன்னிச்சையாக முடிவெடுக்கமுடியாது. மகாநாயக்கர்களின் அனுசரணையின்றி எந்தவொரு முடிவும் எடுக்கப்படக் கூடாது. இனப்பிரச்சினைக்கான தீர்வை மகாநாயக்கர்களே தீர்மானிப்பர். ஐ.தே.க தீர்வுப் பொதிக்கு ஆதரவு அளிக்க மறுத்தால் அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்போவதாகவும் நேரடியாக மக்களிடம் சொல்லப்போவதாகவும் ஜனாதிபதி



கூறியுள்ளார். அப்படி எதையும் அவர் தனது இஷ்டத்திற்கு செய்ய முடியாது. செய்ய முனைந்தால் நாடு தழுவிய ஆர்ப்பாட்ட ஊர்வலம், சத்தியாக்கிரகம், உண்ணாவிரதங்கள் நடத்துவோம்.

என்ன அசந்துவிட்டீர்களா? இது தான் பௌத்த சங்கத்தின் எச்சரிக்கை, மிரட்டல். அப்படியாயின் சந்திரிகாவின் தீர்வுப் பொதித் தேரின் சில்லுக்கு நேரெதிராகவே மிண்டியை தற்போது இறுக்கியிருக்கிறது பௌத்த காங்கிரஸ்?

ஏற்கனவே தீர்வுப் பொதியின் தந்தையாகிய அமைச்சர் பீரிஸ் அதன் முதற் பிரதிகளை கடந்த நவம்பர் மாத இறுதியில் தானே நேரடியாக அஸ்கிரிய மல்வத்த பீடாதிபதிகளின் வாசஸ்தலங்களுக்கு எடுத்துச் சென்று மகாநாயக்கர்களிடம் வழங்கியிருந்தார்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



பயிற்சி – தந்திரம் – துணிவு இந்த மூன்றும் ஒரு படையணிக்கு அமையப் பெறுமாயின் வெற்றி நிச்சயம்

**தமிழீழத் தேசியத்தலைவர்**
**மேதகு வேலுப்பிள்ளை**
**பிரபாகரன்**

இதன் மூலம் மகாநாயக்கர்களைத் திருப்திப்படுத்தி அவர்களின் ஆசியைப் பெறலாம். அப்படிப் பெற்றுவிட்டால் பௌத்த சிங்கள மக்கள், அமைப்புக்களினதும் ஆதரவையும் பெற்றுவிட முடியும். அப்படிப் பெற்றுவிட்டபின் ஐ.தே.க–வின் எதிர்ப்புகளோ ஸ்ரண்டுகளோ எடுபடாமற் செய்துவிடலாம் என்ற நீண்டதொரு அரசியற் கணக்குடன் தான் பீரிஸ் முதற்பிரதிகளைக் காவிச் சென்றார்.

கண்டி தலதா குண்டுவெடிப்பு அந்தக் கணக்குகள் எல்லாவற்றையுமே தலைகீழாக்கிவிட்டது. மல்வத்தை மகாநாயக்கர் தீர்வுப் பொதியினை முற்றாகவே நிராகரித்துவிட்டார். சந்தர்ப்பம் பார்த்திருந்த ரணிலும் தன் பங்கிற்கு காலைவாரிவிட்டார். இனப் பிரச்சினைத் தீர்வுக்கு அதிகாரப் பரவலாக்கல் யோசனைக்கு எந்த விதத்திலும் உதவப் போவதில்லை எனக் கூறி முற்றாக நிராகரித்தார் ரணில். அரோகரா என்றாகியது கதை.

இந்தக் கட்டத்தில் ரணில் இன்னுமொரு திருப்பத்தையும் ஏற்படுத்தினார். இனப் பிரச்சினைத் தீர்வுக்கு ஐ.தே.கட்சியினர் புதிய யோசனைகள் என்று பகுதி பகுதியாக சில திட்ட வரைவுகளை கிள்ளித் தெளிக்கவும் தொடங்கியுள்ளனர். சந்திரிகா மாகாணங்களுக்கு (அற்ப சொற்ப) அதிகாரப் பரவலாக்கல் என்று கூற ரணிலோ மத்தியிலே சிறுபான்மையினருக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் என்று நேரெதிர் நிலைப்பாட்டில் நின்று குட்டையைக் குழப்பினார். அரசு ரணிலிடம் நிலமையைச் சிக்கலாக்காது தமது யோசனைகளிற்கு ஆதரவளிக்கும்படி கோர வேண்டி ஏற்பட்டது பரிதாபம்தான்.

இந்தக் குளறுபடிகளில் சந்திரிகாவின் தீர்வுப் பொதி இரண்டரை வருடங்களுக்கு மேலாக வெறும் பொதியாகவே இருந்து வருவது பற்றிய அலுப்புணர்வு சர்வதேச சமூகத்தில் எழத்தொடங்கிவிட்ட ஆபத்தான பின்புலத்தில் பொதியைக் காட்டியே தனது போர் முனைப்பை நியாயப்படுத்தி தீவிரப்படுத்தி வந்த சந்திரிகாவுக்கு இந்த அலுப்புணர்வு அடி மடியில் கை வைப்பதைப் போலிருந்தது.

இதனைச் சமாளிக்க, தான் தவிர்க்கமுடியாமலே யுத்தம் செய்வதாகக் காட்டி புலிகள் மீது சேறு பூச, அந்த நேரம் பார்த்து தன்னிடம் பேட்டிக்கு வந்த அமெரிக்க "ரைம்" ஐ பாவித்தார். "ஐயோ கடவுளே, அவங்கள் ஒண்டுக்கும் ஒத்து வாறாங்கள் இல்லை, நான் எலெக்ஸன் இல்லாமலே உங்களுக்கு வடக்கை பத்து வருடத்துக்குத் தாறன் எண்டனான். அதுவும் சம்மதிக்காதவங்களோட சண்டை பிடிக்காம என்ன செய்யிறது!" என்று புலம்பித் தீர்த்துவிட்டார். அதாவது தவிர்க்க முடியாமல் தான் யுத்தம் செயவதாகவும், அதை வென்றுவிட்டு இந்தப் பொதியை அமுல் செய்யப் போவதாகவும் பாவனை செய்துவிட்டார்.

**ஆட்சி நடத்த யுத்தம் செய்தே நாட்களை கழித்தவருக்கு எழுந்திருக்கிறது புதிய சவால். வெண்புறா நாயகி எப்படி இதைத் தாண்டி எழுகிறார் என்று பொறுத்திருந்து பார்ப்போம்.**

அந்தப் பாவனையே ஆபத்தை விளைவிக்குமென்று அவர்கள் கண்டனரா? ஆனால் விளைவித்து விட்டதே! எப்படி நீ அப்படிச் சொல்ல முடியும்? யாரைக் கேட்டு அப்படிச் சொன்னாய்? உடனடிவிளக்கம் தேவை!" சீறினார் மல்வத்த வியசி தேரர்.

அலறியடித்துக்கொண்டு, "ஐயைய்யோ நான் அப்படிச் சொல்லவில்லை விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்துக்கு வந்தால்தான் நிர்வாகத்தை ஒப்படைப்பது குறித்துப் பேசலாம் என்று கூறியதாகத்தான் ரைமுக்கு சொன்னேன்" என்று பேட்டியில் சொல்லாத ஒன்றைச் சொல்லிச் சமாளிக்க முற்பட்டார் சந்திரிகா.

ஆனால் இப்போது எழுந்திருக்கும் அலைக்கு என்ன செய்யப் போகிறார்? அரசியலின் கடிவாளம் யார் கையில் இருக்கிறது? இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேனென்ற வாக்குறுதியை எப்படி நிறைவேற்றப் போகிறார்? 'ஒன்று மற்ற வெற்றுப்பொதி' என்று தமிழரால் ஒதுக்கப்பட்டு விட்டதையே ஏற்கமறுக்கும் மகாநாயக்கர்களால் அங்கீகரிக்கப்படும் தீர்வு எப்படியிருக்கும்? அல்லது அப்படி ஒரு தீர்வை அவர்கள் திருவாய் மலர்வார்களா?

ஆட்சி நடத்த யுத்தம் செய்தே நாட்களை கழித்தவருக்கு எழுந்திருக்கிறது புதிய சவால். வெண்புறா நாயகி எப்படி இதைத் தாண்டி எழுகிறார் என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

**-பு.சத்தியமூர்த்தி**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பல்வேறு முனைகளிலும் மிக மோசமான தாக்குதல்களை, இழப்புகளை எதிர்கொள்ளும் சந்திரிகா அரசு அவற்றுள் எதை எதிர்கொள்வது எனக் குழம்பித் தத்தளித்து ஒரு வழியாக எதிரணியினர் மீது மிக மூர்க்கத்தனமான பிரச்சார யுத்தத்தையும் தந்திரோபாய நகர்த்தல்களையும் கொண்ட கிடுக்கிப் பிடி வியூகமொன்றை முன்னெடுத்து வருகிறது.

கும் மரண அடிகளால் தகர்த்தெறிந்து கொண்டிருக்க அரசியற் தீர்வுப் பொதிக்கான அங்கீகாரத்தைப் பெறுதல் என்பது சிங்களப்பேரினவாதத்தின் முனைப்பு. எதிர்க் கட்சிகளின் அரசியல் நடவடிக்கைகளால் வெறும் கனவாகவே போய்விட அரசியல் உலகில் அரசு நடுத்தெருவில் நிற்க வேண்டி ஏற்பட்டது.

லாகாத் தனங்களை சிங்கள மக்கள் மத்தியில் தோலுரித்துக் காட்டி அரசைக் கிழி, கிழி என்று கிழிக்கும் அரசியற் பிரகார இயக்கமொன்றை பெருமெடுப்பில் அடி மட்டத்திலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி தொடங்கியது தான் தாமதம் அரசு விழித்துக் கொண்டுவிட்டது.

இன்றும் சிறிது தாமதித்தாலும்

## உலக அரங்கின் சாதனை மாற்றம் எதிர்த்தரப்பின் ஓட்டம்

# விடுதலைக்கான வரலாற்று வாய்ப்பு

ஒருபுறத்தில் இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழர் பலத்தை ஒடுக்கியபடி மறுபுறம் தனது "உள்ளுடனற்ற" அரசியற் தீர்வுப் பொதிக்கு உலகிலும் உள் நாட்டிலும் சகல மந்திர தந்திர ஏமாற்றுகளையெல்லாம் பயன்படுத்தி ஆதரவு திரட்டி அதை அமுல்படுத்தி விடுவதன்– தமிழர் மீது திணித்துவிடுவதன் மூலம் இனப்பிரச்சினையையும் யுத்தத்தையும் முடிவுக்குக் கொண்டு வந்து விட்டோம் என்று பிரச்சாரம் செய்யலாம் என அற்புதமான கனவொன்றைக் கண்டுகொண்டிருந்த அரசுக்கு இரண்டு பக்கமுமே அடி.

இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வைக் காணுதல் என்பதை புலிகள் சிறீலங்காவின் ஒட்டுமொத்தப் பலத்தின் அதி உச்ச முயற்சியான ஜெயசிக்குறுவிற்கு கொடுத்த, கொடுக்

அந்த நடுத்தெருவில் நிற்க விடாமல் அரசின் ஊழல்கள் நிர்வாகச் சீர்கேடுகள் துஸ்பிரயோகங்கள் கையா

கைமீறிப் போய்விடுமென்பதை உணர்ந்த அரசு எதிரியின் வண்டவாளங்களை மீண்டுமொரு தடவை





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறது. இதனூடாக எதிரணியினரை இக் கட்டில் மாட்டி விட்டு அவர்கள் தமக்கெதிராகப் போடும் கூச்சலின் வீச்சை குறைக்க முயற்சிக்கிறது.

இந்த அடிப்படையிலானதே அரசு கையில் எடுத்துக் கொண்டிருக்கும் ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான விஜேபால மென்டிஸின் ஊழல்கள் பற்றியதும் அப்போதைய பிரதமர் ரணிலின் கீழ் சப்புகஸ் கந்த பட்டலந்த வீடமைப்புத் தொகுதியில் இயங்கி வந்ததாகக் கூறப்படும் சித்திரவதை முகாம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட விவகாரமுமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் தமது தொடர் 17 வருட ஆட்சியில் ஆடிய ஆட்டங்களை மீண்டும் ஒரு முறை மீட்டு மக்கள் மனதில் அது குறித்த பீதியையும், ஆத்திரத்தையும் கிளப்பி விடுவதன் மூலம் தாம் தற்போது ஆடும் ஆட்டங்கள் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியினரைப் போகவிடாமற் செய்துவிடுதல், அல்லது அவர்கள் அது பற்றிப் பேசினாலும் அந்தப் பேச்சுக்களை மக்கள் மத்தியில் எடுபடாமற் செய்துவிடுவதையே அரசின் தற்போதைய வேலைத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இதற்காகவே ஐ.தே.கட்சியின் பாராளுமன்றப் பகிஸ்கரிப்பினைப் பயன்படுத்தி 35 நிமிடத்தில் 21 சட்டமூலங்களை நிறைவேற்றிய அரசு விஜேபால மென்டிஸின் குடியியல் உரிமைகளைப் பறிப்பதான சட்டமூலத்தினை மட்டும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளாமல் ஐ.தே.கட்சி பாராளுமன்றத்துக்கு திரும்ப வரும்வரை காத்திருக்கிறது. கனவான் தனமானது போன்ற இதன் உள்நோக்கம் ஐ.தே.க,வை பலத்த சங்கடத்துள் மாட்டிவிடுதலே, ஒவ்வொரு உறுப்பினரதும் உரையும் ரணிலையும் சகாக்களையும் ஊசிமுனையில் நிறுத்துவதுடன் மக்கள் மத்தியில் அவர்களின் சாயத்தை வெளுக்கச்செய்யலாம் என அரசு எதிர்பார்க்கிறது.

**தமிழர் தரப்புக்கு உலக அரங்கில் ஏற்பட்டு வரும் சாதகமானமாற்றங்களின் பின்னணியில் எதிர்த்தரப்பின் ஈடாட்ட சூழ்நிலையில் எமக்கு வரலாறு தரும் வாய்ப்பு கைகளில் வந்திருக்கிறது; முன்னேறித் தாக்கி எமது விடுதலையை வென்றெடுக்க, அதற்காக எம் கைகளைப் பலப்படுத்தி எமது விடுதலையை எவ்வளவு விரைவில் வென்றெடுப்பது என்பது எமது முனைப்பிலேயே தங்கியுள்ளது.**

ரணிலின் மீது குறிவைக்கும் பட்டலந்த விவகாரமும் இத்தகையதே. இந்த சித்திரவதை முகாமுக்கு ரணில் நேரடியாக பல தடவை வருகை தந்திருந்தார்கள் என ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டிருந்தமை கவனிக்கத்தக்கது.

ஐ.தே.கட்சியின் ஆட்சியில் 13.200 பேர் காணாமற் போயினர். இதில் அரச அதிகாரிகள் உள்ளிட்ட 1200 பேர் தொடர்பு பட்டிருந்தனர் என அரச தொடர்பு சாதனங்கள் அண்மையில் தெரிவித்தன.

இப்படி முன்னைய அரசின் வீர தீர பராக்கிரமங்களைத் தோண்டி எடுத்து திரும்பத் திரும்ப அரச தொடர்பு சாதனங்களினூடு முழு வேகத்தில் அரசு முடுக்கிவிடுமளவுக்கு அதன் அரசியல் அடித்தளம் ஆடிப் போயுள்ளது. இது போதாதென்று தினமொரு தொழிலாளர் போராட்டம் தொழிற்சங்க நடவடிக்கைத் தொழில் அமைச்சர் C.V. குணரத்னவுக்கு தொழிலாளர்களிற்கும் நிர்வாகத்திற்குமிடையில் சமரசம் செய்து வைப்பதே தொழிலாகப் போயிற்று. இது போதாதென்று இலங்கையில் அரசின் முலீடுகள் மிகக் குறைந்துவிட்டது, இது பொருளாதார வளர்ச்சிக்கு உதவாது என்ற உலக வங்கியின் எச்சரிக்கை வேறு. சண்டைக்கு காசில்லை இதில் முதலீட்டுக்கு எங்கே போவது என்கிறீர்களா? உண்மைதான்.

இப்போது நிலமையைத் தொகுத்துப் பார்த்தால் அரசின் கந்தறுந்த நிலமை தெரியும். அரசியல் ஸ்திரமின்மை (இருப்பதே பாதிக்கக்கூடிய அபாயநிலை) பொருளாதார பாதிப்பு, இராணுவ இயலாமை, ஜெயசிக்குறுய் ஒரு வருடத்தையும் கடந்து நீடிக்கும் ஆட்பற்றாக்குறை, மீள இணைந்த 1500 படையினர் ஓட்டம், காயமடைவோரில் 1/3 பங்கு படையினர் மீளக் களம்புக முடியாதுள்ளது— என்று மூச்சுத் திணறுகிறது அரசு.

தமிழர் தரப்புக்கு உலக அரங்கில் ஏற்பட்டு வரும் சாதகமான மாற்றங்களின் பின்னணியில் எதிர்த்தரப்பின் ஈடாட்ட சூழ்நிலையில் எமக்கு வரலாறு தரும் வாய்ப்பு கைகளில் வந்திருக்கிறது; முன்னேறித் தாக்கி எமது விடுதலையை வென்றெடுக்க, அதற்காக எம் கைகளைப் பலப்படுத்தி எமது விடுதலையை எவ்வளவு விரைவில் வென்றெடுப்பது என்பது எமது முனைப்பிலேயே தங்கியுள்ளது.

**பு.சத்தியமூர்த்தி**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அதிகரிக்கும் வரிகளினால் எகிறிச் செல்லும் விலைகள்

யுத்தச் செலவீட்டை தொடர்ந்தும் தாங்கமுடியாத சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் அதனை நேரடியாகவே வெளிப்படுத்தவும் தொடங்கியுள்ளது. இதன் மூலம் யுத்தத்தின் சுமையை மாற்று வழியின்றி முற்றாகவே மக்களின் தலையில் சுமத்தும் நடவடிக்கையில் அது இறங்கியுள்ளது. இதன் ஓர் கட்டமாகவே சந்திரிகா அரசாங்கம் பொருட்கள் சேவைகளென இறக்குமதி வரியை ஏப்பிரல் மாதம் முதலாம் திகதி முதல் அறவீடு செய்யத் தீர்மானித்துள்ளது.

இது குறித்து அரசாங்க இறைவரி ஆணையாளர் நாயகம் மேர்வின் ஜெயசூரிய தெரிவிக்கையில் இறக்குமதியாளர்களும், பொருட்களை விநியோகிப்போரும் பொருட்கள் சேவைகளுக்கான வரியை செலுத்த வேண்டும். அத்துடன் உள்ளூராட்சி மன்றங்களினால் ஏற்கனவே அறவிடப்படும் விற்பனை வரியும் அமுலாக இருக்கும் எனக் குறிப்பிட்டார்.

இதற்கமைய மின்சாரக் கட்டணமும் 12.5 சதவீதத்தினால் அதிரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இது சகல துறைகளிலுமே தாக்கத்தை விளைவிக்கக் கூடியதாகும். ஏற்கனவே இலங்கையின் குறைவான பொருள் உற்பத்தி, அதிகரித்த பணவீக்கம், பொருட்களுக்கான விலையேற்றம் போன்றவற்றால் மக்களின் கொள்வனவு சக்தி குறைவடைந்து செல்கிறது. இந்நிலையில் மக்கள் மீது சந்திரிகா அரசாங்கம் மேலும் வரிச் சுமைகளை ஏற்றுவதன் மூலம் மக்களை வறுமைக்கோட்டின் கீழ் வேகமாக நகர்த்திச் செல்கிறது.

அதிலும் குறிப்பாக மின்சாரக் கட்டண உயர்வானது தனியாக அதனை மட்டும் உயர்வடையச் செய்யப்போவதில்லை. உற்பத்திப் பொருட்களின் விற்பனை விலை உற்பத்திகளை வீழ்ச்சியடையச் செய்து இப்பொருட்களின் விலைகளை உயர்வடையச் செய்துள்ளது. இதனால் இப் பொருட்களை மக்கள் இலகுவாக நுகரமுடியாது போயுள்ளது. இந்த நிலமையானது மக்களின் போசாக்குக் குறைவு இதன் மூலம் சிசு மரணம் அதிகரிப்பு என்பன ஏற்படுவது பொதுவான விளைவுகளாகும். உதாரணமாக 1995–ம் ஆண்டு சந்திரிகா அரசாங்கம் பதவி

## யுத்தச் சுமை மக்கள் மீது நேரடியாக ஏறுகிறது

அதிகரிப்பில் இருந்து வேறு சேவைகளுக்கான செலவீட்டையும் அதிகரிக்கக்கூடியதாகும்.

சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் 1995–ம் ஆண்டு பதவியேற்றதைத் தொடர்ந்து அது கடைப்பிடித்து வரும் அரசியல் பொருளாதாரக் கொள்கைகள் இலங்கை வாழ் மக்களை மேலும் வறுமை நிலைக்குத் தள்ளுவதாக உள்ளது.

இவ் அரசாங்கம் கடைப்பிடித்து வரும் பொருளாதாரக் கொள்கைகள் உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்குப் பதிலாக அத்தியாவசியப் பொருட்களின் உள்ளூர் ஏற்கும் போது கோதுமை மாவு ஒருகிலோகிராம் சில்லறை விலை 12ரூபா 50 சதமாக இருந்தது. இதன் தற்போதைய விற்பனைவிலை 18 ரூபா 15சதமாக உயர்ந்துள்ளது. மேலும் பால்மா ஆகியவற்றின் விலைகளும் சுமார் 50 சதவீதத்தால் உயர்வடைந்துள்ளது. மூன்றரைவருட ஆட்சியிலேயே இந்தப் பொருட்களுக்கு இவ் விலை உயர்வு நிகழ்ந்துள்ளதானது இந்த அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டங்கள் எந்தளவு தோல்வியடைந்து செல்கிறது என்பதைப் புரிந்துகொள்ளப் போதுமானதாகும். இத்தனைக்கும் சந்திரிகா ஆட்சிப் பொறுப்பில் ஏறுவதற்கு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

முன்னர் பொதுமக்களுக்கு வழங்கிய வாக்குறுதியில் கோதுமை மாவிற்கு 50 சதவீதம் மானியம் வழங்குவேன் என்பதாக இருந்தது. அதாவது, இவர் வாக்குறுதி வழங்கிய காலம் (ஐ.தே.க ஆட்சி செய்துகொண்டிருந்த காலப்பகுதி) கோதுமை மாவு ஒருகிலோகிராம் 12ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்பட்டுக்கொண்டிருந்தது. இதில் 50 சதவீதம் மானியம் வழங்குவதாயின் கோதுமைமாவின் விற்பனை விலை ஒரு கிலோகிராம் 6ரூபா 25 சதமாக இருக்கவேண்டும். இதை அடிப்படையாகக் கொண்டு பார்க்கப்போனால் தற்போதைய விலை இதைப்போல் மூன்று மடங்காகும். இதைவைத்துப் பார்த்தால் சந்திரிகா அம்மையார் பொதுமக்களுக்கு வாக்குறுதி வழங்கும் போதே இது நிறைவேற்றப்படமுடியாத பொய்யான வாக்குறுதி என்று தெரிந்து வழங்கிய வாக்குறுதி ஆகும். அல்லது அவரது பொருளாதார திட்டமிடல் தவறானவையாக நடைமுறைச் சாத்தியமில்லாதவையாக இருந்துள்ளது என துணிந்து கூறலாம். எது எப்படி இருந்தாலும் அவரது செயற்பாடுகள் மக்களை அத்தியாவசியப் பொருட்களை நுகரும் விடயத்தில் மேலும் வறுமை நிலைக்குத் தள்ளியுள்ளது.

இது மட்டுமல்ல அம்மையாரின் ஆட்சிக்காலமான இந்த மூன்றரை ஆண்டுகளிலும் மோசமான பணவீக்க நிலமை ஏற்பட்டுள்ளது. இது அரச சேவையினரைக் கூட அத்தியாவசிய பொருட் கொள்வனவில் வலுக்குறைந்தவர்களாக ஆக்கியுள்ளது. ஏனெனில், அவர்களுக்கான சம்பள அதிகரிப்பைவிட பணவீக்க நிலமையால் பொருட்களுக்கு ஏற்படும் விலை அதிகரிப்பு அதிகமாகியுள்ளதே காரணமாகும். மேலும் பணவீக்க நிலமையானது ஒருவகையில் சேமிப்பைக் குறைவடையச் செய்து அரசாங்கத்தின் சார்பான உள்ளூர் முதலீடுகளையும் பாதிப்படையச் செய்துள்ளது. ஏனெனில் பணவீக்க நிலமையால் ஏற்படும் பணப் பெறுமதி இறக்கத்தினை விட சேமிப்புக்களுக்கு அரசாங்கம் வழங்கும் வட்டிவீதம் குறைவாக இருப்பதினால் மக்கள் சேமிப்பை அதாவது வங்கிச் சேமிப்பை விரும்பமாட்டார்கள். இது அரசாங்கத்தின் முதலீடு செய்யும் வலுவைக் குறைக்கின்றது. இந்த நிலையில்தான் உலக வங்கியின் உயர் நிலை அதிகாரியான ஸ்ரோம் வில்லியம்ஸ் கொழும்பில் இடம் பெற்ற மாநாடு ஒன்றில் சிறீலங்காவின் அரச முதலீடுகள் சுருங்கிக் கொண்டே செல்கிறது. இது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தலாமென கூறியுள்ளதானது அரசாங்கம் அரச முதலீட்டில் எந்தளவு பலவீனமடைந்து செல்கிறது என்பதனை வெளிப்படுத்தியுள்ளது.

அதுமட்டுமல்ல அரசாங்கத்தில் பொருளாதார ஸ்திரமின்மையால் காலத்துக்கு காலம் தொடர்ச்சியாக ஏற்படும் பணப் பெறுமதியின் வளர்ச்சிப் போக்கானது உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கான விலையை வெளிநாடுகளில் மேலும் வீழ்ச்சியடையச் செய்துள்ளது. இது உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கான இலாபத்தைக் குறைவடையச் செய்து உற்பத்தித் திறனைக் குறைத்துள்ளது.

இது உள்ளூர் உற்பத்தியாளரது வருமானத்தினை எதிர்விளைவாக்கி அவர்களது வாழ்க்கைத் தரத்தினையும் குறைவடையச் செய்துள்ளது.

நாட்டின் பொருளாதார நிலமைகள் இவ்வாறு இருக்கும்போது கூட சந்திரிகா அம்மையார் தனது யுத்த மனோ நிலையினை தீவிரப்படுத்தியுள்ளார். அவர் பதவியேற்றதிலிருந்து பாதுகாப்புச் செலவினத்துக்கான நிதி ஒதுக்கீட்டை அசாதாரணமான முறையில் அதிகரித்துள்ளார்.

அதாவது 1995—ம் ஆண்டு 2200 கோடி ரூபாவாக இருந்த பாதுகாப்புச் செலவினம் 1996—ம் ஆண்டு 4400 கோடியாக அதிகரித்து 1997—ம் ஆண்டு 4800 கோடியாக உயர்வடைந்து 1998 ற்கென 5100 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கென ஒதுக்கீடு செய்யப்படும் நிதி மாத்திரம் தான் பாதுகாப்புக்கென அரசாங்கத்தினால் செலவு செய்யப்படுகின்றது என்பதல்ல வருடாவருடம் ஒதுக்கீட்டைவிட பல நூறு கோடி ரூபாய்களை பாராளுமன்றத்தில் குறை நிரப்புப் பிரேரணை மூலமாக எடுத்து செலவு செய்கின்றது. இந்த நிதி நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கென பயன்படுத்தப்படவேண்டிய நிதிஆகும். இது அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படாது விடப்படும்பொழுது இறுதியில் மக்களே பாதிக்கப்படுகின்றனர்.

வரவு செலவுத் திட்டத்தில் பெருமளவு நிதியை நாம் யுத்தத்திற்குச் செலவழிக்கிறோம். பிரச்சினைகளால் சூழப்பட்டு மீளமுடியாத நிலையில் இன்று நாம் இருக்கிறோம். சிறீலங்காவை மீட்க ஒருவழியும் கிடையாது. நாம் இப்படியே செயலாற்றுவோமானால் யதார்த்தத்தை ஒரு போதும் புரிந்துகொள்ளப்போவதில்லை. இந்நிலையில் நிரந்தரமற்ற ஊர்காவற் படையினரை நிரந்தரமாக்க எம்மால் முடியாது என பொலிஸ் உயர் அதிகாரியான றொகான் அபேவர்த்தன இவ்வாறு கூறியுள்ளதானது அரசாங்கம் பொருளாதாரத்தில் மோசமான நெருக்கடியைச் சந்தித்துள்ளது என்பதைப் புலப்படுத்துகின்றது. இவற்றிலிருந்து ஓரளவு தலையை நிமிர்த்திக் கொள்ளவே அரசாங்கம் பொருட்கள் சேவைகள் மீதான இறக்குமதி வரியை அறவீடுசெய்வதென தீர்மானம் எடுத்துள்ளது. இந்த வரியை இறக்குமதியாளரும் பொருள் விநியோகிப்போரும் செலுத்த வேண்டும். இதேவேளை உள்ளூராட்சி மன்றங்களினால் அறவீடு செய்யப்படும் வரியும் நடைமுறையில் இருக்கும். இதை சிறீலங்காவின் இறைவரி ஆணையாளர் நாயகம் மேர்வின் ஜெயசூரிய குறிப்பிட்டுள்ளார். அரசாங்கம் வரி வருமானத்தை அதிகரிப்பதென எடுத்துள்ள தீர்மானமானது நிச்சயமாக பொருட்களுக்கான விலையை அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மொத்தத்தில் சந்திரிகா அரசாங்கத்தின் மூன்றரை வருட ஆட்சியின் விளைவைப் பார்க்கும்போது, பொது மக்கள் அனைத்துத் தரப்பினரதும் வாழ்க்கைத்தரம் குறைவடைந்துள்ளது எனலாம். ○



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சிறீலங்கா அரசியல் அரங்கில் குத்துவெட்டுக்களும் குழிபறிப்புக்களும்

சிறீலங்கா அரசியல் கட்சிகள் தற்பொழுது புதிய தேர்தல் களைச் சந்திக்கத் தயாராகி வருவது மட்டுமல்ல புதிய உறவுகளையும், புதிய கூட்டணிகளையும் உருவாக் கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட வும் தொடங்கியுள்ளன. இதன் காரணமாக பழைய கூட்டணிக் கட்சிகளில் முரண்பாடானவர்கள் வெளியேற்றப்படவும்/ வெளியேற வும் தயாராகும் அதேவேளை, கட்சிகளுக்குள்ளும் குத்து வெட்டுக் கள் பெரிதாக ஏற்பட்டுள்ளன. ஆகையினால் குடும்பிப்பிடிச் சண் டைகளும் குழிபறிப்புக்களும் குற்றச் சாட்டுக்களை அள்ளி வீசுவதுமே இன்றைய அரசியல் அரங்கக் காட்சி களாக உள்ளன.

ஆளும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி யின் தலைமையிலான பொ.ஐ.மு, ஐ.தே.க, லங்கா சமசமாஜக் கட்சி, ஜனதாவிமுக்திப் பெரமுனவின் மறு பதிப்பான முற்போக்கு முன்னணி ஆகியவற்றில் பல உள் முரண்பாடு களும் குழிபறிப்புக்களும் அமோக மாக நடந்தேறுகிறது எனலாம்.

இதில் முதன்மையாக பொ.ஐ.மு– வில் அங்கம் வகித்த லலித் அத்து லத்முதலியின் மனைவியைத் தலைவி யாகக் கொண்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை ஓரங்கட்டும் நடவடிக்கையில் பொ.ஐ.மு–ன் தலைவி சந்திரிகா குமாரதுங்க முனைப் புக் காட்டி வருவதாகவே தோன்று கிறது.

கடந்த தேர்தலில் எப்படியும் பதவிக்கு வரவேண்டும் என்ற நோக்கில் சில கட்சிகளை அரவ ணைத்த சந்திரிகா குமாரதுங்க இன்று அவர்களை எட்டி உதைக்கும் அளவுக்கு சென்றுள்ளமை குறிப் பிடத்தக்கது.

லங்கா சமசமாஜக் கட்சியில் அமைச்சர் பதவி ஏற்பதா? இல் லையா? என்ற பிரச்சனையில் முன்பு ஏற்கமாட்டோம் எனக் கூறிய பட்டி வீரக்கோன், வாசுதேவ நாணயக்கார போன்றவர்களுக்கு இடையில் பட்டி வீரக்கோன் அமைச்சர் பதவியைப் பெற்றுக் கொண்டதன் மூலம் வாசு தேவ நாணயக்கார தனிப்பட செயற்பட வைக்கவேண்டிய நிர்ப் பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

**தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் ஒரு தேர்தலுக்கு முகம் கொடுக்கும் வேளையிலும், வெற்றி பெற்றதன் பின்னரும் நீலக் கட்சியினர் பச்சையாக மாறுவதும், பச்சைக் கட்சியினர் நீலமாக மாறுவதும் தொடர்ந்து வரும் அரசியல் அரங்கியல் காட்சிகளேஆகும்.**

சிறீலங்கா முற்போக்கு முன்னணி யின் பாராளுமன்ற உறுப்பினர் நிகால் கலப்பதியை கட்சியிலிருந்து நீக்குவதாக அறிவித்த அக் கட்சியின் செயலாளர் ஆரியபுளேகொடவுக்கு எதிராக நீதிமன்றம் செல்லவேண் டிய நிர்ப்பந்தம் நிகால் கலப்பதிக்கு ஏற்பட்டுள்ளது. தற்போது அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் வாபஸ் பெறப்பட்டுள்ளன.

ஆளும் கட்சியாகவிருந்து இன்று எதிர்க்கட்சியாக மாறி நாளை ஆளும் கட்சியாக மாற கங்கணம் கட்டியுள்ள ஐ.தே.க–வில் இன்று பிரச்சினைகள் பூதாகரமாக உரு வெடுத்துள்ளன.

விஜயபால மென்டிசின் குடியி யல் உரிமை பறிப்புக்கான தீர்மானம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப் பட்டபோது அதை எதிர்த்த ரணில் விக்கிரமசிங்க தற்போது விஜயபால மென்டிசை பலிகொடுத்துவிட்டு தான் சுத்தம் பரிசுத்தம் என்ற நாமத்தைப் பெறலாம் என எண்ணு கிறார்போல் தெரிகிறது.

ஆனால், அதற்கு விஜபால மென் டிஸ் தான் அதற்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கடைசியாக தற்போதைய ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்களும், முன்னாள் சிறீலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான அனுரா பண்டாரநாயக்காவும் றொனி டீ மெல்லும் பரஸ்பரம் குற்றச் சாட்டுக்களையும் கண்டனங்களையும் தொடுத்துக்கொண்டிருக்கின்றனர்.

அனுரா பண்டாரநாயக்கா– றொனி டீ மெல் கிளைக்கு கிளை தாவும் குரங்கைப் போன்றவர் என்றும், கட்சிவிட்டுக் கட்சி மாறுவது அவருக்குப் பொழுது போக்காக இருக்குமெனவும் அரசியலுக்கு முகம் கொடுக்கமுடியாது பாதுகாப்பாக இங்கிலாந்து தப்பிச் சென்றவர் என்றும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவிடம் தம்மீது நடவடிக்கை ஏதும் எடுக்காது விடும்படி தன்னை தொலைபேசியில் கெஞ்சியதாகவும் அனுரா பண்டாரநாயக்க ஒரு அறிக்கையை வெளியிட்டார்.

இதற்குப் பதில் அறிக்கையாக றொனி டீ மெல் – அனுரா பண்டாரநாயக்கா தனது தந்தையும், தாயாரும் கட்டியெழுப்பிய சுதந்திரக் கட்சிக்கு எதிராக செயற்பட்டவர் என்றும் கடந்த 17 வருடங்களாக ஒரு தேர்தலில் கூட தனது கட்சிக்கு வெற்றியைப்பெற்றுத் தராதவர் என்றும் அறிக்கை ஒன்றை விடுத்திருந்தார்.

தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் ஒரு தேர்தலுக்கு முகம் கொடுக்கும் வேளையிலும், வெற்றி பெற்றதன் பின்னரும் நீலக் கட்சியினர் பச்சையாக மாறுவதும், பச்சைக் கட்சியினர் நீலமாக மாறுவதும் தொடர்ந்து வரும் அரசியல் அரங்கியல் காட்சிகளே ஆகும். இனி நடக்கப்போகும்; நடத்தப்படவிருக்கும் ஒத்திவைக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தலில் கூட்டணிகள் மாறுபடவும் தமது நிறத்தினை மாற்றிக் கொள்ளவும், தென்னிலங்கைக் கட்சிகள் தயாராகி வருவது தவிர்க்கமுடியாத ஒன்று போலும். இன்னும் ஓரிரு மாதங்களில் தென்னிலங்கை மக்களுக்கு இவர்களது அரசியல் கேலிக்கூத்துகளைக் கண்டுகளிக்கும் வாய்ப்பு பெரும்பாலும் கிட்டும் என்றே எதிர்பார்க்கலாம்.

**க.புஸ்பராஜன்**

# விடுதலைக் குழந்தை

அம்மா
ஊர் எங்கும் குண்டுகள்
விழும் துயர நாட்களில் - நீ
தாய்மை அடைந்திருந்தாய்- உன்
கருவறையின் காப்பரணில்
நான் பதுங்கி இருந்தேன்
என்னை பிரசவித்து
தொப்புள்கொடி விழமுன்னர்
சிறுகுஞ்சைப் பயங்கரவாதி
என்றதற்காய்
பிரசவ வேதனையை விட
பன்மடங்கு வேதனைப்பட்டிருந்தாய்
பின்னாட்களில்
நீ களிப்புற்றிருக்கவில்லை.
கலங்கிய உன் விழியின்
நீரால் தினம் குளிப்பாட்டினாய்
என் உறக்கத்திற்காய்
தாலாட்டுப் பாடவில்லை
தாய்ப்பாலில் விடுதலையின்
தாகம் இருந்தது
இன்று உன் குழந்தை
சிறகினை விரித்துப் பறக்கின்றது
இந் நாட்களில்
பெருமைப்பட்டிருப்பாய்
மண் அரண்களும்
முட்கம்பி வேலிகளும் சூழ்ந்த
நகரத்தின் இருப்பிடத்தில்
ஒரு நாள்
கவசம் அணிந்த பிசாசுகள்
உன்னை சிறை செய்தன
குழந்தையைப் பிரசவித்து
வீரப்பால் ஊட்டிய உன்
மார்பகங்கள் கீறப்பட்டன
கனத்த இரவுகளில்
அவைகளால் இம்சிக்கப்பட்டாய்
கலங்காமல் விழித்திரு அன்னையே
இருள் விலகி உதயமாகும்
ஓர் நாளில் உன்னிடம்
விடுதலைப் பறவைகள்
தேடிவரும் போது
உந்தனது குழந்தை
குழியில் விதைக்கப்பட்டதை
நீ அறிவாய்
குழியினுள்ளே உன் குழந்தை
கண்விழித்திருக்கும்
தாலாட்டுப்பாடலில் தூங்குவதற்காய்.

**- சின்னக்குயில்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சிறுகதை

# பயம் இல்லை

சி. நரேன்

பிள்ளையார் கோயிலின் அரச மரத்திலிருந்த குருவிகள் வழமைபோல் சத்தமிட்டன. நிலம் வெளுக்கத் தொடங்கியது. வழமைக்கு மாறாக அதிகாலையின் அமைதியைக் குலைத்தவாறு ஷெல்கள் கூவிச்சென்றன. சிறீலங்காவின் வானொலி ஜெயசிக்குறுய் எனும் இராணுவ நடவடிக்கை ஆரம்பமென நேற்றே கூறத் தொடங்கிவிட்டது. ஆனால் நெடுங்கேணி, மதியாமடு, நைனாமடு போன்ற கிராமங்களை நோக்கி இன்றுதான் ஷெல்கள் ஏவப்பட்டன.

'என்னங்க, சனமெல்லாம் வெளிக்கிட்டுப் போகுதுகள். நாங்களும் எங்கேயெண்டாலும் போவம். சத்தம் வரவரக் கிட்டக் கேக்குது'.

வீட்டுக்குப் பின்னால் இருந்த தனது தோட்டத்தில் காய்த்துக் குலுங்கிய மரக்கறிப் பயிர்களை வெறித்த வண்ணம் இருந்த ராசனை அவனது மனைவியின் குரல் இவ்வுலகிற்கு கொண்டுவந்தது. நெற்றி வேர்வை சிந்தி கஷ்டப்பட்டு உண்டாக்கிய பயிர்களை விட்டுச் செல்ல மனமில்லாது இருந்தவனது மனத்தையும் அண்மையாக வீழ்ந்து வெடித்த ஷெல் ஒன்று திடுக்கிட வைத்தது. 'சரி வசந்தி வெளிக்கிடு போவம்' தோட்டத்தின் மீதிருந்து தனது பார்வையை எடுக்காமலே அரை மனதுடன் கூறினான்.

வீட்டிற்குள் வந்து கையில் அகப்பட்ட உடுப்புக்கள் சிலவற்றையும் சமையல் பாத்திரங்கள் சிலவற்றையும் ஓர் உரப்பையில் கட்டினார்கள். சேமிப்பிலிருந்த சிறு தொகைப் பணத்தையும் எடுத்துக் கொண்டார்கள்.

'சுமதி வாம்மா போவம்' ஷெல்லடிக்குப் பயந்து மேசைக்குக் கீழே ஒழித்திருந்த அவர்களது ஆறு வயது மகள் ஓடி வந்தாள். அவள் கண்களில் பயம் குடிகொண்டிருந்தது. துணியால் சுற்றப்பட்ட ஏதோ ஓர் பொருளை நெஞ்சோடு சேர்த்து அணைத்திருந்தாள்.

ராசன் உரப்பையை சைக்கிள் கரியரில் வைத்துக் கட்டினான். ஷெல் ஒன்று தலைக்கு மேலால் கூவிச் சென்றது. இன்னொரு ஷெல் அவர்களது வீட்டிற்குப் பின்னால் வீழ்ந்து வெடித்தது. அவசர அவசரமாக அவர்களையும் இழுத்துக் கொண்டு வீதிக்கு வந்தான். வீதியில் சாரிசாரியாகச் சென்ற மக்கள் கூட்டத்தோடு அவர்களும் கலந்தார்கள்.



வெய்யில் ஏறத்தொடங்கியது. மீண்டும் ஓர் இடப்பெயர்வு எமது மண்ணில் நிகழ்ந்துகொண்டிருந்தது. பெரியவர் சிறியவர் பேதமின்றி தங்களால் காவக்கூடிய பொருட்களோடு எங்கே போவதென்ற இலக்கில்லாமல் மக்கள் கால்போன போக்கில் சென்றனர்.

'என்னங்க இப்படியே எங்கே போறது' தனக்கு முன்னால் சைக்கிளை உருட்டிச் சென்ற ராசனைப் பார்த்து வசந்தி கேட்டாள்.

'இப்படிப்பார்த்து எங்கேயாவது மரங்களுக்கு கீழே இருப்பம் ஷெல்லடி ஓய்ந்தா வீட்ட போவம்' வெறுப்புடன் கூறினான்.

சைக்கிள் பாரிலிருந்த சுமதி கண்ணுக்கெட்டிய தூரம் வரை வேடிக்கை பார்த்தாள். அந்தப் பொருளை இன்னும் நெஞ்சோடு அணைத்திருந்தாள். தண்ணி விடாய்க்குது என நான்காவது தடவையாக ராசனிடம் கேட்டுவிட்டாள். அவர்களை ஓர் மர நிழலில் விட்டுவிட்டு தண்ணீர் எடுப்பதற்காக ராசன் சென்றான். தாயின் மடியில் தலை வைத்து அலுப்புடன் சுமதி படுத்திருந்தாள். அந்தப் பொருள் அவள் கைகளிலேயே இருந்தது.

மாலையாகியும் ஷெல் சத்தங்கள் ஓய்ந்தபாடில்லை. ராசன் எங்கேயோ கஷ்ரப்பட்டு வாங்கி வந்த பாணுடனும் தேத்தண்ணியுடனும் அன்றைய பொழுது கரைந்தது. ஆங்காங்கே மர நிழல்களிலும் வீதி ஓரங்களிலும் மக்கள் தங்கியிருந்தனர். எல்லோரும் எப்ப ஷெல்லடி ஓயும் வீடுகளுக்குத் திரும்புவம் என்ற ஏக்கத்துடனேயே இருந்தனர்.

அன்றிரவு வசந்தி நித்திரை கொள்ளவில்லை. ராசன் இடைக்கிடை விழிப்பதும் நித்திரை கொள்வதுமாக இருந்தான். மகள் தாயின் மடியிலேயே நித்திரையாகி இருந்தாள். சருகுகளின் மேல் அவள்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

படுத்திருப்பதைப் பார்த்த போது வசந்தியின் கண்களில் நீர் கோத்தது. சருகுக்குள் பாம்பு பூச்சி ஏதும் இருந்தாலும் என்ற பயத்துடனேயே அன்றைய இராப் பொழுது கழிந்தது.

கிழக்கு வெளுத்தது. நெடுங் கேணிக்கு ஆமி வந்திட்டானாம். சண்டை இப்பவும் நடக்குதாம். இப்போதைக்கு அங்கால போறதை நினைச்சுப் பார்க்கேலாது. இங்க எங்கையும் கொட்டிலைக் கிட்டி லைப் போட்டு இருக்க வேண்டியது தான். பலதரப்பட்ட கதைகள் மக்களிடையே உலாவின. என்ன செய்வதென்று தெரியாத நிலையில் மக்கள் அல்லோலகல்லோலப்பட் டனர். ஆங்காங்கே சிறு தடிகளைக் கட்டி சேலைகளை மறைப்பாக்கி உடனடி வீதியோர உறைவிடங்கள் துரிதமாக உருவாகின. சில உடனடி உறைவிடங்களில் அடுப்பு மூட்டி சமையலும் தொடங்கியிருந்தது.

ராசனும் தானிருந்த மர நிழலின் கீழ் இருந்த சருகுகளை கூட்டி அகற்றினான். நீளமான தடிகளை வெட்டி வந்தான். மரத்தின் அடியை மையமாக வைத்து சுற்றிவர தடி களை சதுரமாகக் கட்டினான். கொண்டுவந்திருந்த வசந்தியின் சேலைகள் இரண்டை இணைத்து தடிகளைச் சுற்றிக் கட்டி மறைப் பாக்கினான்.

வசந்தி மூன்று கல்லை வைத்து அடுப்பு மூட்டி தேநீர் தயாரித்தாள். இடைக்கிடை அவளுக்கு வீட்டு நினைப்பும் தோட்டங்களின் நினைப் பும் வந்து கண்களில் நீர்முட்டியது. சேலைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

அவர்கள் வேலை செய்வதையே சுமதி வேடிக்கை பார்த்த வண்ணம் இருந்தாள். அவள் கொண்டுவந்த அந்தப் பொருள் அவள் மடியினி லேயே இருந்தது.

'சுமதி வாங்கோ தேத்தண்ணி குடிப்பம்.... நீங்களும் வாங்கோ' வசந்தி கூப்பிட்டாள்.

எல்லோரும் தேநீர் குடித்தார்கள். அதன் பின் வசந்தி இரவு மிஞ்சி யிருந்த பாணை அவிக்கத் தொடங்கி னாள். ராசன் உறைவிடம் கட்டும் வேலையைத் தொடர்ந்தான்.

கிபீர் விமானங்கள் தலைக்கு



மேலால் பேரிரைச்சலுடன் பறந்து போனது. வசந்தி ஓடி வந்து மகளைத் தூக்கினாள். அச் சிறுமி கிபீர் விமா னங்களையே உற்று நோக்கினாள். அவள் கொண்டுவந்த அப் பொருள் அவள் நெஞ்சோடு இப்பவும் இருந் தது. விமானங்கள் எங்கோ தூரத் தில் குண்டுகளைத் துப்பிவிட்டு மேலெழுந்தது. ஷெல் சத்தங்கள் தொடர்ந்து கேட்டவண்ணமே இருந் தது.

'அப்பாடா இப்போதைக்கு ஒரு மாதிரி இதுக்குள்ள இருக்கலாம்' உறைவிடம் அமைத்த திருப்தியுடன் ராசன் கூறினான்.

'அப்பா வீடு கட்டியாச்சோ' அவர்களின் மகள் ஆவலுடன் கேட்டாள். 'ஓம் இது இப்போதைக்கு காணும்' வசந்தி கூறினாள்.

அவசர அவசரமாக சுமதி தான் வீட்டிலிருந்து வரும்போது கொண்டு வந்த அப்பொருளைச் சுற்றியிருந்த துணிகளை அகற்றினாள்.

'அப்பா! இது எங்கட வீட்டுக்கு நடுவில மணிக்கூட்டுக்கு மேலே கொழுவி இருந்த படம்' என்று சொன்னபடியே சுமதி சட்டமிடப் பட்ட அந்தப் படத்தை வெளியில் எடுத்தாள்.

'எங்கட தலைவர் மாமா எங்க எங்களோடு இருக்கும் வரைக்கும் ஆமிக்காரன் எங்களை ஒண்டும் செய்யமுடியாது' என்று கூறிய படியே அப்புதிய உறைவிடத்தில் நடுவே இருந்த மரத்தில் தேசியத் தலைவர் அவர்களின் படத்தை அச்சிறுமி கொழுவினாள்.

தலைக்கு மேலே கிபீர் விமானங் கள் பறந்த சென்றன. அச்சிறுமி தேசியத் தலைவரை உற்றுப்பார்த்த படி அவ்விடத்திலேயே நின்றாள்.

முற்றும்

## இசைத்தட்டு வெளியீடு

தமிழீழ விடுதலைப் புலிக ளின் சுவிஸ் பணியகத்தி னால் ஒகஸ்ட் 1998 வெளியிடப்பட்ட இந்த **விடுதலைவரும் நாள்** என்ற இசைத் தட்டின் பாடல்களை கவிஞர் காசி ஆனந்தன், டாக்டர்.விமுனாமூர்த்தி, சி.ஆர்.பாஸ்கரன் ஆகியோர் யாத்திருந்தனர்.சி.ஆர். பாஸ்கரன் அவர்களே இசையமைத்துள்ளார்.






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# யதார்த்தவாதம் என்றால் என்ன?

சமுதாய இயக்கத்தின் விதி முறைகளைக் கண்டறிந்து சொன்ன மார்க்ஸ் அதே நேரத்தில் அழகிற்கென்று சில தனி விதி முறைகள் (LAWS OF BEAUTY) இருக்கின்றன என்பதையும் சுட்டிக் காட்டினர். ஆனால் இந்த "அழகின் விதிமுறைகள்" பற்றி விரிவாக எழுதவோ தனி நூல் படைக்கவோ மார்க்ஸிற்கும் சரி ஏங்கெல்ஸிற்கும் சரி பல்வேறு புரட்சிகரப் பணிகளுக்கு மத்தியில் போதிய அவகாசம் கிடைக்கவில்லை போலும். எனவே, இதுகுறித்த அவர்களுடைய கருத்துக்களை எந்தவொரு குறிப்பிட்ட நூலிலிருந்தும் நம்மால் பெறமுடியவில்லை.

எனினும் பல கலை– இலக்கிய வாதிகளுக்கு அவர்கள் எழுதியுள்ள கடிதங்களிலிருந்து அவர்களின் சிந்தனை ஓட்டங்களை பெருமளவு நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. அந்தளவுக்கு அந்தக் கடிதங்கள் வெறும் சேமநல விசாரிப்புகளாக இல்லாமல் அல்லது வெறும் பாராட்டுகளாக இல்லாமல் விமர்சன பூர்வமாக அழகியல் ஆய்வுரைகளாகத் திகழ்கின்றன.

கலை –இலக்கியம் என்பது மனித வாழ்வினை மீண்டும் சிருஷ்டித்துக் காட்டுவதுதான். ஆனால் வாழ்வு எனச் சொல்லும்போது இல்லாத ஒன்றை இருப்பதாகவும் பொய்யான ஒன்றை மெய்யான ஒன்றாகவும் படைத்துக் காட்டக்கூடிய ஆபத்தும் இங்கே வருகிறது. அல்லது எடுத்துக் கொண்ட வாழ்க்கை அம்சத்தின் முழுத்தன்மையையும் காட்டிவிடாமல் போய்விடவும் கூடும். இப்படியெல்லாம் இல்லாமல் கலை– இலக்கியமானது யதார்த்தபூர்வமானதாக இருக்கவேண்டுமென்றார்கள் மார்க்ஸும் ஏங்கெல்ஸும். "யதார்த்த வாதம்" என்பதற்கு ஓர் அருமையான விளக்கமும் அளித்திருக்கிறார் ஏங்கெல்ஸ்.

## "நகரத்துப் பெண்"

மார்க்ரட் ஹார்க்னஸ் எனும் பெண்மணி "நகரத்துப் பெண்" (CITY GIRL) எனும் நாவலினை எழுதியிருந்தார். அதனை ஏங்கெல்ஸுக்கும் அனுப்பியிருந்தார். அதனைப் படித்துப் பார்த்துவிட்டு அவருக்கு ஒரு பதில் எழுதினார் ஏங்கெல்ஸ். அதில் இந்தக் கதை யதார்த்தபூர்வ உண்மையினை (REALISTIC TRUTH) சொல்கிறது என்பது மட்டுமல்லாது ஓர் உண்மையான கலைஞரின் மனத்துணிவையும் காட்டுகிறது என்று குறிப்பிட்டார்.

ஆம்! சத்தியத்தை எழுதத் துணிச்சல் வேண்டியிருக்கிறது. ஏகாதிபத்திய கொடுங்கோல் ஆட்சிக்காலத்தில் உண்மையைப் பாட பாரதிக்குத்தான் துணிச்சல் இருந்தது. வேறு எந்தவொரு கவிஞனுக்கும் அன்று அது இல்லையே!

எனவே! அந்த மனத்துணிவு இருந்தமைக்காக ஹார்க்னஸ்–ஐ பாராட்டுகிறார். அத்தோடு அந்த நாவலில் "உண்மை சொல்லப்பட்டிருப்பதையும் பாராட்டுகிறார்" ஆனால் விஷயம் அவ்வளவுதானா? வாழ்வினை இலக்கிய ரீதியாக மீண்டும் படைத்துக் காட்டுவது என்றால் உண்மையை இதுதான் உண்மை எனப் பிரகடனப்படுத்துவது அல்ல. மாறாக இரத்தமும் சதையுமுள்ள உண்மையான மனிதர்களை உருவாக்கி உண்மையான வாழ்க்கை நடப்புகளைச் சித்தரித்து அதன் மூலம் உண்மையைச் சொல்வதாகும் என ஏங்கெல்ஸ் எழுதினார்.

விமர்சனம் என்று நான் கூற வேண்டியது எதுவென்றால் கதை போதியளவிற்கு யதார்த்தபூர்வமாக இல்லை என்பதுதான். என்னைப் பொறுத்தவரையில் யதார்த்தவாதம் (REALISM) என்பது உண்மையான விபரங்களைத் தருவது மட்டுமல்லாது வகைமாதிரியான (TYPICAL) சூழ்நிலைக்கு மத்தியில் வகைமாதிரியான கதாபாத்திரங்கள் மறுசிருஷ்டி செய்வதாகும். நீங்கள் படைத்துள்ள பாத்திரங்கள் போதியளவிற்கு வகைமாதிரியானவையாக உள்ளன. ஆனால் அவர்களைச் சூழ்ந்துள்ள, அவர்களை இயக்குவிக்கின்ற சூழல்கள் அந்தளவிற்கு வகைமாதிரியானவையாக இல்லை. நகர்த்துப் பெண்ணில் தொழிலாளர் வர்க்கமானது தனக்குத் தானே உதவி செய்ய இயலாத, அப்படிச் செய்யக்கூட முயற்சி செய்யாத கையறு நிலையிலுள்ள ஒரு கூட்டமாக சித்தரிக்கப்பட்டுள்ளது. தாங்கொணாத் துன்பத்திலிருந்து அவர்களைக் கைதூக்கிவிடும் முயற்சிகளையெல்லாம் அந்த மக்களுக்கு மேலிருந்து வருகின்றனவே ஒழிய அவர்களுக்கு மத்தியிலிருந்து வரவில்லை. செயின்ட் சைமனும் ரோபட் ஓவனும் வாழ்ந்த அந்த 1800 அல்லது 1810–ல் கதை நடப்பதாக இருந்தால் அது சரிதான். ஆனால் 1887–ல் தீவிரமான பாட்டாளி வர்க்கப் போராட்டங்கள் பலவற்றிலும் கடந்த 50 ஆண்டுகாலமாகப் பங்குகொண்ட ஒருவருக்கு இது யதார்த்தபூர்வமானதாக இருக்க முடியாது. தங்களைச் சூழ்ந்துள்ள ஒடுக்குமுறை இயந்திரத்திற்கு எதிராகத் தொழிலாளர் வர்க்கம் கண்ட



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

னம் முழங்குவதும் தாங்களும் மனிதப் பிறவிகள்தான் எனும் நிலையினை மீட்டுக்கொள்ள கொந்தளிக்க கிளம்பி அரை உணர்வு பூர்வமாகவோ அல்லது முழு உணர்வுபூர்வமாகவோ அவர்கள் முயலுவதும் வரலாற்றின் அங்கங்களாக உள்ளன. எனவே யதார்த்தபூர்வ உலகிலும் நாங்கள் இடம்பெறவேண்டும் எனக் கேட்க அவற்றிற்கு உரிமை உண்டு.

வகைமாதிரியான பாத்திரங்கள், வகைமாதிரியான சூழ்நிலைகள் என ஏங்கெல்ஸ் கூறுவது உருவாக்கப்படும் கதை மாந்தரும் சித்தரிக்கப்படும் சூழ்நிலைகளும் மெய்யான வாழ்வில் நடமாடும் அந்தவகை மனிதர்களை நிகழும் அந்தவகைச் சூழ்நிலைகளைப் பிரதிநிதித்துவப் படுத்துபவையாக இருக்கவேண்டும் என்பதுதான்.

நகரத்துப் பெண் எனும் இந்த நாவலில் மக்கள் தொகுதியில் ஒரு பிரிவாகிய தொழிலாளர்களைச் சித்தரிக்க முயன்றிருக்கிறார் ஹார்க்னஸ். அப்படியென்றால் அந்தவகை மனிதர்களை அப்படியே நமது மனக் கண்முன் கொண்டுவரக்கூடிய கதா பாத்திரங்களைத்தானே படைப்பாளி உருவாக்கவேண்டும். இன்றைக்கு ஒரு எழுத்தாளர் சைக்கிள் ரிக்ஷாக்காரர்களின் வாழ்வினை மையமாக வைத்து கதை எழுதுகிறார் என்றால் அவரது நாவலில் வரும் ரிக்ஷாக்காரர் நாம் தினசரி கண்டுகொண்டிருக்கிற ரிக்ஷாக்காரர்களை நினைவுபடுத்த வேண்டாமா? அதுதானே இலக்கிய சிருஷ்டியின் ஒரு வெற்றியாக இருக்க முடியும். இது விஷயத்தில் சரிவரச் செய்திருக்கிறார்— அன்றைய தொழிலாளர் வர்க்கத்தினை மனத்திரையில் ஓடவிடுவதில் வெற்றிபெற்றிருக்கிறார் ஹார்க்னஸ் எனப் பாராட்டுகிறார் ஏங்கெல்ஸ்.

ஆனால் அதே நேரத்தில் அந்தக் கதை மாந்தர்கள் – இயங்குகிற அந்தக் களம் அவர்களை இயக்குகின்ற அந்தச் சூழல்கள் அவையும் யதார்த்தபூர்வமானதாக இருக்கவேண்டாமா? எந்தக் காலத்தில் கதை நடப்பதாகச் சொல்லுகிறோமோ அந்தக் காலத்தை அப்படியே நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்த வேண்டாமா? கேட்கிறார் ஏங்கெல்ஸ்.

### 1848 புரட்சிகள்

கதை 1800–ல் அல்லது 1810–ல் நடக்கவில்லை. அன்று தொழிலாளர்கள் போராட்டக் களத்தில் குதிக்கவில்லை. ஆலையில் இட்ட கரும்பாய் பிழியப்பட்ட போதிலும் வேதனைப் பெருமூச்சுத்தான் விட்டார்களே ஒழிய கொடிபிடித்துத் தெருவில் இறங்கவில்லை. இவர்களது துன்பம் கண்டு செயின்ட் சைமன், றோபட் ஓவன் போன்ற கற்பனாவாத சோஷலிஸ்டுக்களில் சில மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர் அவ்வளவுதான். இதுதான் 19–ம் நூற்றாண்டின் துவக்க நிலை. ஆனால் விரைவிலேயே போராட்ட அலை எழுந்தது. குறிப்பாக 1848–ல் ஐரோப்பாக் கண்டத்தின் பல பகுதிகளில் தொழிலாளர் வர்க்கத்தின் சங்கநாதம் கேட்டது. "1848–49 புரட்சிகள்" என்றே அந்தக் காலகட்டத்தை வர்ணிப்பார்கள். இப்படியொரு திருப்புமுனை நிகழ்ச்சி பிறகு அதைத் தொடர்ந்து பல போராட்டங்கள் வெடித்தபிறகு அந்த அம்சத்தை 1887–ல் நடக்கும் கதையில் கொண்டுவரவில்லையென்றால் அது எப்படி யதார்த்தபூர்வமானதாக இருக்கும். இதுதான் ஏங்கெல்ஸ் எழுப்பியிருக்கும் கேள்வி.

யதார்த்தபூர்வமான சூழல்கள்! அவற்றில் இயங்கும் யதார்த்தபூர்வமான மாந்தர்கள்!! ஒரு படைப்பின் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதில் இவற்றிற்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு. இதனை அன்றைக்கே எடுத்துக்காட்டிய பெருமை ஏங்கெல்ஸுக்கு உண்டு.

### கல்கியின் அலைஓசை

தமிழ் இலக்கிய உலகிற்கு வாருங்கள். இங்கேயே நாம் உதாரணங்களைத் தரமுடியும்.

கல்கியின் நாவல் "அலைஓசை" 1931–ல் இருந்து 1948 வரையிலான தேசிய நிகழ்சிகளைப் பின்புலமாகக் கொண்ட பெருங்கதை. பீகார் பூகம்பத்திலிருந்து காந்திஜி படுகொலை வரை பல நிகழ்ச்சிகள் வரும். அன்று எழுந்த சோஷலிஸ சிந்தனைகள், அதற்கு ஏற்பட்ட எதிர்ப்புகளும் வரும் வகுப்புவாதத் தீயிலே மனித உள்ளங்கள் வெந்து சாகும் வேதனை ஒலி வரும். இது ஒரு வரவேற்கத்தக்க அம்சம்.

ஆனால் இவையெல்லாம் ஒரு முறையான முழுமையான யதார்த்த பூர்வ பின்புலமாக வராது அந்த சுதந்திர போராட்டக் காலத்தில் வாழ்ந்த மனிதர்களாகவும் பல கதை மாந்தர்கள் இருக்கமாட்டார்கள்.

தாரிணியார் பெற்ற பெண்? துரைசாமி ஐயர் என்ன ஆனார்? கத்தியோடு அலையும் ரமணியின் பின்னால் உள்ள மர்மம் என்ன? ரஜனியூர் சமஸ்தானம்! ரத்னகாரம்? குழந்தை மாற்றம்! தாரணி சீதாவின் அக்கா! இப்படி மர்மக் கதையாக நாவல் வருகிறது.

ஆசிரியர் கல்கியின் சமூக நாவல்களில் ஆழமில்லை புதுப்புது உத்திகளைக் கையாளும் முயற்சிகள் இல்லை என்று திறனாய்வாளர்கள் சிலர் கருதுகின்றனர். இதனை நேர்மையான ஆய்வுரை என்றே ஒப்புக் கொள்ள வேண்டும். கல்கியின் சமூகப் புதினங்கள் பலவற்றில் காணப்படும் மற்றொரு குறை துப்பறியும் கதை போன்ற திருப்பங்களைப் பெறுவதாகும்.

ஏன் இப்படி கல்கியின் சமூக நாவல்களில் ஆழமில்லாமல் போனது? ஏன் அவரது சமூகக் கதைகள் துப்பறியும் கதைகளாக ஆங்காங்கே மாறுகின்றன.

காரணம் இதுதான்— எடுத்துக் கொண்ட காலச்சூழலினை யதார்த்த பூர்வமாகச் சித்தரிக்கவும் அந்தச் சூழலில் இயங்கக்கூடிய உண்மையான மாந்தர்களைப் படைத்துக் காட்டவும் கல்கி முன்வராததுதான். அல்லது அப்படிப் படைக்க அவரால் முடியாமல் போனதுதான். அதனால்தான் ஒரு சிறந்த சமூக – சரித்திர நவீனமாக மலர்ந்திருக்க வேண்டிய "அலை ஓசை" அநியாயமாய் ஒரு மர்ம துப்பறியும் கதை போல வளர்ந்து முடிந்துபோனது!

★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சம்புவெளி

## ஓர் இயற்கை வனப்பு



பரந்து விரிந்த உப்புவெளியாகக் காட்சி தரும் சம்புவெளி இயற்கை எழில் கொஞ்சும் தமிழீழத்தின் ஓர் பிரதேசம். பருவ காலங்கள் இரண்டிற்கும் உருவ மாற்றமடையும் சம்புவெளி மாரி காலத்தில் மக்களை ஈர்த்து கண்களுக்கு பசுமையை வாரி வழங்குகின்றது; கோடை காலத்தே வாடை வீசும் காற்று உடலிற்கு இதம் தருகிறது. சம்பு புற்களால் நிறைந்திருந்த பசும் புற்தரை மனித ஆதிக்கத்தால் அழியுண்டு வெறும் உப்பு வெளியானமை இதன் சோக வரலாறே. வட தமிழீழத்தின் பூநகரிப் பிரதேசத்தில் பூநகரி – மன்னார் நெடுஞ்சாலையின் ஓரமாக பல்லவராயன் கட்டிற்கும் கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு போன்ற குக்கிராமங்கட்கும் இடையில் ஏறத்தாழ 5 கிலோ மீற்றர்களுக்கு நீண்டு கிடக்கிறது.

வெளியில் நின்று பார்க்கும் போது சுற்றிவர பச்சையரணாகக் காடு காட்சிதரும். இடையிடையே முட் புதர்களும் சேற்று நிலங்களும் நீர்க் குட்டைகளும் காணப்படும். அவற்றினூடே தவழ்ந்து செல்லும் நீரோட்டங்கள் குட்டைகளை அரவணைத்துச் செல்லும் அழகோ அழகுதான். வெளியின் மத்தி மேட்டுப் பகுதியாக உள்ளது. இங்கு வானளாவ நிமிர்ந்த பனைகளும் நிலைத்தை மூடி நிற்கும் பற்றைகளும் அருமை. மாரியில் ஓர் தீவு போலக் காட்சி தரும் இப் பகுதியில் ஐயனார் எழுந்தருளியுள்ளார். வெளியே ஊடறுத்துச் செல்லும் வீதியாலே பிரயாணம் செய்வோர் ஐயனாரை வழிபட்டே செல்வர். தமது பிரயாணத்திற்கு அவரே துணை எனக் கருதுகின்றனர். அருள்மிக்க ஐயனார் கோவிலை அண்டிய பகுதியில் ஒரு சில குடிகள் வாழ்ந்துள்ளன. அவர்களே பனைகளை அங்கே உருவாக்கியுள்ளனர். யானைகளின் கடவையாகவும் வசதிகள் குறைந்த பகுதியாகவும் காணப்பட்டமையால் அவர்கள் பின்பு அவ்விடத்தைவிட்டு அகன்றுவிட்டதாகக் கூறுகின்றனர். தற்போது யானைகளின் நடமாட்டம் அருகிவிட்ட போதும் திடீர் திடீரென வரும் யானைக் கூட்டங்களினால் வீதியால் இராப் பயணம் செய்வதை மக்கள் தவிர்த்தே வருகின்றனர்.

வானம் பொழியும் காலம் இந்த வெளி சிரிக்கும். ஆங்காங்கே தேங்கி நிற்கும் நீர்த் தேக்கங்களைச் சுற்றி அழகிய பசும் புற்கள் கம்பளம் விரித்திருக்க அதன் பின்னே ஓரிரு மரஞ் செடிகள் குளிர்ந்து நிற்கும். நீலத் தடாகத்தினுள்ளே பல வர்ணங்களை உடைய பல்லினப் பறவைகள் நீந்தி முகிழ்ந்து வானில் வட்டமிட்டுத் திரியும். அழகு வட்டம் விட்டு பிரிய மனமின்றி மீண்டும் தடாகம் நாடும் நாரைகள், கொக்குகள், சிறு குருவிகள் சில இங்கு தினமும் அலைந்து திரிகின்றன. ஆனால் புதுப் புதுப் பறவை இனங்களை மாரி காலத்தில் காண முடிகிறது. பருவகாலச் சுற்றுப் பறவைகளின் ஓர் மையமாகத் திகழ்கிறது போலும்.

வெளியின் வடக்கு, தெற்குப் பகுதிகளில் நீர் பாரிய தேக்கமாகக் காணப்பட்ட போதிலும் கோடையில் இவை அனைத்துமே வற்றி விடுகின்றன. தெற்குப் பகுதியினூடு பாய்ந்து செல்லும் நீர் பிருந்தாவனம் எனும் பகுதியினூடு கடலுடன் சங்கமிக்கிறது. கடல் தொட்டு நீர் ஏரிபோல் நீண்டு கிடக்கும் இந் நீர்த் தேக்கம் ஒவ்வொரு மாரியும் பிறந்து கோடையில் மடிகிறது. இங்கு உப்பு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நிலவு தூங்கும் நேரம்

**-சுதந்திரன்-**

நிலவு தூங்கும் நேரம் தூக்கம்
விழிகளோடு முரண்பட்டு
வெளிநடப்புச் செய்யும்
தோளில் கொழுவிய உணவுப்
பையுடன்
எனக்கு சிறு முரண்பாடு
பசியும் தூக்கமும்
சந்தோஷங்களையும்
தனிமை துரத்திக் கொண்டே
இருக்கும்
என் இலட்சிய தாகம் செயல்
வடிவமாகி
பகை முகாமின் வடிவம்
என் மனதில் கனத்தைத் தரும்
புதர்களோடு மறைந்து தடைகளை
தேடும் பணி அப்போது இறப்பு
மட்டும்
சில சென்ரி மீற்றரில் காத்துக் கிடக்கும்
அப்போது துணிவில்லை என்றால்
இரண்டும் இரண்டும்
ஆறு எனத் தப்புக் கணக்குப் போடும்
மீண்டும் வெற்றியுடன் வந்தால்
படை முகாமின் தடைகள் சிதறும்
எம் படையணி நகரும்
பகைவனின் தலைகள் உருளும்
புனித பூமியை குருதி நனைக்கும்
எம் வீரத்தினைப் புகழ்ந்து
தமிழர் கூட்டம் மகிழ்வுற்றுத் திரியும்
எம் வீரச் செயல் கண்டு
உலகமே எம்மை உற்று நோக்கும்
கவிஞனின் பேனாவுக்கு
அன்றுதான் சிறை உடைப்பு—

---

விளைகின்றது.

தொகைதொகையாகச் சம்புப் புற்கள் குவிந்திருந்ததை அயற் கிராம மக்கள் தற்போது நினைவு கூருகின்றனர். நாமமே இல்லாது அழிந்து போன இவை கூரைகளை வேய்வதற்கும் மேலும் பாய் போன்றவற்றிற்கும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இவ் வெளிக்கு சம்புவெளி என்று நாமம்வரக் காரணமே இச் சம்புப் புற்கள் தானாம். அழகிய சொர்க்கமாக காட்சி தரும் இப் பகுதி நீர் வற்றிச் சேறாகும் காலத்தில் துர்நாற்றம் வீசுவது கவலைக்கிடமானதே. உண்மையில் இந் நிலப் பிரதேசம் சேற்று நிலமே. ஆனால் கோடையில் நீர் எல்லாம் ஆவியாகி விட வெறும் தரவையாக விளங்கும். இத்தரவையினூடு மக்கள் பிரயாணம் செய்யவும் முடிகிறது. காற்று பலமாக வீசும் காலத்தில் இவ் வெளியைக் கடப்பதே பெருங் காரியமாகும்.

சிறு துறைமுக வசதி கொண்ட வலைப்பாடு கடற்பகுதியின் மீன் வளமும், மணற்பாங்கான கிராஞ்சிப் பகுதியின் தென்னை, பனை வளமும் இதனூடான பிரயாணத்தை அதிகரிப்பன எனலாம். மேலும் பூநகரி நகர் இராணுவ ஆக்கிரமிப்பிற்கு உள்ளான பின் ஜெயபுரம் பகுதி பூநகரிப் பிரதேச செயற்பாட்டு மையமாக மாறியமையாலும் இவ் வீதியின் பயன்பாடு அதிகமானது.

சம்பு வெளியரங்கிலே சூரியோதயக் காட்சி, சூரிய அஸ்தமனக் காட்சி மனதை வருடி இன்ப ஆறை ஓடச் செய்யும் அழகு வாய்ந்தன. தினம் தோறும் இதனூடு பயணிப்போர் இயற்கை அன்னையின் எண்ணற்ற எழிற்கோலங்களைக் கண்டு களிப்புறுகின்றனர். பிரயாணக்களைகழையும் வல்லமை வாய்ந்த பொலிவுடன் சம்புவெளி எனும் வம்புமிகு அழகுவெளியில் இயற்கை அன்னை குடியிருக்கிறாள்.

**நிலா**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




www.tamileelamarchive.com